# அத்தியாயம் 8

# நிதியியல்துறை அபிவிருத்திகளும் முறைமை உறுதித்தன்மையும்

## 8.1 பொதுநோக்கு

**நிதியியல் துறை தொடர்ந்தும் வலுவாக வளர்ச்சியடைந்ததுடன் நிதியியல் முறைமை வெளிநாட்டு அதிர்வுகள் மற்றும் சவால்மிக்க உள்நாட்டு பேரண்ட பொருளாதார நிலைப்பாடுகளுக்கு முகம் கொடுத்து தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கும் தன்மையைக் கொண்டிருந்தது.** முக்கிய நிதியியல் நிறுவனங்கள் ஏதாவது அழுத்தம் மிக்க சூழலினை முகம் கொடுப்பதற்கு அவர்களது இயலளவினை திரட்சியடையச் செய்கின்ற தொடர்ச்சியான இலாபத்தன்மை, வலுவான மூலதனவாக்கம், சொத்துக்களில் தரத்திலான மேம்பாடு மற்றும் உறுதியான இடர்நேர்வு முகாமைத்துவம் என்பனவற்றினூடாக தமது நிதியியல் ஆற்றல்மிக்க தன்மையினை பேணிக் கொண்டன. பல்வேறு புதிய முன்மதியுடைய மற்றும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தும் அதேவேளை முறைசார்ந்த முக்கியமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை உயர்ந்த கிடைப்பனவு மற்றும் பாதுகாப்புடன் தொழிற்படுத்தியதன் மூலம் நிதியியல் முறைமையின் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை போன்றவை மேலும் வலுப்படுத்தப்பட்டன. எனவே, இடர்நேர்வுகளை குறைப்பதற்காகவும் பாதிப்படையக் கூடிய தன்மைக்கு முகம் கொடுப்பதற்காகவும் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிமுறைகளின் காரணமாக நிதியியல் முறைமைகளான அண்மிய கால இடர்நேர்வு முகாமை செய்யப்படக்கூடியதாக காணப்படுவதுடன் நிதியியல் முறைமையின் உறுதித்தன்மைக்கான தோற்றப்பாடு சாதகமாகவே காணப்படுகின்றது.

**நிதியியல் பணிகள் துறை பொருளாதார செயற்பாட்டின் தொடர்ச்சியான விரிவாக்கத்திற்கு ஆதரவளித்தது.** வங்கிகள், நிதி மற்றும் குத்தகைக் கம்பனிகள், காப்புறுதி கம்பனிகள், ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்கள், முதனிலை வணிகர்கள், கிராமிய வங்கிகள் மற்றும் நுண்பாக நிதியியல் நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள் போன்ற அனைத்து முக்கிய வகையான நிதியியல் நிறுவனங்களது செயற்பாடுகள் இவ்வாண்டில் விரிவடைந்தன. வங்கியியல் துறை அதிகரித்த சொத்து அடிப்படை, கடன்கள் மற்றும் முற்பணங்களது சொத்துப்பட்டியல், முதலீடுகள் மற்றும் வைப்பு திரட்சி என்பவற்றுடன் கூடிய வலுவான



வளர்ச்சியினை அனுபவித்தன. உயர்ந்த வட்டி வீதங்கள் மற்றும் இறுக்கமான நாணயக் கொள்கை போன்றவற்றின் செல்வாக்கினால் வங்கியின் கடன் வழங்கல் வளர்ச்சி கடந்த ஆண்டினைவிட மிகவும் மந்தடைந்ததாகவே காணப்பட்டது. வங்கியியல் துறை தனது இலாபத்தன்மை மற்றும் மூலதன போதுமாந்தன்மை மட்டங்களை 2007இல் தக்க வைத்துக் கொண்டது. புதிய திட்டங்கள் மற்றும் இணையத்தள மற்றும் கையடக்கத் தொலைபேசி வங்கியியல் போன்ற தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள் மற்றும் பணிகளது அறிமுகத்துடன் நிதியியல் பொருட்கள் மற்றும் பணிகள் மற்றும் விநியோக வழிகள் விரிவடைந்தது. அட்டைகளை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு முறை மற்றும் தன்னியக்க கூற்றுப் பொறிகளது வசதிகள் போன்றவற்றை நோக்கிய குறிப்பிடத்தக்களவான அசைவு காணப்பட்டது. நிதி மற்றும் குத்தகைக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட நிதியியல் வசதிகள் கடந்த ஆண்டினைவிட மெதுவான அளவில் வள ர்ச்சியடைந்தாலும் அவை தமது கிளை வலையமைப்பினை விரிவாக்கின. ஒரு குறிப்பிடத்தக்கதான பண்பாக வரி நன்மையினை சாதகமாக்கி நிதியியல் குத்தகை வசதிகளுடன் ஒப்பிடுமிடத்து வாடகை கொள்வனவு வசதிகளது அதிகரிப்பு காணப்படுகின்றது. உயர்ந்த வட்டிவீத சூழலில் நிதிச் செலவிலான அதிகரிப்பு மற்றும் வட்டிவீத அளவுகளிலான வீழ்ச்சி போன்றவற்றின் காரணத்தினால் இந்தத் துறையில் இலாபத்தன்மை சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. இந்தத் துறைக்கான அதிகரித்த மூலதனமாக்கல் இத்தகைய அழுத்தங்களுக்கெதிரான தாக்கத்தினை குறைக்கும். காப்புறுதித்துறை ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் இரண்டிலும் வரவேற்கத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவு செய்து வலுவான வளர்ச்சியினை எதிர்கொண்டது. பொதுக் காப்புறுதிக்கான கடன் தீராற்றல் தேவைப்பாட்டு பிரயோகத்துடன் அதன் இலாபத்தன்மையும் பேணப்பட்டதுடன் இத்துறையின் மூலதன மட்டங்கள் மேம்பாடடைந்தது. முக்கிய ஓய்வுகால நல நிதியங்களான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றின் அங்கத்துவத்தின் அதிகரிப்புடன் அவற்றின் சொத்துக்கள் மற்றும் முதலீட்டு சொத்துப்பட்டியல்கள் அதிகரித்தன. இவ்வாண்டில் ஒரு புதிய முடிவுறுத்தப்பட்ட இறுதியான வருமான நிதியம் வருவாய் நிதியம் ஸ்தாபிக்கப்பட்டதுடன் நம்பிக்கை கூறுகள் துறையில் ஒரு வளர்ச்சி நிலவியது. வேளாண்மைத்துறை மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மை துறைக்கான புதிய மற்றும் அதிகரித்த வசதிகள் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்டதுடன் நிதியியல் கிடைப்பனவு மேலும் உயர்த்தப்பட்டது.

**வங்கி மற்றும் வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்கள் இரண்டினதும் ஆற்றல்மிக்க தன்மையை மேம்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு பணிப்புரைகள் மற்றும் வழிமுறைகளினால் நிதியியல் துறையினை கட்டுப்படுத்துகின்ற மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டது.** இணங்குவிப்பினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையிலிந்து இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வைக்கு நகரும் தன்மையும் காணப்பட்டது. 2008 இலிருந்து வங்கிகளுக்கான பாசல் II மூலதன போதுமாந்தன்மை கட்டமைப்பினை நடைமுறைப் படுத்துவதற்கான ஆயத்த வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. வங்கியின் மூலதனத்தை அதன் இடர்நேர்விற்கு ஒத்திசைவாக்குதல் மற்றும் கொடுகடன், சந்தை மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கு மேலும் பரந்துபட்ட மூலதன உள்ளடக்கத்தினை வழங்குதல் போன்றவற்றின் மூலம் பாசல் II இனை பின்பற்றுவது வங்கிகளது ஆற்றல்மிக்கதன்மையினையும் இடர்நேர்வு முகாமைத்துவத்தினையும் மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. கம்பனி ஆளுகை தொடர்பான ஒரு பணிப்புரை மத்திய வங்கியினால் வங்கிகளுக்கும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கானதொரு கட்டாய விதிமுறை பிணையங்கள் பரிவர்த்தன ஆணைக்குழுவாலும் வழங்கப்பட்டது. அட்டையினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு கருவிகளுக்கான ஒழுங்கு விதிகளும் வழங்கப்பட்டதுடன் இத்தகைய பணிகளினை வழங்குபவர்களுக்கான முன்மதியுடைய தேவைப்பாடுகளினை குறிப்பிடுகின்ற பணிப்புரையொன்று வரையப்பட்டுள்ளதுடன் அவை விரைவில் வழங்கப்படும். பணம் தூயதாக்கலுக்கெதிரான நடவடிக்கையினை வலுப்படுத்துவதற்காக 'உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள்' மற்றும் வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் தொடர்பிலான வழிகாட்டல்கள் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன. பொருத்தமான ஒழுங்குபடுத்தல் மற்றும் முன்மதியுடைய பாதுகாப்ப போன்றவற்றிற்குட்பட்டு முதனிலை வணிகர்களது செயற்பாடுகளை பன்முகப்படுத்துவதற்கான முன்மொழிவுகளுக்கு 2007இல் அனுமதியளிக்கப்பட்டன.

**நிதியியல் முறைமைக்கு ஆதரவளிக்கின்ற சட்டக் கட்டமைப்பு வலுவாக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டது.** சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் தமது நிதியிடல் மூலங்களினை பரந்துபட்டதாக்குவதற்காக படுகடன் பிணையங்களினை வழங்குவதனூடாக பொதுமக்களிடமிருந்து நிதியினை திரட்டிக் கொள்வதனை இயலச் செய்வதற்காக நிதிக் குத்தகைச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, நிதிக் கம்பனிகள் தொடர்பான மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தல் மற்றும் புலனாய்வுகளை வலுப்படுத்துவதற்காக நிதிக்கம்பனிகள் சட்டத்திற்கான திருத்தங்கள் வரையப்பட்டன. நுண்பாக நிதியியல் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கான ஒரு புதிய சட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது. நிதி பிணையங்கள் பரிவர்த்தன ஆணைக்குழுவின் பரப்பெல்லைக்குள் கொண்டு வருவதற்காக பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டமும் திருத்தியமைக்கப்பட்டது. முன்மதியுடைய மேற்பார்வையினை மேம்படுத்துவதற்காகவும் வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களை காப்புறுதி கருவிகளினை விநியோகிப்பதற்கான முகவர்களாக நியமிப்பதற்கு அனுமதியளிப்பதற்காக காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டமும் திருத்தியமைக்கப்பட்டது. கொடுகடன் தகவல் பணியகத்தில் பணிகளினை மேலும் பரவலான பாவனையாளர் குழுவிற்கு பன்முகப்படுத்துவதற்காகவும் பெறுமதிசேர் பணிகளினை வழங்குவதற்காகவும் கொடுகடன் தகவல் பணியகச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் ஆற்றல்மிக்கதன்மை மற்றும் நிதியியல் முறைமையின்

உறுதித்தன்மை போன்றவற்றினை மேம்படுத்துவதற்காக வியாபார தொடர்ச்சி நிகழ்ச்சி திட்டத்தின் மீது கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

## 8.2 நிதியியல்முறைமை உறுதித்தன்மை

**வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பேரண்ட பொருளாதாரத்தின் அதிகரித்த அழுத்தங்கள் மற்றும் நிதியியல் சந்தை அபிவிருத்திகளுக்கு மாறாக நிதியியல் பணிகள் துறையின் நிலைத்து நிற்கும் விரிவாக்கத்தினால் ஆதரவளிக்கப்பட்டு 2007இல் நிதியியல் முறைமையானது தொடர்ந்தும் தாக்கப் பிடிக்கும் தன்மையையும் உறுதிப்பாட்டினையும் கொண்டிருந்தது.** முக்கிய நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் தாக்குப் பிடிக்கும் தன்மை மற்றும் இடர்நேர்வு உள்ளீர்ப்பு இயலளவு போன்றவற்றை வசப்படுத்தி மேம்படுத்தப்பட்ட ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்புக்குட்பட்டு வலுவான இலாபத்தன்மை, அதிகரித்த மூலதன மட்டங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட சொத்துக்களின் தரம் போன்றவற்றினூடாக தமது ஆற்றல் வாய்ந்த தன்மையை பேணிக் கொண்டன. நிதியியல் முறைமையின் உறுதித்தன்மைக்கான எதிர்வுகூறல் தொடர்ந்தும் சாதகமாக காணப்பட்டது எனினும் உயர்ந்த பணவீக்கத்துடன் தொடர்புபட்ட உயர்ந்த வட்டி வீதங்கள், உயர்ந்த கொடுகடன் வளர்ச்சி மற்றும் உலகப் பொருளாதாரத்தின் மெதுவடைதல் போன்ற நடைமுறையிலுள்ள இடர்நேர்வுகள் பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருக்கக்கூடிய நிகழ்வுகள் நடைபெறுவதனை தடுப்பதற்கு தொடர்ச்சியான விழிப்பினையும் இடர்நேர்வு குறைவினையும் வேண்டி நிற்கின்றன.

**2007 நடுப்பகுதியிலிருந்தான உலக நிதியியல் சந்தைகளிலான மாற்றங்கள் இந்தச் சந்தைகளில் திரவத்தன்மை, கொடுகடன் மற்றும் சந்தை இடர்நேர்வு போன்றவற்றை அதிகரித்துள்ளன.** ஐக்கிய அமெரிக்காவின் துணை வாடிக்கையாளர் வீடமைப்பு ஈட்டு பிரச்சனையால் உருவாக்கப்பட்ட பன்னாட்டு நிதியியல் சந்தைகளில் இறுக்கமான கொடுகடன் விதிகளினையும் உயர்ந்த கொடுகடன் கொடுப்பனவிற்கும் இட்டுச் சென்றுள்ளது. உள்நாட்டு நிதியியல் நிறுவனங்கள் சொத்துக்களால் பிணையிடப்பட்ட பிணையங்களையும் பெறுதிகளையும் கொண்டிராததனால் அண்மைய தளம்பல்களினால் இலங்கை நேரடியாக பாதிக்கப்படவில்லை.

**உள்நாட்டுத்துறையில், வலுவான பொருளாதார வளர்ச்சி தொடர்ந்தும் நிதியியல் முறைமை உறுதித்தன்மையை தொடர்ந்து வலுப்படுத்தியது.** 2007இல் 8.5 சதவீதமாக காணப்பட்ட நிதியியல் பணிகள் துறையின் வளர்ச்சியானது வளர்ச்சி உத்வேகத்திற்கான முக்கிய காரணியாகவிருந்தது. எனினும், இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகளுக்கு பதிலிறுத்து விரைவாக உயர்ந்து செல்லும் வட்டி வீதங்கள் நிதியியல் உறுதித்தன்மைக்கு சவால்களை உருவாக்கியது. நிதியியல் நிறுவனங்கள் இத்தகைய இடர்நேர்வுகள் தொடர்பாக மேலும் விழிப்பாக இருக்க வேண்டியதுடன் நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையை பேணுவதற்காக பொருத்தமான இடர்நேர்வு தணிப்பு வழிமுறைகளை தீவிரப்படுத்த வேண்டும். உயர்ந்த பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்கள் வியாபார மற்றும் வீட்டுத்துறையின் கடன் மீளளிப்பு

**அட்டவணை 8.1** தெரிவுசெய்யப்பட்ட நிதியியல் ஆற்றல்த்தன்மை குறிகாட்டிகள்

சதவீதம்

| நிறுவனமும் குறிகாட்டியும் | 2006 (அ) | 2007 (ஆ) |
|---|---|---|
| **உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்** | | |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் | 12.7 | 12.7 |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான அடுக்கு 1 மூலதனம் | 11.3 | 10.9 |
| மூலதனத்திற்கான ஒதுக்கங்கள் தவிர்ந்த செயற்படாக் கடன்கள் | 13.0 | 10.5 |
| மொத்தக் கடன்களில் செயற்படாக் கடன்கள் | 5.5 | 4.9 |
| சொத்து மீதான வருவாய் (வரிக்கு முந்திய) | 1.8 | 1.9 |
| பங்குமூலதனம் மீதான வருவாய் (வரிக்குப் பிந்திய) | 15.6 | 16.0 |
| மொத்த வருமானத்திற்கான வட்டிமிகை | 37.9 | 33.1 |
| மொத்த வருமானத்திற்கான வட்டியல்லாச் செலவு | 32.0 | 25.4 |
| நியதித் திரவ விகிதம் | 23.9 | 24.8 |
| மொத்தச் சொத்துக்களுக்கான திரவச்சொத்துக்கள் | 16.9 | 17.9 |
| மூலதன நிதியங்களுக்கான தேறிய திறந்த நிலை | 0.01 | 0.01 |
| **உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்** | | |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் | 19.8 | 19.4 |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான அடுக்கு 1 மூலதனம் | 20.7 | 22.9 |
| மூலதனத்திற்கான ஒதுக்கங்கள் தவிர்ந்த செயற்படாக் கடன்கள் | 21.9 | 23.4 |
| மொத்தக் கடன்களில் செயற்படாக் கடன்கள் | 6.7 | 6.8 |
| சொத்து மீதான வருவாய் (வரிக்கு முந்திய) | 2.0 | 1.8 |
| பங்குமூலதனம் மீதான வருவாய் (வரிக்குப் பிந்திய) | 11.8 | 10.7 |
| மொத்த வருமானத்திற்கான வட்டிமிகை | 36.0 | 26.3 |
| மொத்த வருமானத்திற்கான வட்டியல்லாச் செலவு | 18.4 | 16.0 |
| நியதித் திரவ விகிதம் | 63.6 | 59.9 |
| மொத்தச் சொத்துக்களுக்கான திரவச்சொத்துக்கள் | 44.5 | 40.6 |
| **நிதிக் கம்பனிகள்** | | |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் | 14.3 | 15.4 |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான அடுக்கு 1 மூலதனம் | 12.9 | 13.2 |
| மூலதனத்திற்கான ஒதுக்கங்கள் தவிர்ந்த செயற்படாக் கடன்கள் | 9.4 | 8.8 |
| மொத்தக் கடன்களில் செயற்படாக் கடன்கள் | 5.5 | 5.1 |
| சொத்து மீதான வருவாய் (வரிக்கு முந்திய) | 2.5 | 2.3 |
| பங்குமூலதனம் மீதான வருவாய் (வரிக்குப் பிந்திய) | 17.2 | 19.6 |
| மொத்த வருமானத்திற்கான வட்டிமிகை | 33.0 | 27.8 |
| மொத்த வருமானத்திற்கான வட்டியல்லாச் செலவு | 31.0 | 31.1 |
| நியதித் திரவ விகிதம் | 17.1 | 18.1 |
| மொத்தச் சொத்துக்களுக்கான திரவச்சொத்துக்கள் | 9.3 | 9.9 |

(அ). திருத்தப்பட்டவை
(ஆ). தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இயலளவினை பாதிப்படையச் செய்வதன் மூலம் பேரண்ட முன்மதியுடைய பாதிப்படையக் கூடிய தன்மையினை உயர்வடைந்து செல்லும் அரச படுகடன் மீளளிப்பு கடப்பாடுகள் 2007இல் வட்டி வீதங்களின் மீது மேல்நோக்கிய அழுத்தத்தினை உருவாக்கியதனால் இந்த கரிசனைகளுக்கு முகம் கொடுப்பதற்காக ஒரு முன்மதியுடைய படுகடன் முகாமைத்துவ உபாயம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் இந்த உபாயத்தின் விளைவு 2008இன் தொடக்கத்தில் காணப்பட்ட உறுதியான வட்டி வீதங்களில் ஏற்கனவே தெளிவாகியுள்ளது.

**அரசாங்கத்தின் உலக நிதியியல் சந்தைகளிலான முதலாவது பன்னாட்டு முறி வழங்கல் வெளிநாட்டு படுகடன்களின் முதிர்வுத் தோற்றப்பாட்டினை விரிவாக்குவதற்கும் வெளிநாட்டு ஒதுக்குகளினை கட்டியெழுப்புவதற்கும் துணை புரிந்தது.** கடந்த சில ஆண்டுகளில் அரசாங்கத்தின் குறுங்கால வெளிநாட்டு நாணய

சிறப்புக் குறிப்பு 18

# துணை முதன்மை ஈட்டுச் சந்தை நெருக்கடிகளும் அதன் பாடங்களும்

## துணை முதன்மை நெருக்கடிகள்

துணை முதன்மை என்ற சொற்பதமானது தாழ்ந்த கொடுகடன் பெறுமதிகளையுடைய கடன்படுநர்களை குறிக்கின்றது. அவர்களுடைய கொடுகடன் வரலாற்றில் பிரச்சனைகளைக் கொண்ட அல்லது அவர்கள் விண்ணப்பித்த கடனுக்கான மாதாந்தக் கொடுப்பனவுக்கு உதவும் வகையில் போதுமான வருமானத்தை கொண்டிருக்கின்றார்கள் என உறுதிப்படுத்த இயலாதவர்களை துணை முதன்மை வாடிக்கையாளர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். முதன்மைக் கடன்களுடன் ஒப்பிடுமிடத்து, துணை முதன்மைக் கடன்கள் அல்லது ஈடுகள் கடன்கொடுனர்கள் மற்றும் கடன்படுனர்கள் இருவருக்குமே இடர்நேர்வுத் தன்மை கொண்டதாக இருக்கிறது. ஏனினல் உயர் வட்டி வீதங்கள் ஒழுங்கற்ற கொடுகடன் வரலாறு, மற்றும் பிரகாசமற்ற தனிப்பட்ட நிதியியல் சூழ்நிலைகள் அத்தகைய கடன்படுநர்களுடன் கூட்டிணைக்கப்பட்டிருகின்றமை என்பனவற்றின் ஒன்றினைவினாலாகும்.

பல்வேறுபட்ட காரணிகளால், துணை முதன்மை ஈட்டுச் சந்தை கடந்த சில ஆண்டுகளில் விரைவான ஓர் விரிவாக்கத்தைக் காட்டியதுடன் 2007இல் ஏறத்தாள 2 ரில்லியன் ஐ.அ.டொலரை அடைந்தது. ஐக்கிய அமெரிக்காவில் அதிகரித்துச் செல்லும் வட்டி வீதங்கள் அந்நாட்டின் வீடமைப்பின் திடமற்ற உயர்வுகளை நகரச் செய்வதற்கு இட்டுச் சென்றதுடன் துணை முதன்மை ஈடுகளில் வட்டிவீதங்கள் உயர்ந்தளவில் மீள் நிர்ணயிக்கப்பட்டதால் கடன்களுடைய பணம் செலுத்தாத் தன்மை மற்றும் கையகப்படுத்தும் செயற்பாடுகள் வேகமாக அதிகரித்தது. 2006 - 2007 காலப்பகுதியில் ஐ. அமெரிக்காவின் பல பகுதிகளில் வீட்டு விலைகள் குறிப்பிடத்தக்தகளவு வீழ்ச்சியடைய ஆரம்பித்தவுடன் மீள் நிதியிடல் இக்கட்டான நிலையை அடைந்தது. பணம் செலுத்தாத வீதங்களின் அதிகரிப்பு கொடுகடன் இடர்நேர்வை கொண்டுள்ள ஈட்டுக் கடன் வழங்குனர்களை மட்டுமல்ல ஈட்டுப் பாதுகாப்பு பிணையங்கள் அல்லது பாதுகாப்பட்ட கடன் கடப்பாடுகளைக் கொண்டுள்ள ஈட்டுக்கடன் வழங்குனர்களை மட்டுமல்ல ஈட்டுப்பாதுகாப்பு பிணையங்கள் அல்லது பாதுகாக்கப்பட்ட கடன் கடப்பாடுகளைக் கொண்டுள்ள கம்பனிகள், தனியார் மற்றும் நிறுவன ரீதியான முதலீட்டாளர்களையும் பாதித்தது. பல்வேறு நாடுகளில் பங்குச் சந்தை குறிப்பிடத்தக்களவால் வீழ்ச்சியடைந்தது. மேலும் கொடுகடன் இடர்நேர்வுகளின் சிதறல்கள் பரவிச் சென்றமை மற்றும் நிதியியல் நிறுவனங்களின் மீதான தாக்கத்தின் தெளிவற்ற தன்மை என்பன கடன் வழங்குனர்கள் கடன் வழங்குதல் செயற்பாட்டை குறைத்தமை அல்லது கொடுகடனுக்காக உயர் வட்டிவீதங்களை கோருகின்றமை போன்றவற்றிற்கும் மேலும் அமைந்ததுடன் ஓர் திரவத்தன்மை மற்றும் கொடுகடன் நெருக்கடியை உருவாக்கியமைக்கு காரணமாக அமைந்தது. இந்த திரவத்தன்மை சூழ்நிலைகளின் இறுக்கமான தன்மை அநேகமான அபிவிருத்தி அடைந்த சந்தைகளுக்கு பரவியுள்ளதுடன் நொதோன் ரொக் என்றழைக்கப்படும் ஓர் பிரித்தானிய வங்கியினை பதிக்கவும் செய்தது. இத் திரவத்தன்மை விடயங்கள் பிரதான பொருளாதாரத்தின் மத்திய வங்கிகளை சந்தை மற்றும் நிதியியல் முறைமை உறுதித்தன்மையினை பேணும்பொருட்டு பெரிய அளவுகளில் சந்தைக்கு திரவத் தன்மையை உட்பாய்ச்சுவதற்கு கட்டாயப்படுத்தியது.

## இந்நெருக்கடிக்கான காரணங்கள்

இத்துணை முதன்மை நெருக்கடிகளுக்கு பல்வேறு காரணிகள் ஒருங்குசேர்ந்து பங்களித்துள்ளது[1]. நெருக்கடிக்கு பொதுவாகப் பங்களித்த பிரதான காரணிகளுடைய சராம்சம் பின்வருமாறு.

அ. *துணை முதன்மை ஈடுகளின் செலுத்தத் தவறுகின்ற வீதங்கள் அதிகரித்தமை* : உயர்ந்த வட்டி வீதங்கள் மற்றும் வீட்டு விலைப் பணவீக்கத்தின் ஓர் குறைந்து செல்லும் தன்மை என்பவற்றால் 2005இல் ஆரம்பத்தில் ஐக்கிய அமெரிக்காவின் துணை முதன்மை ஈடுகளின் செலுத்தத் தவறுகின்ற வீதங்கள் அதிகரிக்க ஆரம்பித்ததுடன் சில கடன்படுனர்களுக்கு தங்களுடைய நிதியியல் கடன்பாடுகளை பூர்த்தி செய்வதை கடினமாக்கியது. கால அடிப்படையில் வட்டிக கொடுப்பனவுகள் அதிகரித்து செல்கின்ற மாற்றப்படக் கூடிய வீத ஈடுகளை பெற்றுக்கொண்ட கடன்படுனர்களுக்கு இது குறிப்பாக உண்மையாகும்.

ஆ. *கடன் வழங்குனர்க்கிடையிலான போட்டித் தன்மையும் தாழ்ந்த தரமுடைய கடன் வழங்கலும் இது கொடுகடன் நியமங்களுடைய மிதமிஞ்சிய* தளர்வும் சில கடன்வழங்குனரால் எடுக்கப்படுகின்ற மேலதிக இடர்நேர்வுகளும் இதற்கு இட்டுச் சென்றது. கடன்கொடுனர்கள் ஈடுகளை மீள்பொதியிட்டு விற்பனை செய்தமை, இதன் மூலம் அவர்களுடைய ஐந்தொகையிலிருந்து கொடுகடன் இடர்நேர்வை நீக்கமுடிந்தமை அத்துடன் இந்தச் செயற்பாடுகளிலிருந்து பெறப்படுகின்ற கட்டண வருமானம் வழங்கப்பட்ட கொடுகடன் தொகைகளில் தங்கியிருந்தமை போன்றவற்றால் தரத்தை பார்க்கிடும் எண்ணிக்கையின் அதிகரிப்பிலேயே ஊக்குவிப்புக் காணப்பட்டது. மேலும் தற்போதைய நெருக்கடிகளுக்கு முன்னா் காணப்பட்ட குறைந்த வட்டி வீதங்களின் நீடித்துச் சென்ற காலப்பகுதி, உயர் திரவத்தன்மை மற்றும் குறைந்த ஏற்றத்தாழ்வுகள் என்பன நிதி நிறுவனங்கள் இடர்நேர்வுகளை குறைத்து மதிப்பிடுவதற்கும் பல்வேறு நிதியியல் நிறுவனங்களில் கொடுகடன் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்தினைப் பின்பற்றாமை மற்றும் நிதியியல் ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் மேற்பார்வையில் காணப்பட்ட குறைபாடுகள் என்பன இந் நெருக்கடிக்கு இட்டுச் சென்றது.

இ. *வங்கிகளுடைய ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள்* : அநேகமான வங்கிகள் ஐந்தொகைக்கு வெளியேயான கொடுக்கல் வாங்கல்களின் ஊடாக அவர்களுடைய சொத்துப் பிணையமாக்கலின் கட்டமைப்பை மற்றும் பெறுதிக் கருவின் வியாபாரத்தை பொறுப்பேற்பதற்கு கட்டமைக்கப்பட்ட

[1] காரணங்களை விபரமாகப் பகுப்பாய்வு செய்வதற்கு "அபிவிருத்தியடைந்த கொடுகடன் சந்தையில் குழப்ப நிலைமை: காரணங்கள், தீர்மானங்கள் மற்றும் முன்னோக்கிச் செல்லும் வழி" என்ற சிறப்புக்குறிப்பிற்காக இலங்கை மத்திய வங்கியின் 2007இன் நிதியியல் உறுதிப்பாட்டு மீளாய்வினைப் பார்க்கவும்.

முதலீட்டு வாகனங்களை உருவாக்கியிருந்தன. வங்கிகளுடன் கடன் ஏற்பாடுகளை கொண்டுள்ள இத்தகைய கட்டமைப்பு முதலீட்டு வாகனங்களிலிருந்து திரவத்தன்மைக்கான கேள்வி அதிகரித்ததைத் தொடர்ந்து வங்கிகள் சடுதியான திரவத்தன்மை பிரச்சனைகளை முகங்கொடுக்கத் தொடங்கியது. இது சந்தையில் ஓர் திரவத்தன்மை நெருக்கலின் விருத்திக்கு இட்டுச்சென்றது.

ஈ. *ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களுக்கு வெளியே சொத்து பிணையமாக்கலின் ஊடாக சிக்கல் தன்மை வாய்ந்த நிதியியல் சாதனங்களின் வேகமான அபிவிருத்தி :* பிணையமாக்கல் செயற்பாட்டின் வேகமான அதிகரிப்பு கொடுகடன் சந்தைகளின் தொழிற்பாட்டை நிதியியல் இடைத் தொழிற்பாட்டாளர்களால் மேற்கொள்ளப்படும் திரவத்தன்மை மாற்றத்தினுடைய அடிப்படையான பங்கினை குறைத்ததன் மூலம் திருத்தியமைத்தது. மேலும் வங்கிகள் மற்றும் ஏனைய ஈட்டு நிறுவனங்களின் செயற்பாடானது பிணையமாக்கலின் ஊடாக "உருவாக்குதல் மற்றும் வைத்திருத்தலில்" இருந்து "உருவாக்குதல் மீள் பொதியிடல் மற்றும் விற்றல்" க்கு மாற்றமடைந்தது. இது கொடுகடன் செயற்பாடுகள் மற்றும் பிணையமாக்கல் சொத்துக்களுடன் இணைந்திருக்கும் கொடுகடன் சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகளை அவற்றை வைத்திருப்பதற்கு அதிகமாக விரும்புகின்றவர்களுக்கு மாற்றம் செய்வதற்கு இயலச் செய்கிறது. ஈடுகள் மற்றும் ஏனைய வகையான கடன்களை அடிப்படையாகக் கொண்ட இத்தகைய கொடுகடன் பெறுதிக் கருவிகள் மிகவும் சிக்கல் தன்மை வாய்ந்தனவாக இருந்ததுடன் அவைகளுடைய பெறுமதிகளை மிகச்சிலரே விளங்கிக் கொண்டுள்ளார்கள், மேலும் முதலீட்டாளர்களுக்கிடையில் கொடுகடன் இடர்நேர்வை மாற்றம் செய்தமையானது உண்மையில் இவ் இடர்நேர்களைக் கொண்டுள்ளார்கள் என்பதில் நிச்சயமற்ற தன்மையை உருவாக்கியுள்ளது.

உ. *கொடுகடன் தரமிடல் நிறுவனங்களின் குறைபாடுகள் :* தரமிடல் முகவர்கள் கீழ் கோடிட்ட சொத்துக்களின் குறிப்பாக துணை முதன்மை ஈடுபாடுகளின் இடர்நேர்வு மாற்றங்களுக்கு ஏற்ப ஈட்டு பாதுகாப்பை கொண்ட பிணையங்கள், பாதுகாக்கப்பட்ட கடன் கடப்பாடுகள் மற்றும் ஏனைய கொடுகடன் பெறுதிகருவிகளினுடைய தரமிடல்களை மாற்றியமைக்கவில்லை. மேலும் முதலீட்டாளர்களால் துணை முதன்மையால் பாதுகாக்கப்பட்ட கொடுகடன் பெறுதிக் கருவிகளுக்கும் மற்றும் ஏனைய நல்ல தரமுடைய சொத்துக்களால் பாதுகாக்கப்பட்ட கொடுகடன் பெறுதிக் கருவிகளுக்குமிடையில் வேறுபடுத்த இயலாமல் இருந்தன. அதைத் தொடர்ந்து முதலீட்டாளர்களால் முதலீடுகளுடைய மீட்புக்கான அச்சமூட்டும் கேள்விகள் அனைத்து வகையான கொடுகடன் பெறுதிக்கருவிகளையும் பாதித்ததுடன் நெருக்கடிகளை தீவிரமாக்கியது.

ஊ. *கருமபீடத்தினூடான சந்தைகளின் வெளிப்படையான தன்மைகளுடைய குறைபாடு :* வெளிப்படையாக விற்பனை செய்யப்படும் பிணையங்கள் மற்றும் எதிர்கால ஒப்பந்தங்களைப் போலல்லாது இத்தகைய பாதுகாக்கப்பட்ட கடன் பிணையங்கள் மற்றும் கொடுகடன் பெறுதிகள் சந்தையில் விற்பனை செய்யப்படுவதில்லை. பதிலாக இவை கருமபீடத்தினூடான சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. ஓர் சந்தையில், ஒவ்வொரு விற்பனை மற்றும் கொள்வனவுகளுக்கும் மாற்றுத் தரப்பாக சந்தை செயற்படுவதுடன் வெளிப்படையான தன்மையில் வியாபாரங்கள் செய்யப்படுகின்றன. எப்படியாயினும், கருமபீடத்தினூடான சந்தையில் வியாபாரமானது வாடிக்கையாளர்கள் மற்றும் முகவருக்கிடையில் இரு தரப்பாக இடம் பெறுவதுடன் வியாபாரங்களின் எண்ணிக்கைகள் வெளியிடப்படுவதில்லை. விலை வெளிப்படுத்தல் செய்கிற ஓர் வெளிப்படையானதாக இருப்பதில்லை என்பதுடன் மிகப் பெரிய அல்லது பாதிப்புற்ற நிலைகள் காணப்படுகின்றபோது அவற்றை இனங்காண்பதற்கு சந்தையில் ஓர் மதிப்பீட்டு முறைகள் காணப்படுவதில்லை. மேலும் பரிமாற்று சந்தைகளைப் போலல்லாது கரும பீடத்தினூடாக சந்தையில் திரவத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முகவர்களையோ அல்லது குறித்துரைக்கப்பட்டதாகவோ அல்லது ஏனைய வகையில் நிறுவனமயப்படுத்தப்பட்ட சந்தை உருவாக்கலாளரையோ கொண்டிருக்கவில்லை. இதன் ஓர் விளைவாக பெரிய நிகழ்வுகள் விலை சுற்றுக்களை ஏற்படுத்தும் போது முகவர்கள் சந்தை தோற்றுவிப்பாளராக செயற்படுவதை நிறுத்தியதுடன் வியாபாரமும் திடீரென நிறுத்தப்படமுடியும்.

## நெருக்கடியிலிருந்து கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்கள்

இந் நெருக்கடிகள் சந்தையில், நிதியியல் நிறுவனங்களில் மற்றம் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பில் காணப்படுகின்ற குறைபாடுகளில் சிலவற்றை வெளிக்காட்டியது. இதிலிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய பிரதான பாடங்களில் சில பின்வருமாறு.

- *திரவத் தன்மையின் முக்கியத்துவம் :* இந் நெருக்கடியானது வங்கிகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துவதில் திரவத் தன்மையின் முக்கியத்துவத்தை கோடிட்டுக்காட்டுகின்றது. ஏனைய நிதியியல் நிறுவனங்களைப் போலல்லாது, வங்கிகளுடைய பொறுப்புக்கள் கேள்விக்கேற்ப மீள் எடுத்துக்கொள்ள கூடியதாக இருப்பதால் அவை வங்கி முறிகள் மற்றும் மீதிகளுக்கு உட்பட்டதாக இருக்கின்றது. திரவத் தன்மை இடர்நேர்வுகளானது வங்கிகளால் முதிர்ச்சியில் மாற்றப்படும் சேவைகளின் உள்ளார்ந்ததாக இருப்பினும்கூட ஐந்தொகை முதிர்ச்சி ஒத்திசையாமைகள் மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிக்காட்டுகைகள் இரண்டினாலும் எழுகின்ற திரவத்தன்மை கோரல்கள் தொடர்பில் நெருங்கிய கண்காணிப்பை கொண்டிருக்க வேண்டும். ஆகவே வங்கிகளின் உறுதித்தன்மையை பேணுகின்றபோது மூலதனப் போதுமாந்தன்மைக்கு கொடுக்கின்றவாறு அதே அளவான முக்கியத்துவத்தை திரவத்தன்மையின் போதுமாந்தன்மைக்கும் வழங்கப்பட வேண்டும். இறுக்கக்கூடிய தன்மையை குறித்துக்காட்டும் மூலதனப் போதுமாந்தன்மையானது ஓர் அடுத்த சூழ்நிலையின் நிலைத்திருப்பதற்கு போதுமான நிபந்தனையாக இருக்கப்பட முடியாது. நெருக்கடியைத் தொடர்ந்து ஓர் கடனின் அளவீட்டுக் காரணியாக "காசுப்பாய்ச்சலினை" பார்க்க வேண்டியதன் முக்கியத்துவம் மீள்வலியுறுத்தப்பட்டது.

- *விதிவிலக்கான நிகழ் குறைகளின்கீழ் அழுக்கப் பரிசோதனைக்கான* தேவை சாதாரமான நிதியியல் சந்தை சூழ்நிலைகளின்கீழ் மறைந்துள்ள மற்றும் எதிர்பாராத இடர்நேர்வுகளை காணமுடியாது. சமாளிக்கப்படக் கூடியது எனக் கருதப்படும் இடர்நேர்வுகள் நெருக்கடியான அல்லது அழுத்தமான சந்தர்ப்பங்களில் விதிவிலக்கானவையாக உருவெடுக்கின்றன.

• *மாதிரி இடர்நேர்வுகள்:* பிணையப்படுத்தல் ஊடாக உருவாக்கப்படும் சிக்கலான கொடுகடன் பெறுதிக்கருவிகளின் விலையிடல்கள் பெறுமதியிடல் மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இவை சில எடுகோள்களின் கீழேயே செயற்படுகின்றது. அத்தகைய மாதிரிகளின் உள்ளாக உருவாக்கப்படும் எடுகோள்களை தொடர்ச்சியாக கொண்டிராத சந்தாப்பத்தில் அத்தகைய சாதனங்களுக்கு விலையிடல் சிரமமானதாகின்றதுடன் ஓர் சந்தையின் நிறுத்தத்துக்கு இட்டுச் செல்கின்றது. ஆகவே நடைமுறையிலுள்ள நிதியியல் சூழ்நிலையில் கொடுகடன் இடர்நேர்வுகள், பெறுமதியிடல்கள் போன்ற பல்வேறு விடயங்களில் இலகுவான மாதிரிகள் பயன்படுத்தப்படுவதுடன் அம்மாதிரிகளை தெரிவுசெய்தல் என்பது இடர்நேர்வினுடைய ஓர் மூலமாகவும் முக்கியமானவையாக இருக்கின்றது. மாதிரி இடர்நேர்வுகளின் அளவீடுகளை குறைத:தக் கொள்ளும் பொருட்டு, உருவாக்குதல் பற்றிய விழிப்புணர்வு , எடுகோள்களின் மதிப்பீடு மற்றும் விளங்கிக் கொள்ளுதல், இலகவான மாதிரிகளின் மற்றும் மீள்பரீட்சிப்பின் பயன்பாடு மற்றும் சுருக்கப் பரீட்சிப்புக்கள் முக்கியத்துவமுடையதாக இருக்கின்றன.

• சந்தைகள் மற்றும் நிறுவனங்களில் வெளிப்படைத் தன்மையை உயர்த்துதல்: புதிய அபிவிருத்திகள் மற்றும் நிதியியல் புத்தாக்கங்களுடன் இணைந்து செல்லக்கூடிய வகையில் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்புக்கள் மீள் திருத்தப்பட வேண்டிய தேவையை கொண்டுள்ளன. இது நெருக்கடிகளை தவிர்த்தல் கட்டமைப்புக்கள் மற்றும் நெருக்கடிகள் தீர்த்தல் கட்டமைப்பு ஆகிய இரண்டிற்கும் பிரயோகிக்கப்படுகிறது. ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் சில ஈட்டு நிறுவனங்கள் ஒழுங்குப்படுத்தப்படாத நிறுவனங்களாக காணப்பட்டதுடன் பொருத்தமான வெளிப்படுத்துகைகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு தேவைப்பாடுகளின் கருத்தில் கொண்டவையாக காணப்படவில்லை. ஏனைய நாடுகளின் மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒழுங்குபடுத:தனர்கள் அவர்களுடைய கட்டமைப்புக்கள் போதுமையானவையாக இருக்கின்றனவா எனக் கேட்டுக் கொள்ள வேண்டியிருக்கின்றது. உதாரணமாக பாதுகாப்பு நிதிய செயற்பாடுகள் மற்றும் கருமபீடத்தினூடான சந்தை என்பதில் உள்ள தெளிவற்ற தன்மை தொடர்பில் வெளிப்படைத்தன்மை மற்றும் வெளிப்படுத்துகையை விருத்தி செய்வதற்கான தேவையை சுட்டிக்காட்டப்படுகிறது.

• *பாதகமான ஊக்கப்படுத்தல்கள் :* அண்மைய அபிவிருத்திகள் கொடுகடன் சாதனங்களுக்கான விநியோகச் சங்கிலியில் விருத்திக்கு அனுமதித்த பாதகமான விருத்திகளை வெளிக்காட்டியுள்ளது. தரத்திலும் பார்க்க எண்ணிக்கையை வைத்து உருவாக்குனர்களுக்கும் சாத்தியமானளவு அவர்களின் நோக்குகளை விரிவாக்குவதற்கு தரமிடல் நிறவனங்களுக்கும், நிதிக்கட்டமைக்கப்பட்ட கொடுகடன்களுக்கு ஐந்தொகைக்கு வெளியேயான வாகனங்களின் பயன்பாட்டுக்கு வங்கிகளுக்கும் வலுவான ஊக்கப்படுத்தல்களை வழங்குவதை இது உள்ளடக்கியிருந்தது. இது வங்கிகளில் காணப்பட்ட நட்டவீட்டு திட்டங்களையும் வெளிக்காட்டியிருக்கலாம். சில விடயங்களில் இந்த ஊக்கப்படுத்தல்கள் ஒழுங்குபடுத்தல்களுக்கு மாறாகவும் ஏற்பட்டிருக்கலாம். மற்றவர்களில் அவர்கள் ஒழுங்கபடுத்தல் முறைமையில் தவறுகளின் தொடராக இருந்தது.

• *இடர்நேர்வுகளுடைய சார்பு சுழற்சி :* இவ் நெருக்கடியானது கம்பனிகளாலும் ஒழுங்குபடுத:தனர்களாலம் பயன்படுத்தப்பட்ட இடர்நேர்வுகளை அளவீடுகள் எவ்வாறு சார்பு சழற்சியுடையதாக இருக்கமுடியும் என காட்டியதுடன் சுற்றோட்டத்தின் உச்சியில் அதிக இடர்நேர்வை ஏற்றுக்கொள்வதற்கும் நேரிடக்கூடிய தூண்டல்களை குறைப்பதற்கும் ஊக்கப்படுத்தியது.

நிதியியல் குழப்பத்துக்கு இட்டுச் சென்ற துணை முதன்மை, ஒழுங்குபடுத்துனர்கள், முதலீட்டாளர்கள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் சந்தைகளுக்கு பல்வேறு பாடங்களை கற்பித்தது மற்றும் தொடர்ந்து கற்பித:துக் கொண்டிருக்கின்றது. நெருக்கடிக்கான பல்வேறு பாடங்களுக்கிடையில் நிதியியல் சந்தைகள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பில் வெளிப்படைத்தன்மை மற்றும் வெளிப்படுத்துகைகளின் முக்கியத்துவம் மற்றும் நிறுவனங்களுக்கான ஒழுங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் என்கின்ற ஓர் பொதுவான கோடு வரையப்பட்டுள்ளது.

படுகடன்களில் ஒரு அதிகரிப்பு காணப்பட்டமை நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்விற்கு உள்ளடங்கும் தன்மையினை அதிகரிக்கச் செய்ததுடன் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை விகிதத்தினை பலவீனமடையச் செய்தது. எனவே, 5 வருட முறியினூடான வெளிநாட்டு நிதித்திரட்சி வெளிநாட்டு படுகடன் முதிர்வு கட்டமைப்பிலும் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கு நிலைப்பாட்டில் சாதகமானதொரு தாக்கத்தினையம் கொண்டிருந்தது. வெளிநாட்டவர்களுக்கான திறைசேரி முறிகளின் விற்பனையும் வெளிநாட்டு ஒதுக்குகளினை வலுவடையச் செய்வதில் துணை புரிந்தது.

**கொடுகடனின் வளர்ச்சி இலக்கிடப்பட்ட மட்டத்தினை விட இன்னமும் உயர்வாக இருந்தாலும் கொள்கை வழிமுறைகளுக்கு பதிலிறுத்து குறைவடைந்து செல்கின்றது.** இது பணவீக்க அழுத்தங்களினை வங்கிகளின் கொடுகடன் இடர்நேர்வினது அதிகரிப்பினைக் குறைப்பதன் மூலம் நிதியியல் உறுதித்தன்மையை பேணுவதில் நன்மையளிக்கின்றது. மிதமிஞ்சிய வங்கிக் கடன் வழங்கலினை கட்டுப்படுத்துவதற்காகவும் அதிகரித்த கடன் வழங்கலினை கட்டுப்படுத்துவதற்காகவும் அதிகரித்த கடன் வழங்கலுடன் தொடர்புடைய இடர்நேர்வினைத் தணிப்பதற்காகவும் இறுக்கமான நாணயக் கொள்கைக்கு மேலதிகமாக 2006இன் நான்காம் காலாண்டிலிருந்து பல்வேறு முன்மதியுடைய தேவைப்பாடுகளினை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. இந்த வழிமுறைகள் அனைத்து செயற்படும் முற்பணங்கள் மீதும் பொது ஒதுக்கிடலின் விதிப்பனவு மற்றும் வதிவிட ஆதனங்கள் மீதான முதனிலை ஈடுகளினால் பிணையிடப்பட்ட கடன்கள் மற்றும் ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பிலான அதிகரித்த இடர்நேர்வு நிறைகள் போன்றவற்றை உள்ளக்கும்.

**இவ்வாண்டு காலத்தில் உள்நாட்டு நிதியியல் சந்தைகள் மிகவும் தளம்பலுற்று காணப்பட்டன.** முக்கியமாக சில வங்கிகளில் பலவீனமான திரவத்தன்மை முகாமைத்துவம்

மற்றும் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை போன்றவற்றின் காரணமாக பணச்சந்தை வீதங்கள் தளம்பலுடைய காலப்பகுதியினை எதிர் நோக்கியிருந்தன. 2007 பெப்புருவரியில் மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து அரச பிணையங்கள் மீதான விளைவுகள் முதனிலை மற்றும் இரண்டாந்தரச் சந்தைகளிரண்டிலும் அதிகரித்தன. உயர்வான வட்டிவீதச் சூழலில், முதலீட்டாளர்கள் குறுங்கால முதிர்வுகள் மீது (திறைசேரி உண்டியல்கள்) வலுவான விருப்பத் தேர்வினை காட்டியதுடன் நடுத்தரகால திறைசேரி முறிகளுக்கான சந்தை ஒப்பீட்டளவில் செயற்படாமலிருந்தது. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை பாரியளவிலான பெற்றோலிய இறக்குமதி பட்டியல்களின் தீர்ப்பனவின் காரணமாக இவ்வாண்டு காலப்பகுதியில் அழுத்தத்திற்குள்ளாகியது. ஆனாலும் வெளிநாட்டவர்களுக்கான திறைசேரி முறிகளின் விற்பனை மற்றும் பன்னாட்டு முறி வழங்கல் போன்றவற்றைத் தொடர்ந்து உறுதிப்பாடடைந்தது. முதல் மூன்று காலாண்டுகளில் முக்கிய நாணயங்களுக் கெதிராக பெறுமானத்தில் தேய்வடைந்த ரூபா 2007 நாலாம் காலாண்டில் அதன் பெறுமானம் உயர்வடைந்ததுடன் தொடர்ந்தும் உறுதியாகவிருந்தது. வெளிநாட்டு ஒதுக்கு நிலைப்பாடு மேம்பாடடைந்து அதன் மூலம் நிதியியல் உறுதித்தன்மையினை வலுவடையச் செய்தது. பங்குச் சந்தை ஆண்டின் பெருமளவான பகுதியில் கீழ் நோக்கிய போக்கினைக் கொண்டிருந்ததுடன் விலைச் சுட்டெண்கள் 2000இற்குப் பின்னர் முதல் தடவையாக 2007இல் வீழ்ச்சியடைந்தது. உயர்வடைந்து செல்லும் உள்நாட்டு வட்டி வீதங்கள், கம்பனி உழைப்புகளது மந்தமான எதிர்வு கூறல்கள். உயர்வடைந்த பாதுகாப்பு கரிசனைகள், பங்குச் சந்தையின் கட்டமைப்பு மற்றும் அளவு தொடர்பான பிரச்சனைகள் போன்ற பல காரணிகள் இதற்கு பங்களிப்புச் செய்தன.

**வங்கியியல்துறை அதன் இலாபத்தன்மை, ஆற்றல்மிக்க தன்மை மற்றும் தாக்குப்பிடிக்கும் தன்மை போன்றவற்றை 2007இல் பேணிக் கொண்டது.** உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் காத்திரமான முறையில் வைப்பு மற்றும் கடன் வீதங்களிற்கு மீள் விலையிட்டதன் மூலம் தமது தேறிய வட்டி அளவுகளினை பேணிக் கொள்ள முடிந்ததனால் சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்கு மூலதனம் மீதான வருவாய் போன்றவற்றினால் குறிப்பிடப்பட்டவாறான அவற்றின் இலாபத்தன்மை உயர்ந்தளவில் தக்க வைத்துக் கொள்ளப்பட்டது. எனினும், தேறிய வட்டி அளவுகள் குறுக்கமடைந்தமையினால் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் இலாபத்தன்மை சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. வங்கிகளின் மூலதன நிதிகள் அதிகரித்ததுடன் வங்கியியல் துறையின் மூலதன போதுமாந்தன்மை விகிதங்கள் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ஒழுங்குபடுத்தலின் ஆகக் குறைந்த மட்டங்களினை விட உயர்வடைந்து அதன் மூலம் அதிர்வுகளிலிருந்தும் இடையூறுகளிலிருந்தும் இத்துறையினை பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்யும் அடிப்படை இருப்பினை வழங்கியது. 2008 பாசல் II பின்பற்றப்படுவதன் மூலம் நடைமுறைக்கு வருகின்ற மேம்படுத்தப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உயர்வான மூலதன தேவைப்பாடுகளினால் வங்கியியல் துறையின் முழு மொத்த தாக்குப்பிடிக்கும் திறன் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**வங்கியின் இடர்நேர்வு வெளிப்படுத்துகைகள் முகாமை செய்யக் கூடிய மட்டங்களில் காணப்பட்டன.** சிறந்த இடர்நேர்வு முகாமைத்துவ தொழில்நுட்பங்கள், கடன் மீள் பெறுகை செய்முறைகள் மற்றும் மிகவும் இறுக்கமான முன்மதியுடைய தேவைப்பாடுகள் போன்றவற்றின் காரணத்தினால் கடந்த சில ஆண்டுகளில் குறிப்பிடத்தக்களவில் மேம்பாடடைந்த வங்கிகளின் சொத்துக்களின் தரம் வங்கியியல் முறைமைக்கான செயற்படாக் கடன் விகிதத்தின் ஒரு குறைவுடன் 2007இலும் பேணப்பட்டது. ஒதுக்கிடல் மட்டங்களும் அதிகரித்து உயர்ந்தளவிலான தாக்குப்பிடிக்கும் திறனை குறித்து நிற்கின்றன. எனினும், கடந்த மூன்று ஆண்டுகளில் வங்கி கொடுகடனின் விரைவான விரிவாக்கம் மற்றும் 2007இல் உயர்வடைந்த வட்டி வீதங்கள் உயர்வடைந்த செயற்படாக் கடன்களின் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பினையும் பிரதிபலிக்கப்பட்டவாறு கொடுகடன் இடர்நேர்வில் ஒரு சிறிதளவு அதிகரிப்பிற்கு இட்டுச் சென்றன. எனவே, இந்தப் பரப்பெல்லையில் பாதகமான அபிவிருத்திகளினை தவிர்ப்பதற்கு வங்கிகள் உயர்ந்த கொடுகடன் நியமங்களை பேண வேண்டியது அவசியமாகும். வங்கி கொடுகடனின் துறை சார்ந்த பகிர்ந்தளிப்பு பெருமளவில் பரந்துபட்டதாக காணப்பட்டது. எனினும், நுகர்வு மற்றும் வீடமைப்பு, கட்டடவாக்கம் மற்றும் சொத்துடமை அபிவிருத்தி துறைகள் போன்ற துறைகள் விசேடமாக கொடுகடன் இடர்நேர்வுகளினால் பாதிப்படையக் கூடிய தன்மையினைக் கொண்டிருப்பதனால் இவற்றிற்கான வங்கிக் கடன் வழங்கலின் விரைவான அதிகரிப்பு கவனிப்பினை வேண்டி நிற்கின்றது. குறிப்பாக சராசரி செயற்படாக்கடன் விகிதத்தினை விட மேலாக காணப்படுகின்ற நிபந்தனைகளை சரியாகக் கடைப்பிடிக்காதவர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருப்பதால் கொடுகடன் அட்டைகள் மீதான கடன்வழங்கல் கவனமாக கண்காணிக்கப்பட வேண்டும். உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் சந்தை இடர்நேர்வினை (வட்டிவீத மற்றும் வெளிநாட்டு நாணயமாற்று இடர்நேர்வு இரண்டினையும்) போதுமானளவில் முகாமை செய்ய முடிந்தது. வங்கியியல் துறையின் வைப்புக்கான கடன்வழங்கல் வீதம் அதிகரித்து 2007இல் வங்கிகளின் திரவத்தன்மை இடர்நேர்வு ஆபத்தினை அதிகரித்தது. சில வங்கிகள் தமது நிதியிடல் இடைவெளிக்கு நிதியிடுவதற்கு பணச்சந்தையில் தங்கியிருப்பது முதிர்வு காலங்களது பொருந்தாமை அதிகரித்தல் மற்றும் சந்தை திரவத்தன்மை இறுக்கமாகுதல் போன்றவை ஏற்படும் பட்சத்தில் இடர்நேர்வுகளினை கொண்டிருக்கும். எனவே, வங்கிகள் இந்த இடர்நேர்வினைத் தணிப்பதற்கு தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் முகாமைத்துவத்தினை மேம்படுத்துவது அவசியமாகும். இதற்கு மேலதிகமாக, ஒரு ஒன்றிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினை நிறைவேற்றுவது எதிர்காலத்தில் ஒழுங்கான இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு இன்றியமையாததாகும்.

**பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளும் 2007இல் அதிகரித்த வட்டிவீத இடர்நேர்வு ஆபத்தினை எதிர் கொண்டன.** இந்த துறை மொத்த நிதியியல் சொத்துக்களின் ஏறத்தாழ 5.5 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் வங்கியியல் நிதியிடலின் இலகுவான கிடைப்பனவைக் கொண்டிராத முக்கிய வகையான சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கு

சேவையாற்றுகின்றது. 2007இல் நிலவிய உயர்ந்த வட்டி வீதச் சூழலில் நிதி மற்றும் குத்தகைக் கம்பனிகள் வட்டி வீத இடர்நேர்விற்கு அதிகளவில் பாதிப்படையக் கூடியனவாக காணப்பட்டன. உயர்ந்த வட்டி வீதச் சூழலில் நிதியிடல் மிகவும் செலவுமிக்கதாகவமைந்ததனால் வட்டி அளவுகள் சுருக்கமடைந்ததன் காரணமாக நிதி மற்றும் குத்தகைக் கம்பனிகளின் இலாபத்தன்மை குறுக்கமடைந்தது. இந்தக் கம்பனிகள் நிலையான வட்டி வீதத்தினைக் கொண்ட நடுத்தரகால ஒப்பந்தங்களைக் கொண்ட குத்தகை நிதியிடல் வியாபாரத்தில் பெருமளவில் ஈடுபட்டு வருகின்றன. நிதிக் கம்பனிகள் வங்கிகளினை விட உயர்ந்த வீதத்தில் நிதிகளினைத் திரட்ட வேண்டியிருப்பதனால் தமது வாடிக்கையாளரிடமிருந்து உயர்ந்த வட்டி வீதங்களை அறவிட வேண்டியிருக்கின்றதனால் வங்கிகளினை விட உயர்ந்த இடர்நேர்வு தோற்றப்பாட்டினைக் கொண்டிருக்கின்றன. இதற்கு மேலதிகமாக, குத்தகைக் கம்பனிகள் தமது நிதியிடல் தேவைப்பாடுகளுக்கு பெருமளவில் வங்கிகளில் தங்கியிருப்பதுடன் குத்தகை வியாபாரத்தில் வங்கிகளும் அவர்களது போட்டியாளர்களாக காணப்படுகின்றன. எனினும், அண்மையில் வலுப்படுத்தப்பட்ட இந்த கம்பனிகளின் மூலதன நிலைமை மற்றும் ஒதுக்கிடல் கொள்கைகள் போன்றன இத்தகைய அழுத்தங்களிற்கு முகம் கொடுப்பதற்கான நிதியியல் அடிப்படை இருப்பினை வழங்கும்.

**ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகிய இரண்டு பெரியளவிலான ஓய்வுகால நல நிதியங்களது இடர்நேர்வு தொடர்ந்து தாழ்ந்ததாகவே காணப்படுகின்றது.** ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் முதலீட்டு சொத்துப்பட்டியலில் பெரும்பங்கு இடர்நேர்வற்ற அரச பிணையங்களின் வடிவில் வைத்திருக்கப்பட்டதனால் கொடுகடன் இடர்நேர்வு புறக்கணிக்கத்தக்கதாக காணப்படுகிறது. அங்கத்தவர் பங்களிப்புக்களினூடாகவும் திறைசேரி உண்டியல்களின் முதலீடுகளினூடாகவும் நேர்க்கணிய நிதி உட்பாய்ச்சல்கள் காணப்படுவதனால் இந்த நிதியங்கள் திரவத்தன்மை இடர்நேர்விற்கும் பாதிப்புக்குள்ளாவதில்லை. நிலையான வருவாய் உழைக்கும் பிணையங்களில் அதிகளவு முதலீடுகள் குவிந்திருந்தமையினால் ஊழியர் சேமலாப நிதியத்தினாலும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தினாலும் எதிர்கொள்ளப்பட்ட முக்கிய இடர்நேர்வாக வட்டிவீத இடர்நேர்வு காணப்படுகின்றது. எனினும், இந்தச் சொத்துக்களின் பெரும்பகுதி "சந்தை பெறுமதிக்கேற்ப மாற்றுதல்" என்பதனை தேவைப்படுத்தாத முதலீட்டு கணக்குகளிலே வைத்திருக்கப் பட்டதனால் இந்த இடர்நேர்வு பெருமளவில் தணிக்கப்பட்டது. ஏனைய அங்கீகாரமளிக்கப்பட்ட தனியார் ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்களும் முக்கிய நிதியங்களைப் போன்றதான இடர்நேர்வு தோற்றப்பாட்டினைக் கொண்டிருந்தன.

**புதிய முன்மதியுடை நியமங்கள் மற்றும் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வைக் கட்டமைப்பு போன்றவற்றின் அறிமுகத்துடன் காப்புறுதிக் கம்பனிகளின் ஆற்றல் வாய்ந்ததன்மை வலுப்படுத்தப்படுகின்றது.** பொதுக் காப்புறுதி வியாபாரத்துக்கான கடன் தீர்ப்பனவு விதிகள் 2007 மே மாதத்திலிருந்து நடைமுறைக்கு வந்த வேளையில் ஆயுட் காப்புறுதிக்கான கடன் தீர்ப்பனவு விதிகள் சில ஆண்டுகளிற்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்டன. பெரும்பாலான கம்பனிகள் கடன்தீர்ப்பனவு அளவு தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகுவதாக காணப்பட்டன. இலங்கை காப்புறுதிச்சபை கரமெல்ஸ்[1] தரமிடல் முறைமையின்படி இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையினை தொடங்கியிருக்கின்றது. காப்புறுதிக் கம்பனிகளின் மூலதன மட்டங்கள் இவ்வாண்டில் அதிகரித்தன. இதற்கு மேலதிகமாக, காப்புறுதிக் கம்பனிகளுக்கான ஆகக் குறைந்த பங்கு மூலதனம் ஒவ்வொரு காப்புறுதி வியாபாரத்திற்கும் ரூ.250 மில்லியனாக 2008இல் அதிகரிக்கப்படும். இது துறையின் கூட்டிணைப்பிற்கு வழிவகுக்கும். காப்புறுதிச் சட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள் இலங்கை காப்புறுதிச்சபை காப்புறுதித் துறையினை காத்திரமான முறையில் மேற்பார்வை செய்வதற்கு அதிகளவான வலுவினை வழங்குவதுடன் இது விரைவில் அமுல்படுத்தப்பட வேண்டும். வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள் காப்புறுதித் தொழிலில் நுழைவதற்கு வசதியளிக்கின்ற நிறுவன முகவர்களது நியமனத்தையும் இந்த உத்தேசங்கள் உள்ளடக்குகின்றன.

**இவ்வாண்டில் தடங்கலற்ற வியாபார திட்டமிடலினை மையமாகக் கொண்டு நிதியியல் உட்கட்டமைப்பு முறைமைகளிலான மேம்பாடுகள் தொடர்ந்தது.** மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்படுகின்ற லங்கா செட்டில் முறைமையும் லங்கா கிளியரினால் தொழிற்படுத்தப்படுகின்ற காசோலை பிரதிமைப்படுத்தலும் மற்றும் சுற்றோட்டக் குறைப்புக்குமான முறைமையும் ஒன்று சேர்ந்து நாட்டின் காசல்லாத கொடுப்பனவுகளின் 99 சதவீதத்தினை தீர்ப்பனவு செய்கின்றன. லங்கா செட்டில் முறைமை முக்கியமான தடங்கல் எதுவுமின்றி 2007இல் 99.8 சதவீத உயர்ந்த முறைமை கிடைப்பனவுடன் தொழிற்பட்டு வந்தது. காசோலை பிரதிமைப்படுத்தலும் மற்றும் சுற்றோட்டக் குறைப்புக்குமான முறைமை இவ்வாண்டில் ஒரு சிறிய இடையூறினை எதிர் கொண்டாலும் அது நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையில் எந்தவொரு தாக்கத்தினையும் கொண்டிருக்கவில்லை. வியாபார தொடர்ச்சி திட்டமிடல் மற்றும் முறைசார்ந்த ரீதியின் முக்கியமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளுக்கான முழுதாக தொழிற்படும். அனர்த்த மீண்டெழுகை தலங்களின் உருவாக்கம் போன்றவற்றுடன் கூடிய முக்கியமான முன்னேற்றம் ஏற்பட்டது. கொழும்பு பங்கு பரிவர்த்தனையால் தொழிற்படுத்தப்படுகின்ற பங்கு மற்றும் படுகடன் பிணையங்களுக்கான இரண்டு தீர்ப்பனவு முறைகள் தவிர்ந்த அனைத்து தீர்ப்பனவு முறைகளும் தமது தேறிய கடப்பாடுகளை லங்கா செட்டில் முறைமையினூடாக தீர்ப்பனவு செய்கின்ற கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் உறுதித்தன்மையை மேலும் வலுப்படுத்துவதற்கு இந்த இரண்டு முறைமைகளின் தேறிய கடப்பாடுகளினையும் லங்கா செட்டில் முறைமைக்கு நகர்த்துவது விரும்பத்தக்கது. வினைத்திறன், பாதுகாப்பு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை மேம்படுத்தும் நோக்கில் நிதியியல் உட்கட்டமைபினை அண்மைக்கால தொழில்நுட்ப அபிவிருத்திகளிற்கேற்ப நவீனமயப்படுத்துவதற்காக தேசிய

[1] மூலதனம், சொத்து, மீள்காப்புறுதி, உண்மைத் தன்மை, முகாமைத்துவம், வருவாய்கள், திரவத்தன்மை, கடன் தீராற்றல்.

கொடுப்பனவு சம்மேளனம் அதன் நடுத்தர - கால வழிகாட்டல்களை அமுல்படுத்துகின்றது. பாதுகாப்புக் கவசத்துடன் கூடிய கொடுகடன் அட்டைகளது அறிமுகம் மற்றும் நாடளாவிய அடுத்த நாள் காசோலை தீர்ப்பனவு முறை மற்றும் வங்கிகளுக்கும் அதன் வாடிக்கையாளர்களுக்குமான இலத்திரனியல் நிதி பரிமாற்ற முறையினை நாடு முழுவதும் அறிமுகம் செய்தல் போன்றவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

**நிதியியல் முறைமை உறுதித்தன்மையின் முழு மொத்த போக்கு சாதகமானதாகவே தொடர்ந்தும் காணப்படுகிறது.** இலங்கைப் பொருளாதாரத்தின் வளர்ச்சி எதிர்பார்ப்பு வியாபாரத்துறையினது செயலாற்றத்தினை வலுப்படுத்துவதுடன் நிதியியல் நிறுவனங்களின் இலாபத்தன்மையையும் மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டு பேரண்டப் பொருளாதார சமமின்மையை தீர்ப்பனவிற்கான கொள்கையானது தொடர்ச்சி உள்நாட்டு நிதியியல் சந்தைகளை உறுதியாக்குவதற்கு இன்றியமையாததாகின்றது. நிதியியல் ஒழுங்குபடுத்துநர்களும் நிறுவனங்களும் எமது விழிப்பணர்வினை தொடங்குவதுடன் நிதியியல் முறைமையின் அபிவிருத்தி, வினைத்திறன், ஆற்றல்மிக்கதன்மை மற்றும் உறுதித்தன்மையை உயர்த்துவதற்கான முன்னெச்சரிக்கை வழிமுறைகளை மேற்கொள்வது அவசியம்.

## 8.3 நிதியியல் நிறுவனங்களின் அபிவிருத்திகள்

**பொருளாதாரத்தின் நிதியியல் தேவைகளுக்கு ஆதரவளித்து நிதியியல் நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்ந்தும் விரிவடைந்தன.** நிதியியல் நிறுவனங்களின் மொத்தச் சொத்துக்கள் 2007இல் 16 சதவீதத்தினால் அதிகரித்து 4,323.0 பில்லியன் ரூபாவரை காணப்பட்டது. இது மொ.உ.உற்பத்தியின் 1.21 தடவைகளாகும். உரிமம் பெற்ற வங்கியியல்துறை (உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்) மொத்த நிதியியல் நிறுவனங்களின் சொத்துக்களில் 58 சதவீதத்திற்கு வகைகூறி தொடர்ந்தும் நிதியியல் துறையின் முன்னணி நிலையினை தக்க வைத்திருக்கின்றன. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மொத்த நிதி சொத்துக்களின் 48.6 சதவீதத்திற்கு வகை கூறிய அதேவேளை உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் 9.4 சதவீதத்திற்கு வகைகூறின. ஊழியர் சேமலாப நிதியத்தின் முதன்மை வகிக்கப்படும் ஒப்பந்த ரீதியிலான சேமிப்பு நிறுவனத்துறை நிதியியல்துறைச் சொத்துக்களில் 20.5 சதவீதத்திற்கு வகைகூறியது. நிதியியல் முறைமையில் நிதி மற்றும் குத்தகைக் கம்பனிகள் 5.5 சதவீதத்திற்கும் காப்புறுதித்துறை 3.1 சதவீதத்திற்கும் வகைகூறின. நிதியியல் துறையின் சொத்துக்களில் மத்திய வங்கி 13.0 சதவீதத்தினைப் பிரதிபலித்தது.

### இலங்கை மத்திய வங்கி

**2007இல் வெளிநாட்டுச் சொத்துக்களிலான அதிகரிப்பு மற்றும் உள்நாட்டுச் சொத்துக்களிலான குறைவுடன் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள் 14.0 சதவீதத்தினால் அதிகரித்தது.** வெளிநாட்டுச் சொத்துக்களிலான அதிகரிப்பு பெருமளவில் அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணய பெறுகைகளை கொள்வனவு செய்தமையின் காரணமாக ஏற்பட்டதாகும்.

**அட்டவணை 8.2 முக்கிய நிதியியல் நிறுவனங்களின் மொத்தச் சொத்துக்கள்**

| | 2006(அ) | | 2007 (ஆ) | |
|---|---|---|---|---|
| | ரூ.பில் | மொத்த சதவீதப் பங்கு% | ரூ.பில் | மொத்த சதவீதப் பங்கு% |
| **வங்கித்தொழில்துறை** | 2,635.0 | 70.6 | 3,068.5 | 71.0 |
| மத்திய வங்கி | 492.8 | 13.2 | 561.9 | 13.0 |
| உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்(இ) | 1,786.9 | 47.9 | 2100.0 | 48.6 |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 355.3 | 9.5 | 406.6 | 9.4 |
| **வங்கியல்லா வைப்புக்களை ஏற்கும் நிதியியல் நிறுவனங்கள்** | 140.9 | 3.8 | 177.1 | 4.1 |
| பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் | 108.2 | 2.9 | 142.5 | 3.3 |
| கூட்டுறவு கிராமிய வங்கிகள் | 27.8 | 0.7 | 28.7 | 0.7 |
| சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கம் | 4.9 | 0.1 | 5.9 | 0.1 |
| **சிறப்பியல்பு வாய்ந்த ஏனைய நிதியியல் நிறுவனங்கள்** | 170.8 | 4.6 | 192.9 | 4.5 |
| சிறப்பியல்பு வாய்ந்த குத்தகையிடல் கம்பனிகள் | 78.0 | 2.1 | 96.0 | 2.2 |
| முதன்மை வணிகர்கள் | 49.9 | 1.3 | 54.2 | 1.3 |
| வணிக வங்கிகள் | 30.5 | 0.8 | 31.4 | 0.7 |
| பங்குத்தரகர் கம்பனிகள் | 5.7 | 0.2 | 3.8 | 0.1 |
| நம்பிக்கைக் கூறுகள் | 5.4 | 0.1 | 6.3 | 0.1 |
| துணிகர மூலதனக் கம்பனிகள் | 1.3 | 0.0 | 1.1 | 0.0 |
| கொடுகடன் தரமிடல் முகவர்கள் | 0.1 | 0.0 | 0.1 | 0.0 |
| **ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள்** | 786.8 | 21.1 | 884.6 | 20.5 |
| காப்புறுதிக் கம்பனிகள் | 117.0 | 3.1 | 133.1 | 3.1 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 492.1 | 13.2 | 560.0 | 13.0 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 67.0 | 1.8 | 78.8 | 1.8 |
| தனியார் ஊழியர் சேமலாப நிதியம் | 95.8 | 2.6 | 96.2 | 2.2 |
| அரசபணி சேமலாப நிதியம் | 15.0 | 0.4 | 16.5 | 0.4 |
| **மொத்தம்** | 3,733.5 | 100.0 | 4,323.0 | 100.00 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகள் மற்றும் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகள் இரண்டினதும் ஒன்று திரட்டப்பட்ட சொத்துக்கள்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**முக்கியமாக திறைசேரி உண்டியல்களது உடமைகளிலான குறைவின் காரணமாக மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தன.** இவ்வாண்டுக் காலப்பகுதியில் 11.7 பில்லியன் ரூபா தற்காலிக முற்பணங்களிலான மத்திய வங்கி அரசிற்கு வழங்கியது. இது பெருமளவில் அரசாங்கத்தின் முதலாவது பன்னாட்டு முறி வழங்கலின் பெறுகைகளினால் ஏறத்தாள 63 பில்லியன் ரூபாவினால் அதிகரித்த மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களுடன் இணைந்து சந்தையில் கணிசமானளவு மிதமிஞ்சிய திரவத்தன்மைக்கு வழிவகுத்தது. அரசாங்கம் முறிகளது பெறுகைகளினைப் பயன்படுத்தி 20 பில்லியன் ரூபா பெறுமதியான மத்திய வங்கியுடனான அதன் திறைசேரி உண்டியல்களது உடமையை இளைப்பாறச் செய்தமை சந்தையிலிருந்த மிதமிஞ்சிய திரவத் தன்மையின் ஒரு பகுதியினை குறைப்பதற்கு துணைபுரிந்தது. மேலும் வங்கியின் திறைசேரி உண்டியல் உட்டமைகளது உடனடி விற்பனைகளூடாக மத்திய வங்கி மிதமிஞ்சிய திரவத்தன்மையை உள்ளீர்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. இதற்கு மேலதிகமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளினூடாக நாளாந்த அடிப்படையில் திரவத்தன்மை ஈர்த்துக் கொள்ளப்பட்டது. இதன்படி, 2007 இறுதியில் வங்கியின் திறைசேரி உண்டியலின் உடமைகள் 23.5 பில்லியன் ரூபாவினால் 41.8 பில்லியன் ரூபாவிற்கு வீழ்ச்சியடைந்தது.

**அட்டவணை 8.3 வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளின் பரம்பல்**

| வகை | 2006 (அ) முடிவில் | 2007 (ஆ) முடிவில் |
|---|---|---|
| **உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்** | | |
| i. **உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை** | 23 | 23 |
| உள்நாட்டு வங்கிகள் | 11 | 11 |
| வெளிநாட்டு வங்கிகள் | 12 | 12 |
| ii. **வர்த்தக வங்கிக் கிளைகளும் ஏனைய பணி நிலையங்களும்** | 3,537 | 4,203 |
| கிளைகள் | 1,737 | 1,934 |
| உள்நாட்டு வங்கிக் கிளைகள் | 1,675 | 1,758 |
| முதன்மைக்கிளைகள் | 1,171 | 1,253 |
| விரிவாக்க/ கொடுப்பனவு அலுவலகங்கள்/ பணிக்கரும பீடங்கள் | 492 | 493 |
| கடல் கடந்த கிளைகள் | 12 | 12 |
| வெளிநாட்டு வங்கிக் கிளைகளும் ஏனைய பணி நிலையங்களும் | 62 | 176 |
| கிளைகள் | 39 | 42 |
| ஏனைய பணி நிலையங்கள் | 23 | 134 |
| மாணவர்களின் சேமிப்புப் பிரிவுகள் | 1,800 | 2,269 |
| **உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்** | | |
| i. **உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்த எண்ணிக்கை** | 14 | 15 |
| பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | 6 | 6 |
| தேசிய சேமிப்பு வங்கி | 1 | 2 |
| நீண்டகால கடன்வழங்கும் நிறுவனங்கள் | 3 | 3 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 2 | 2 |
| தனியார் சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகள் | 2 | 2 |
| ii. **உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிக் கிளைகளும் ஏனைய பணி நிலையங்களும்** | 591 | 627 |
| கிளைகள் | 379 | 402 |
| பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | 204 | 215 |
| தேசிய சேமிப்பு வங்கி | 114 | 115 |
| நீண்டகால கடன் வழங்கும் நிறுவனங்கள் | 11 | 13 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 28 | 28 |
| தனியார் சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகள் | 22 | 31 |
| ஏனைய பணி நிலையங்கள் | 34 | 47 |
| மாணவர்களின் சேமிப்புப் பிரிவுகள் | 178 | 178 |
| **அனைத்து வங்கிக் கிளைகளும் ஏனைய பணி நிலையங்களும்** | 4,128 | 4,830 |
| **தன்னியக்க கூற்றுப்பொறிகளின் மொத்த எண்ணிக்கை** | 1,155 | 1,422 |
| **விற்பனை நிலையங்களில் இலத்திரனியல் நிதிமாற்றல் வசதிகளின் மொத்த எண்ணிக்கை** | 8,753 | 12,214 |
| **வங்கித்தொழில் அடர்த்தி :** | | |
| 100,000 ஆட்களுக்கான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக்கிளைகளின் எண்ணிக்கை | 8.7 | 9.7 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இதுவும் மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்களிலான அதிகரிப்பும் தேறிய உள்நாட்டு சொத்துக்களிலான 38.5 பில்லியன் ரூபா குறைவிற்கு காரணமாயின.

**பொறுப்புக்கள் பக்கத்தில் மத்திய வங்கியின் மொத்த நாணய வழங்கல் 2006இன் வளர்ச்சியான 18.7 சதவீதத்துடன் (24.8 பில்லியன்) ஒப்பிடுமிடத்து 10.3 சதவீதத்தினால் (16.2 பில்லியன் ரூபா) அதிகரித்தது.** நியதிச்சட்ட ஒதுக்கு நோக்கங்களுக்காக வர்த்தக வங்கிகளினால் மத்திய வங்கியில் வைத்திருக்கப்படும் வைப்புக்கள் கணிசமானளவு மாற்றத்தினைப் பிரதிபலித்து 2006இன் 26.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 10.2 சதவீதத்தினால் (8.4 பில்லியன் ரூபா) மாத்திரமே அதிகரித்தது. இது முக்கியமாக மத்திய வங்கியின் இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைக்கு தாக்குதல் செய்யக் கூடியதான ஒப்பீட்டளவில் வைப்புக்களின் தாழ்ந்த வளர்ச்சியின் விளைவாகும்.

எதிர்காலத்தில் எதிர்பாராத இடர்நேர்களினை தணிப்பதற்கு அவசியமான உள்நாட்டுச் சொத்துக்களின் விகிதமாக 2007இல் பொது ஒதுக்குகள் அதிகரித்ததுடன் மத்திய வங்கியின் ஐந்தொகையின் உறுதி மேலும் மேம்பாடடைந்தது.

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

**தொடர்ந்து செல்லும் பொருளாதார விரிவாக்கத்தினால் ஆதரவளிக்கப்பட்டு சொத்துக்களின் வளர்ச்சி, விநியோக வழிகளிலான விரிவாக்கம், இடர்நேர்வு முகாமைத்திலான மேம்பாடு இடர்நேர்வினை உள்வாங்கும் இயலளவு மற்றும் புதுமை புனைதல் போன்றவற்றினால் பிரதிபலிக்கப்பட்டவாறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் செயற்பாடுகள் 2007இல் மேலும் மேம்பாடடைந்தது.** 2007 இறுதியில் 1,934 கிளைகள் மற்றும் 2,269 ஏனைய பணி நிலையங்களைக் கொண்டதொரு வலையமைப்பினூடாக 23 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தொழிற்பட்டன. இந்த வலையமைப்பிற்கு அனுசரணையாகவும் அட்டையினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு முறைகளை நோக்கிய படிப்படியான நகர்வினையும் பிரதிபலித்து 1,422 தன்னியக்க கூற்றுப் பொறிகள் விற்பனை நிலையங்களில் 12,214 இயந்திரனியல் நிதி மாற்றல் வசதிகள் மற்றும் 16 முழுமையான இணைய வங்கித் தொழில் நுழைவாயில் பணிகள் காணப்பட்டன. தலா வருமானத்திலான அதிகரிப்பு மற்றும் அதிகரித்த போட்டி போன்றவற்றினைச் செயற்பாட்டிலுள்ள கெர்டுகடன் அட்டைகளின் மொத்த எண்ணிக்கை 2006இன் இறுதியில் 811,289 இலிருந்து 2007 இறுதியில் 889,780ஆக அதிகரித்தது. அதிகரித்த போட்டியின் நோக்கில் புதிய சந்தைகளினை அணுகுவதில் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் தற்போதுள்ள சந்தைப் பங்கை பேணிக் கொள்வதற்குமாக பல வங்கிகள் தகவல் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட புதுமைவாய்ந்த பணிகளான கையடக்கத் தொலைபேசிகளினுடான வங்கித் தொழில் போன்றவற்றை அறிமுகப்படுத்தின.

**இவ்வாண்டுக் காலத்தில் புதிய வழிகாட்டல்களின் அறிமுகம் மற்றும் இணக்கப்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையினை நோக்கியதான ஒரு நகர்வு போன்றவற்றினால் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மேற்பார்வைக் கட்டமைப்பு மேலும் வலுவடைந்தது.** வங்கிகளிலான பங்கு உடமை கடன் வசதிகளின் அதிகூடிய தொகை, கம்பனி ஆளுகை, பாசல் II மற்றம் புதிய மூலதனக் கருவிகள் போன்றவை தொடர்பில் பல்வேறு வழிகாட்டல்கள் இவ்வாண்டில் வழங்கப்பட்டது. இத்தகைய முன்மதியுடைய வழிமுறைகள் உயர்வடைந்த இடர்நேர்வு முகாமைத்துவம், குறைவடைந்த வட்டி முரண்பாடுகள் மற்றும் வங்கிகளில் மேம்பாடடைந்த கம்பனி ஆளுகை போன்றவற்றினூடாக வங்கிகளில் ஆற்றல் வாய்ந்த தன்மையினை மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. புதிய ஒழுங்கு விதிகளினை பின்பற்றுவதற்கு தயார்படுத்துவதற்காக வங்கித் தொழில்துறையுடன் மத்திய வங்கி ஒன்றிணைந்து இயலளவினை கட்டியெழுப்புவதனை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது.

**சிறப்புக் குறிப்பு 19**

## வங்கிகளில் கம்பனி ஆளுகை

### 1. கம்பனி ஆளுகை என்றால் என்ன?

கம்பனி ஆளுகையானது ஒரு கம்பனியின் முகாமைத்துவ, அதனுடைய பணிப்பாளர்சபை, அதனுடைய பங்குதாரர்கள் மற்றும் ஏனைய அக்கறையுடைய தரப்பினர்களுக்கிடையிலான தொடர்புகளின் ஓர் வரையறையுடன் தொடர்புபடுகின்றது. இது கம்பனியினுடைய நோக்கங்களை பின்பற்றுவதனுடைய அர்த்தங்களினூடாக கட்டமைப்பக்களை வழங்குவதுடன் செயற்பாட்டை கண்காணிப்பதனையும் வரையறை செய்கின்றது.[1] இதன் பிரகாரம் கம்பனி ஆளுகைக் கொள்கைகளின் சுருக்கமாக்கமானது, கம்பனிகள் முன்னெச்சரிக்கைகளுடன் மற்றும் வெளிப்படையான முறையில் முகாமை செய்யப்படுகிறது. மற்றும் பணிப்பாளர்கள் கம்பனிகளுடைய வியாபார செயற்பாடுகளுக்கான பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் கணக்கறிதகைமையை கொண்டிருக்கிறார்கள் என்பதையும் உறுதி செய்துகொள்கிறது.

### 2. வங்கிகளில் கம்பனி ஆளுகைக்கான தேவை:

ஓர் நிறுவனத்தின் பொருளாதார ஆரோக்கியத்துக்காக அதனுடைய கவனிக்கத்தக்க முக்கியத்துவத்தின் காரணமாக கம்பனி ஆளுகையானது பொது மக்கள் நலன்களின் ஓர் சிறந்த செயலாக கவரப்பட்டுள்ளது. இது “என்ரோன்” மற்றும் “வோல்ட்கொம்” போன்ற வியாபார உலகை ஆட்டம்காண செய்த 2000களின் ஆரம்பத்தில் நிகழ்ந்த மிகப் பெரிய கம்பனி சீர் குழைவுகள் மற்றும் தோல்விகளை தொடர்ந்து ஓர் உயர்மட்ட முக்கியத்துவத்தை பெற்றுக்கொண்டது. அதனைத் தொடர்ந்து உலகம் முழுவதிலுமுள்ள நிறுவனங்கள், ஒழுங்குபடுத்துனர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் பல்வேறு கம்பனி ஆளுகை விதிகளை உருவாக்கியது. பல்வேறு காரணங்களுக்காக நவீன பொருளாதாரத்தில் ஏனைய நிறுவனங்களைப் போலல்லாது வங்கிகள் ஓர் விசேட முக்கியத்துவத்தை கொண்டிருக்கிறது என பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. முதலாவதாக, வங்கிகளானது நிதியியல் முறைமையினுடைய கட்டுப்படுத்தும் பகுதியாக காணப்படவதுடன் வங்கிகளுடைய தோல்விகள் ஓர் பொருளாதாரத்தின் இயைபான செயற்பாட்டுக்கு முக்கியத்துவமுடையதாக காணப்படுகின்ற ஓர் நாட்டின் சேமிப்புக்கள், முதலீடு மற்றும் கொடுப்பனவு சேவைகள் போன்றவற்றின் செயற்பாடுகளில் தாக்கத்தை உண்டுபண்ணும். வங்கித் தொழில் நெருக்கடிகள் தோல்வியடைந்த நிதியியல் நிறுவனங்களில் மீள்கட்டமைப்பிற்கான வெளியீட்டு கிரயம் மற்றும் அரசிறை கிரயம் என்பவற்றின் அடிப்படையில் ஓர் பொருளாதாரத்துக்கு மிகப் பெரிய கிரயங்களை ஏற்படுத்துவதாக அறியப்பட்டுள்ளது. இரண்டாவது, வங்கித் தொழில் முறைமையானது அதனுடைய வியாபாரத்தின் ஊடாக பணத்தை உருவாக்கக்கூடிய இயலுமையை கொண்டிருப்பதுடன் இவ்வாறு உருவாக்கப்பட்ட பணமானது பொருளாதார கொடுக்கல் வாங்கல்களுக்கு நிதியிடுவதற்காக கிடைக்கத்தக்கதாகவுள்ள பண நிரம்பலுடைய மிகப் பெரிய பகுதியாக காணப்படுகிறது. எனவே வங்கிகளுடைய தோல்விகள் பொதுமக்களிடத்து காணப்படுகின்ற நாணய நிலைமைகள் மற்றும் பொருளாதாரத்தை கடுமையாக தாக்கததுக்குள்ளாக்கும்.

வங்கிகள் தொடர்பில் ஏன் கம்பனி ஆளுகைக்கு அதிக முக்கியத்துவத்தை எடுத்திருக்கின்றன என்பதற்கு மேலும் இரு தொடர்புடைய காரணிகள் காணப்படுகின்றன. முதலாவது, வங்கிகள் வைப்பாளர்களுடைய நிதிகளுடன் கையால்வதால் அதாவது வைப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட பணத்தை வங்கிகள் பயன்படுத்துவதால் வங்கிகளுடைய செயற்பாடு தொடர்பில் ஓர் உளவுரன் விடயம் காணப்படுகின்றது. வைப்பாளர்களின் நிதிகளுடன் ஒப்பிடுமிடத்து வங்கிகளில் பங்குதாரர்களின் நிதிகள் குறைந்தததாகவே காணப்படுவதுடன் வங்கிகள் உயர்ந்த கடன்படு நிறுவனமாக்கியுள்ளது. ஓர் வங்கி தோல்வியடையப்பட்டிருந்தால் பங்குதாரர்களைக் காட்டிலும் வைப்பாளர்களுக்கே அதி உயர் நாணய நட்டத்தை ஏற்படுத்தியிருக்கும். எனவே வைப்பாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகிறது. இவ் விடயத்தின் அடிப்படையில் வங்கிகளுடைய பங்குரிமையைக் கொண்டிராத அக்கறையுடைய தரப்பினரான வைப்பாளர்களுடைய நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளும் கடமையை பணிப்பாளர் சபைகள் மற்றும் வங்கிகளுடைய முகாமைத்துவம் கொண்டிருப்பதால் ஏனைய கம்பனிகளுக்கு பிரயோகிக்கும் வழமையான நோக்கங்களுக்கு மேலாக வங்கிகளின் கம்பனி ஆளுகைக்கான முக்கியத்துவம் விரிவடைந்து செல்கிறது.

இரண்டாவது, ஓர் வங்கித் தொழில் நிறுவனத்தில் வியாபாரத்தினுடைய நிலைத்திருத்தலுக்காக பொதுமக்கள் / வாடிக்கையாளர் நம்பிக்கை முக்கியத்துவமுடையதாக இருக்கிறது. பணிப்பாளர்களுடைய நடவடிக்கை ஓர முக்கிய அம்சமாக காணப்படுவதுடன் அது வங்கிகளின் பொதுமக்களுடைய நம்பிக்கையை போனுவதனை நோக்கி பங்களிக்கின்றது. ஓர் வங்கியின் நம்பிக்கையில் ஏற்படக் கூடிய ஏதாவது இழப்பு அந்த வங்கியின் குறைவுக்கு காரணமாக அமையலாம் என்பதுடன் அவை அந்த வங்கியினை மாத்திரமல்ல பல்வகை தாக்கத்தையும் கொண்டிருக்க முடிவதுடன் ஏனை வங்கிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தி நிதியியல் முறைமையில் உதியற் றதன்மைக்கு இட்டுச் செல்லும் ஆகவே பணிப்பாளர்கள் மற்றும் முகாமைத்துவத்திற்கான நடைமுறை விதிகளினுடைய உருவாக்கமானது பொதுவில் வங்கிகள் மற்றும் நிதியியல் உறுதித் தன்மையினுடைய பொருளாதார ஆரோக்கியத்தினை பாதுகாப்பதை நோக்கிய ஓர் முக்கியத்துவருடைய பகுதியாகும்.

### 3. அனுமதியளிக்கப்பட்ட வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை பற்றிய பணிப்புரைகள்

இலங்கை மத்திய வங்கியானது விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டினையும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினையும் உறுதி செய்ய வேண்டிய ஓர் சட்டரீதியான கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. மேலும், நிதியியல் முறமையின் உறுதித்தன்மைக்கு ஓர் முற் தேவைப்பாடாக இருக்கின்ற வங்கித் தொழில் முறமையினுடைய உறுதித் தன்மையினை உறுதி செய்வதற்கு நாணயச் சட்டம் மற்றும் வங்கித் தொழில் சட்டம் என்பவற்றால் இதற்கு அதிகாரமளிகப்பட்டதற்கேற்ப ஒழுங்குபடுத்தல் மற்றும்

[1] கம்பனி ஆளுகையின் தத்துவங்கள் : பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு.

மேற்பார்வை அதிகாரத்தை பயன்படுத்துகின்றது. மேற்பார்வையானது வங்கிகள் தகுந்த முறைமைகள், கட்டுப்பாடுகள் மற்றும் வங்கிகளுடைய வியாபாரத்தில் உள்ளார்ந்தமாக எடுக்கின்ற இடர் நேர்வுகளுடைய முன்னெச்சரிக்கை முகாமைத்துவத்துக்கான நடைமுறைகள் என்பவற்றை கொண்டிருப்பதனை ஊக்குவிப்பதுடன் அதனை உறுதி செய்வதனை மையப்படுத்தியுள்ளது. எப்படியாயினும் மத்திய வங்கியினுடைய ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை கடமையிலிருந்து உளவுரன் பாதிக்கும் பிரச்சனையை ஏற்படுத்துகிறது. அதாவது மத்திய வங்கியின் பிரசன்னமில்லாமல் எடுக்கப்பட வேண்டியதிலும் பார்க்க அதின இடர் நேர்வுகளை எடுப்பதற்கான வங்கி வாடிக்கையாளர்களுடைய மற்றும் முகாமையாளருடைய விருப்பார்வம் முகாமை செய்ய வேண்டியதாயிருக்கின்றது. மத்திய வங்கியானது வங்கிகளுடைய இடர்நேர் முகாமையாளராக இருக்க முடியாது ஏனெனில் வங்கித் தொழில் வியாபாரத்தை நடாத்துவதற்கான வங்கி முகாமையாளர்களின் பாதங்களை நடைபோட வைக்கமுடியாது. ஆகவே வங்கிகளின் வியாபாரம் முக்கியத்துவமுடையதாக இருப்பதனால் இடர்நேர்வு முகாமைத்துவத்துக்கான ஆரம்பப் பொறுப்பு கூறுதல் மற்றும் கணக்கறிவு தகைமையுடைய திருத்தல் என்பவற்றை பணிப்பாளர் சபை கொண்டிருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் 2002 யூனில் வங்கித் தொழில்துறையிலிருந்து நியமிக்கப்பட்ட ஓர் செயற்பாட்டு குழுவால் கட்டமைக்கப்பட்ட கம்பனி ஆளுகையினுடைய சுயமாகப் பின்பற்றப்படும் விதிகளை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. 2006 பெப்ருவரியில் வங்கி மேற்பார்வைக்கான பாசல் குழுவானது வங்கித் தொழில் நிறுவனங்களுக்கான கம்பனி ஆளு கையை உயர்த்தும் பொருட்டு எட்டுக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட முறைமை ஒன்றை வெளியிட்டது. ஓர் சுயமான விதிகளின் உள்ளாந்தமாய் எழுகின்ற குறைபாடுகள் மற்றும் கம்பனி ஆளுகையின் சர்வதேச விருத்திகள் என்பவற்றின் நோக்கில், மத்திய வங்கியானது 2007 சனவரியில் விநியோகித்த 2007 மற்றும் அதற்கு அப்பாலுமான நாணய மற்றும் நிதியியல் துறை கொள்கை களுக்கான வழிகாட்டல்கள், சட்ட ரீதியான கம்பனி ஆளுகை விதிகள் 2007 ஓகத்தில் ஓர் வரைபு விநியோகிக்கப்பட்டது. தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து மேலும் அபிப்பிராயங்களை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட வரைபு ஒன்று 2007 திசெம்பரில் வெளியிடப்பட்டது.

இப்பணிப்புரைகள் கம்பனி ஆளுகையை குறித்தசில அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டு விருத்தி செய்யப்பட்டது. இதில் உள்ளடக்கியுள்ள பிரதான விடயங்கள் பணிப்பாளர் சபையினுடைய சபைர் பொறுப்புக்கள், சபையினுடைய உள்ளடக்கம், பணிப்பாளர்களுடைய தகுதி மற்றும் பொருத்தமான தன்மையை மதிப்பிடும் அளவீட்டு விடயங்கள், சபையால் கையளிக்கப்பட்ட முகாமைத்துவச் செயற்பாடுகள், பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் தலைவருடைய கடமையின் வேறுபடுத்தல்கள், ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பில் சபையால் நியமிக்கப்படும் சபைகள், கணக்காய்வு நியமனங்கள் மற்றும் மனிதவளம் மற்றும் ஊதியம், தொடர்புடைய தரப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிதியியல், கூற்றுக்களின் வெளிப்படுத்தல்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

இப்புதிய நியமங்கள் நோக்கிய ஓர் இயைபான மாற்றத்திற்கு உதவும் பொருட்டு இவ்விகிதத்தினுள் பல்வேறு பிரதான விடயங்கள் தொடர்பில் மாற்றத்துக்கு இட்டுச் செல்லும் ஏற்பாடுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. இம் மாற்றத்திற்கு செல்லும் விதிகள் பிரதானமாக வயது மற்றும் பணிப்பாளருடைய பதவிகாலம் மற்றும் வெளியகற்றல் விதிகள் என்பன உள்ளடக்கியுள்ளன. இதன் பிரகாரம் 2007இன் இறுதியில் 70 வயதைத் தாண்டிய பணிப்பாளர்கள் 2011வரை ஓர் இடையீட்டு அடிப்படையில் பதவிவகிக்க முடியும். வங்கிகளினது 204 பணிப்பாளர்களில் 30 ரே மாத்திரமே பதவியை விட்டு விலக வேண்டியிருக்க வேண்டுமென புள்ளிவிபரவியல்கள் வெளிக்காட்டுகிறது. அத்துடன் 2011ஆம் ஆண்டுவரை படிப்படியான மாற்றத்தினூடாக தொடர்புடைய பணிப்பாளர்கள் பதவி விலக இப்பணிப்புரை மாற்றத்திற்குள்ளாகும் விதிகள் அனுமதிப்பதால அவர்கள் கூட உடனடியாக பதவி விலக வேண்டியதில்லை. எனவே இத்தகைய நடவடிக்கைகள் இயைபான ஒரு மாற்றத்திற்கு உதவுவதுடன் பதிய யோசனைகளை பணிப்பாளர் சபைகளுக்குள் படிப்படியாக புகுத்ததல், நவீன வங்கித் தொழில் தொழில்நுட்பம் மற்றும் சாதனங்களுடன் இணையாக வைத்திருப்பதற்கு அவற்றை இயலச் செய்தது.

இலங்கையில் நிதியியல் முறைமையில் ஏறத்தாள 90 சதவீதமானவற்றை வங்கித் தொழில்துறை கட்டுப்படுத்துவதால், நிதியியல் முறைமையில் உறுதித்தன்மையினை உறுதிசெய்வதற்கு இத்தகைய நிறுவனங்களின் பாதுகாப்பு மற்றும் உறுதித்தன்மையினை உயர்த்தி வங்கித் தொழில் நிறுவனங்களின் உறுதித்தன்மையினை வலுப்படுத்தலை நோக்கி செல்ல பங்களிக்கின்றது. இதன் மூலம் நிதியியல் முறமையின் உறுதித்தன்மையினை பேனுவதனை நோக்கிச் செல்லவும் பங்களிக்கின்றது.

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கட்டமைப்பிலான அபிவிருத்திகள்: இறுக்கமான நாணயக் கொள்கை மற்றும் உயர்த்தப்பட்ட முன்மதியுடைய தேவைப்பாடுகளினால் தூண்டப்பட்டு முக்கியமாக கடன் மற்றும் முற்பணங்களின் தாழ்ந்த வளர்ச்சியின் காரணத்தினால் மொத்தச் சொத்துக்களின் வளர்ச்சி 2006இல் பதிவு செய்யப்பட்ட 22.3 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2007இல் 17.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** மொத்தச் சொத்துக்கள் 2007 இறுதியில் 2,100 பில்லியன் ரூபாவாகவிருந்தது. வங்கித் தொழில்துறையில் உள்நாட்டு தனியார் வங்கிகள் சொத்துக்களில் 18.4 சதவீத வளர்ச்சியினை பதிவு செய்த அதே வேளை, அரசுடமை வங்கிகள் சொத்துக்களின் வளர்ச்சியில் 15.2 சதவீதத்தை காட்டின. சொத்துக்களின் மொத்த வளர்ச்சியில் உள்நாட்டு தனியார் வங்கிகள் மற்றும் அரசுடமை வங்கிகளினதும் பங்களிப்பு முறையே 47 சதவீதம் மற்றும் 35 சதவீதமாக காணப்பட்டது. இதேவேளை, மூலதன நிதிகளின் அதிகரிப்பினால் ஆதரவளிக்கப்பட்டு வெளிநாட்டு வங்கிகளின் சொத்துக்கள் ஒப்பீட்டளவில் ஒரு உயர்ந்த வீதமான 21.3 சதவீதத்தில் அதிகரித்தன. கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2006இன் 27.6 சதவீதத்திற்கெதிராக 2007இல் 18.6 சதவீதத்தினால்

**வரைபடம் 8.1** வர்த்தக வங்கியின் நிதியங்களின் மூலங்களும் பயன்பாடுகளும் (2007 இறுதியிலுள்ளவாறு)

வரைபடம் 8.1.2
வர்த்தக வங்கிகளின் நிதியங்களின் பயன்பாடுகள்




வரைபடம் 8.1.2
வர்த்தக வங்கிகளின் நிதியங்களின் பயன்பாடுகள்




வளர்ச்சியடைந்தது. இதனொரு விளைவாக, சொத்துக்களின் வளர்ச்சியில் கடன்கள் மற்றும் முற்பணங்களின் பங்களிப்பு 2006இல் ஏறத்தாள 80 சதவீதத்திலிருந்து 2007இல் 68 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. செயற்படும் கடன்கள் மீதான ஒதுக்கிடலின் அறிமுகம் கடன்கள் மற்றும் முற்பணங்களின் பங்களிப்பு 2006இல் ஏறத்தாள 80 சதவீதத்திலிருந்து 2007இல் 68 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**குறைவடைந்து செல்லும் போக்கு காணப்பட்டபோதும், இன்னமும் உயர்வான கடன் மற்றும் முற்பணங்களின் வளர்ச்சியானது முக்கியமாக அரசுடமை வங்கிகளினதும் உள்நாட்டு தனியார் வங்கிகளினதும் கொடுகடன் சொத்துப்பட்டியலின் விரிவாக்கத்தினால் பெறப்பட்டதாகும்.** கடன் மற்றும் முற்பணங்களின் மொத்த அதிகரிப்பு 2006இல் பதிவு செய்யப்பட்ட 249 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுமிடத்து 2007இல் 214 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. கடன்கள் மற்றும் முற்பணங்களின் முழுமொத்த 18.6 சதவீதத்தில் அரசுடமை வங்கிகள் மற்றும் உள்நாட்டு தனியார் வங்கிகள் முறையே 40 சதவீத மற்றும் 45 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்தன. எனினும் ஆண்டு வளர்ச்சியின் நியதிகளில் வெளிநாட்டு வங்கிகள் கடன்கள் மற்றும் முற்பணங்களின் உயர்ந்த வளர்ச்சி வீதமான 21.3 சதவீதத்தினையும் அதனைத் தொடர்ந்து உள்நாட்டுத் தனியார் வங்கிகள் 18.6 சதவீதமானதொரு வளர்ச்சியினையும் பதிவு செய்தன.

**உயர்வடைந்து செல்லும் வட்டிவீதச் சூழலில் விரிவடைந்து செல்லும் வட்டிவீத அளவுகள், தொழிற்பாட்டு வினைத்திறனிலான மேம்பாடு மற்றும் செயற்படாக் கடன்களின் மீள்பெறுகை போன்றனவான இலாபங்களில் ஒரு உறுதியான வளர்ச்சியை பதிவு செய்வதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழிசெய்தது.** இதற்கமைய வரிக்கு முன்னான இலாபங்கள் 2006ஆம் ஆண்டின் 32 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2007இல் ரூ.38 பில்லியனுக்கு 27 சதவீதத்தினால் பங்களித்தன. உள்நாட்டு தனியார் வங்கிகளின் துறைசார்ந்த இலாப வளர்ச்சிக்கான பங்களிப்பு 54 சதவீதமாக இருந்தது. சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குகள் மீதான வருவாய் ஆகிய நியதிகளில் இலாபத்தன்மை முன்னைய ஆண்டிலும் பார்க்க மேம்பட்டதுடன் 2007 இறுதியில் முறையே 1.9 சதவீதமாகவும், 16.0 சதவீதமாகவும் காணப்பட்டது.

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் நிதி மூலங்களும் பயன்பாடுகளும்:** மொத்த நிதியியடல் கடன் பெறுகைகள் இன்னமும் ஏறத்தாள 17.7 சதவீதத்திற்கு வகைகூறிய போதிலும் 2007இல் ஒரு நிதியிடல் மூலமாக கடன் பெறுகையில் 2006இல் காணப்பட்ட அதிகரித்துச் செல்லும் போக்கு மொத்த நிதியியல் கட்டமைப்பில் வைப்புக்களின் பங்கு ஏறத்தாள 69 சதவீதமாக தொடர்ந்தும் மாற்றமின்றிக் காணப்பட்டது. குடியிருப்பாளரின் உயர்ந்த செலவிடத்தக்க வருமானம் மற்றும் கொடுகடன் உருவாக்கம் போன்றவற்றினால் பிரதிபலித்து மொத்த வைப்புக்களில் ஏறத்தாள 17.4 சதவீதத்தினால் 1,450 பில்லியன் ரூபாவாக வளர்ச்சியடைந்தது. உயர்வடைந்து செல்லும் வட்டி வீதச் சூழலில் பணத்தின் உயர்ந்த சந்தர்ப்பச் செலவின் அடிப்படையில் வட்டி உழைக்காத ரூபாக கேள்வி வைப்புக்கள் 2007இல் 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த அதே வேளை ரூபாவின் நிலையான வைப்புக்களும் சேமிப்பு வைப்புக்களும் முறையே ஒரு உயர்ந்த வீதமான 38 சதவீதம் மற்றும் 7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இவ்வாண்டில் 20 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வெளிநாட்டு நாணய வைப்புக்கள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வைப்புத் தளத்திலும் ஏறத்தாள 26 சதவீதத்திற்கு வகைகூறியது.

**மொத்த மூலவளத் தளத்தில் மூலதன நிதிகளின் பங்கு 2006இன் 7.3 சதவீதத்திலிருந்து 2007இல் 7.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.** இது முக்கியமாக பங்கு வழங்கல்கள் மற்றும்

**அட்டவணை 8.4** **உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் சொத்துக்களும் பொறுப்புக்களும் (அ)**

ரூபா மில்லியன்

| விடயம் | 2006 முடிவில் | 2007(ஆ) முடிவில் | மாற்றம் 2006/2007 தொகை | % |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| திரவச் சொத்துக்கள் | 536,329 | 610,750 | 74,421 | 13.9 |
| கையிலுள்ள பணம் | 24,073 | 29,547 | 5,475 | 22.7 |
| மத்திய வங்கியிலிருந்து வரவேண்டியவை | 88,424 | 95,036 | 6,612 | 7.5 |
| திறைசேரி உண்டியல்கள் | 61,143 | 89,408 | 28,265 | 46.2 |
| திறைசேரி முறிகள் | 130,938 | 132,666 | 1,728 | 1.3 |
| ஏனைய சொத்துக்கள் | 231,750 | 264,092 | 32,342 | 14.0 |
| **கடன்களும் முற்பணங்களும் (வட்டித் தொங்கல் நீங்கலாக)** | 1,151,160 | 1,365,236 | 214,076 | 18.6 |
| கழி : ஒதுக்கங்கள் | 46,440 | 49,206 | 2,766 | 6.0 |
| தேறிய கடன்களும் முற்பணங்களும் | 1,104,720 | 1,316,030 | 211,310 | 19.1 |
| நிலையான மற்றும் ஏனைய சொத்துக்களும் | 145,900 | 173,248 | 27,348 | 18.7 |
| **பொறுப்புக்கள்** | | | | |
| மூலதன நிதியங்கள் | 129,744 | 162,491 | 32,747 | 25.2 |
| **மொத்த வைப்புக்கள்** | 1,235,537 | 1,450,095 | 214,558 | 17.4 |
| கேள்வி வைப்புக்கள் | 183,074 | 173,333 | -9,741 | -5.3 |
| தவணை, சேமிப்பு வைப்புக்கள் | 993,021 | 1,204,879 | 211,859 | 21.3 |
| ஏனையவை | 59,442 | 71,883 | 12,441 | 20.9 |
| **கடன்பாடுகள்** | 338,013 | 372,721 | 34,708 | 10.3 |
| உள்நாட்டு கடன்பாடுகள் | 215,295 | 231,765 | 16,470 | 7.6 |
| வெளிநாட்டு கடன்பாடுகள் | 122,719 | 140,956 | 18,237 | 14.9 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | 83,654 | 114,721 | 31,066 | 37.1 |
| **மொத்தச் சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | 1,786,949 | 2,100,028 | 313,079 | 17.5 |

(அ) ஒழுங்குப்படுத்தல் நோக்கங்களுக்காக திரட்டப்படும் தரவுகளுடன் ஒத்திசைவாகக் காணப்படுவதற்காக இந்த அட்டவணை திருத்தியமைக்கப்பட்டுள்ளது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

நிறுத்தி வைத்திருக்கும் இலாபங்கள் போன்றவற்றினூடான புதிய மூலதனங்களது உள்வருகையினாலாகும். இதேவேளை, பாரிய நிதியிடல் மூலமான வைப்புக்களின் பங்களிப்பு தொடர்ந்தும் 69 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டது. எனினும், கடன்பாடுகள் இரு காலப்பகுதிக்குமிடையில் 19.0 சதவீதத்திலிருந்து 17.7 சதவீதத்திற்கு வீழ்சிசியடைந்தது.

**இவ்வாண்டில் திரட்டப்பட்ட மூலவளங்களில் கடன்களும் முற்பணங்களும் தொடர்ந்தும் முன்னணிப் பங்கினை ஈர்த்துக் கொண்டன.** கடனகள் மற்றும் முற்பணங்களிலான அதிகரிப்பு 214.1 பில்லியன் ரூபாவினை ஈர்த்துக் கொண்டு அவ்வாண்டில் திரட்டப்பட்ட மொத்த மூலவளங்களில் 68 சதவீதத்தினைப் பிரதிபலிக்கின்றது. இதேவேளை, முதலீடுகளின் பங்கு 2007இல் 16 சதவீதமாகவிருந்தது. ஒப்பீட்டில், கடன்களும் முற்பணங்களும் மற்றும் முதலீடுகள் 2007இல் மொத்த நிதிப்பயன்பாடுகளில் முறையே 65 சதவீதத்திற்கும் 14 சதவீதத்திற்கும் பங்களிப்புச் செய்தன.

**தனியார்துறைக் கொடுகடனின் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட பகிர்ந்தளிப்பின்படி வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நுகர்வு நோக்கங்கள் தொடர்ந்தும் ஒரு முன்னணிப் பங்கிற்கு வகை கூறின.** உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வர்த்தகத்தினை உள்ளடக்கிய வர்த்தக செயற்பாடுகளுக்கான கொடுகடனின் பங்கு 2007இல் சிறிதளவில் 30 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதேவேளை வீடமைப்பு மற்றும் கட்டவாக்கத்தினால் ஈர்க்கப்பட்ட கொடுகடனின் பங்கு 16.6 சதவீதத்திற்கு குறைவடைந்த அதேவேளை நுகர்வு செயற்பாடுகளுக்கான கொடுகடன் 2007 இறுதியில் 20.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. நுகர்வு வகையினுள் நுகர்வோர் பொருட்களின் கொள்வனவிற்கு வழங்கப்பட்ட கடன்கள் பெருமளவிலான அதிகரிப்பிற்கு வகைகூறிய அதேவேளை வதிவிட வீடமைப்பு துறைக்கான வீடமைப்பு செயற்பாடுகளுக்கான கொடுகடன் பெரியளவிலான பங்கிற்குப் பங்களிப்புச் செய்தது. வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நுகர்வுச் செயற்பாடுகள் வெளிநின்ற மொத்த கொடுகடனில் ஏறத்தாள 68 சதவீதத்திற்கு வகைகூறின.

**இறுக்கமான நாணயக் கொள்கை நெறிமுறை பற்றும் உயர்ந்த செயற்படாக்கடன் விகிதங்களினால் பிரதிபலித்து கொடுகடன் அட்டை வியாபாரத்தின் வளர்ச்சி 2007இல் குறைவடைந்தது.** பத்து வங்கிகளினால் கொடுகடன் அட்டைகளினூடாக வழங்கப்பட்ட கொடுகடன் 2006இல் பதிவு செய்யப்பட்ட 41 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 37 சதவீதத்தினால் 29 பில்லியன் ரூபாவிற்கு வகைகூறியது. கடன்களும் முற்பணங்களும் ஒப்பீட்டளவில் தாழ்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்ததன் காரணமாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்தக் கடன் சொத்துப்பட்டியலில் கொடுகடன் அட்டைக் கடன்களின் பங்கு 2.1 சதவீதத்திலிருந்து 1.7 சதவீதமாக சிறிதளவில் 2007இலும் அதிகரித்தது. இத்தகைய கடன் வழங்கலின் பிணையிடப்படாத தன்மையின்

**அட்டவணை 8.5 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கடன் அட்டைத் தொழிற்பாடுகள்**

| | 2006 (அ) | 2007 (ஆ) | மாற்றம் % |
|---|---|---|---|
| வழங்கப்பட்ட கடன் அட்டைகளின் மொத்த எண்ணிக்கை | 811,289 | 889,780 | 9.7 |
| உள்ளூர்(உள்நாட்டில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்ட) | 61,982 | 57,104 | -7.9 |
| உலகளாவிய (உலகரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட) | 749,307 | 832,676 | 11.1 |
| ஆண்டு இறுதியில் வெளிநின்ற கொடுகடன் (ரூ.மில்) | 21,125 | 28,847 | 36.6 |
| உள்ளூர்(உள்நாட்டில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்ட) | 709 | 754 | 6.3 |
| உலகளாவிய(உலகரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட) | 20,416 | 28,093 | 37.6 |
| வரவேண்டிய நிலுவை (வெளிநின்ற கொடுகடனின் %ஆக) | 6.84 | 7.05 | |
| வரவேண்டிய முன்னைய நிலுவை (வெளிநின்ற கொடுகடனின் %ஆக) | 5.24 | 7.16 | |
| வணிகர்களிடமிருந்தான தரகு (%) | 1.5-4.0 | 1.5-4.0 | |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

காரணத்தினால் கொடுகடன் அட்டைக்கடண்கள் மீது 38 - 40 சவீத வீழ்ச்சியிலானதொழு வட்டிவீதம் அளவிடப்படுகின்றது.

**அரசாங்கம் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் இரண்டினாலும் வங்கிக் கொடுகடனின் அதிகரித்த** பயன்பாட்டினொரு விளைவாக அரசதுறைக்கான வர்த்தக வங்கிகளின் மொத்த வெளிப்படுத்துகை.

**முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்:** உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முக்கிய நிதியியல் ஆற்றல் தன்மை வாய்ந்த குறிகாட்டிகள் மேம்பாடடைந்த சிறந்த இடர்நேர்வு ஈர்ப்பு இயலளவினை வங்குகின்றது. தேறிய வட்டிவீத அளவு மற்றும் தொழிற்பாட்டு செலவின் வினைத்திறன் போன்றவற்றின் அதிகரிப்பின் காரணமாக, சொத்துக்கள்மீதான வருவாய் மற்றும் பங்க மூலதனம் மீதான வருவாய் போன்றவற்றின் நியதிகளில் இலாபத்தன்மை மேம்பாடடைந்தது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் செலவு வினைத் திறனைப் பிரதிபலித்து தொழிற்பாட்டுச் செலவு விகிதம் 2006 இன் 59 சதவீதத்திலிருந்து 2007இல் 56.4 சதவீதமாக மேம்பாடடைந்தது. மூலதனப் போதுமை விகிதம், 10 சதவீதமான ஆகக் குறைந்த தேவைப்பாட்டின் தொடர்பில் 13.0 சதவீதமாகக் காணப்பட்டது. செயற்படாக் கடன்கள் 2006இல் 5.5 சதவீதத்திலிருந்து 2007இல் 4.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்ததனால் பிரதிபலிக்கப்பட்டவாறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கொடுகடன் தரம் மேம்பாடடைந்தது. இந்த மேம்பாடானது கடன் வழங்கல் சொத்துப்பட்டியல்களிலானதொரு விரிவாக்கம், வலுவான மீள் பெறுகைகள் மற்றும் சில வங்கிகள் அறவிடமுடியாக்கடன்களை பதிவழித்தது போன்றவற்றின் ஒரு தேறிய விளைவாகும். கொடுகடன் இழப்புக்களினை ஈர்ப்பதன் தாக்கத்தினை குறைத்து செயற்படாக் கடன்களிற்கு கிடைக்கத்தக்கதான ஒதுக்கங்களின் பரப்பெல்லை 2007இல் 74 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஒப்பீட்டளவில் மூலதனத்தின் விரைவான வளர்ச்சியின் காரணமாக மூலதனத்திற்கான தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் 2006இல் 13.0 சதவீதத்திலிருந்து 2007 இறுதியில் 10.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. திரவச் சொத்து விகிதம் மிகக்குறைந்த தேவைப்பாடான 20 சதவீதத்திற்கெதிராக 24.8 சதவீதமாகவிருந்தது.

**அரச வங்கிகளின் வினைத்திறனை மேம்படுத்தல்: உபாய தொழில்முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மையின் வழிகாட்டலின் கீழ் விைத்திறனை மேம்படுத்துவதற்கான அரச வங்கிகளினால் உருவாக்கப்பட்ட உபாயத் திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் 2007இல் முன்னேற்றமடைந்தது.** இவ்வாண்டில் கிளைத் தனியார்மயமாக்கல், மூலதனப் போதுமை, முகாமைத்துவ தகவல் முறைமைகள், கடன் மீளப் பெறுகைகள் மற்றும் மனிதவள அபிவிருத்தி போன்ற விடயங்களில் மேம்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. சிறந்த தாக்குப்பிடிக்கும் தன்மையினை வழங்கி மூலதனப் போதுமை விகிதம், செயற்படாக் கடன்களின் விகிதம் மற்றும் ஒதுக்கு உள்ளடக்க விகிதம் போன்றவை மேம்பாடடைந்தன.

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

**தாழ்ந்த இலாபங்களுக்க மாறாக, முக்கிய முன்மதியுடைய குறிகாட்டிகளின் நியதிகளின் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் தொடர்ந்து தாக்குப் பிடிக்கும் தனமையைக் கொண்டிருந்தன.** 2007இல் மொத்தச் சொத:துக்கள் 14.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த அதேவேளை வரிக்கு முந்திய இலாபம் 1.4 சதவீதத்தினால் 6.1 பில்லியன் ரூபாவிற்கு வீழ்ச்சியடைந்தது. மூலதனப் போதுமை விகிதம் ஆகக் குறைந்த தேவைப்பாடான 10 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 19.4 சதவீதமாகவிருந்தது. மொத்தச் சொத்துக்களும், கடன் பெறுகைகளும் முறையே 11.5 சதவீதம் மற்றும் 22 சதவீதத்தினால் அதிகரித்தது. பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வியாபாரத் தொழிற்பாடுகளினால் பொறுப்பேற்றுக் கொண்ட இலங்கைச் சேமிப்பு வங்கியின் வருகையுடன் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 2007 இறுதியில் 15ஆக அதிகரித்தது.

**அட்டவணை 8.6 உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் துறைவாரியான பகிர்ந்தளிப்புக்கள் (அ)**

| | 2006 (ஆ) | மொத்த சதவீதபங்கு | 2007 (இ) | மொத்த சதவீதபங்கு |
|---|---|---|---|---|
| **ஆண்டில் ஒப்புதலளிக்கப்படட** | | | | |
| **மொத்தக் கடன்கள்** | 51,715 | 100 | 68,367 | 100.0 |
| வேளாண்மை | 1,101 | 2.1 | 3,532 | 5.2 |
| கைத்தொழில் | 4,548 | 8.8 | 16,728 | 24.5 |
| சுற்றுலா | 777 | 1.5 | 224 | 0.4 |
| வர்த்தகம் | 5,907 | 11.4 | 5,584 | 8.2 |
| நிதி | 13,877 | 26.8 | 11,653 | 17.0 |
| வீடமைப்பு | 15,239 | 29.5 | 17,378 | 25.4 |
| கடன் மீட்பு | 243 | 0.5 | 1,318 | 1.9 |
| ஏனைய கடன்கள் | 10,023 | 19.4 | 11,899 | 17.4 |
| **வழங்கப்பட்ட கடன்கள் (ஈ)** | 69,564 | | 59,766 | |
| ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன்களின் சதவீதமாக பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் | 135 | | 87 | |

(அ) பிரதேச அபிவிருத்தி வங்கிகள் நீங்கலாக
(ஆ) திருத்தப்பட்டவை
(இ) தற்காலிகமானது
(ஈ) முன்னைய ஆண்டுகளில் ஒப்புதலளிக்கப்பட்டு ஆனால் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களையும் உள்ளடக்குகின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

2002 ஒத்தோபரில் அதன் வியாபாரம் இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் அலுவல்களின் முறைமை வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. 2007 இறுதியில் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியின் இறை வலையமைப்பு 402 இற்கு அதிகரித்தது.

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கடன்களின் ஒரு முன்னணிப் பங்கினை வீடமைப்பு, கைத்தொழில் மற்றும் நிதியியல் துறைகள் தொடர்ந்தும் ஈர்த்துக் கொண்டன.** இவ்வாண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களில் 45.6 பில்லியன் ரூபா அல்லது 67 சதவீதத்திற்கு இந்த மூன்று துறைகளும் வகைகூறின. முக்கியமாக வீடமைப்புத் துறைக்கு பணியாற்றுகின்ற வங்கிகளின் உள்ளடக்கத்தால் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கடன் வழங்கலில் ஒரு கணிசமானளவு பங்கு வீடமைப்புத்துறையில் ஒருமுகப்பட்டிருந்தது. ஒரு குறைவிற்கு மாறாக, மொத்தச் சொத்துக்களில் முக்கியமாக அரச பிணைங்களின் வடிவிலான முதலீடுகள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் 17 சதவீதப் பங்குடன் ஒப்பிடுமிடத்து இன்னமும் ஓரததாள 50 சதவீதத்திற்கு வகைகூறின. 2007 இறுதியில் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்த வெளிநின்ற கடன்கள் மற்றும் வைப்புக்கள் முறையே 166 பில்லியன் ரூபா மற்றும் 286 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

## பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்

**பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள், 2006இனைவிட மெதுவானதொரு போக்கில் காணப்பட்டபோதும், 2007இல் மேலும் விரிவாக்கமடைந்தன. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் 31 சதவீதத்தினால் 142 பில்லியன் ரூபாவிற்கு வளர்ச்சியடைந்தன.** பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்களில் 50 சதவீதத்தைப் பிரதிபலிக்கின்ற வசதிகளின், நிதியியல் கடன்பாட்டு வசதிகளின் விரிவாக்கம் இந்த வளர்ச்சிக்கு பெருமளவில் பங்களிப்புச் செய்தது. 2007 இறுதியில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் வைப்புப் பொறுப்புக்கள் மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற முக்கியமான வைப்புக்களினை ஏற்கும் நிறுவனங்களின் மொத்த வைப்புபக் பொறுப்புக்களில் 4.2 சதவீதத்திற்கு வகைகூறின.

**2007இல் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளால் வழங்கப்பட்ட கொடுகடன் 33 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** மொத்தக் கொடுகடனில் 33 சதவீதத்திற்கு வகைகூறிய குத்தகை வசதிகள் ஒரு தாங்ந்த வளர்ச்சி வீதமான 16 சதவீதத்தினை பதிவு செய்த அதேவேளை மொத்தக் கொடுகடனில் 33 சதவீதத்திற்கு வகைகூறிய வாடகைக் கொள்வனவு வசதிகள் 40 சதவீதமான ஒரு வளர்ச்சியைப் பதிவு செய்தன. கோரப்படுகின்ற உள்ளீட்டு பெறுமதி சேர் வரியின் மீதான ஒரு எல்லை விதிப்பனவு வாடகைகள் பெறுமதி சேர் வரிக்குட்படாத வாடகைக் கொள்வனவு வசதிகளின் பதிவு செய்யப்பட் நிதிக் கம்பனிகள் அதிகளவு கவனம் செலுத்துவதற்கு வழிவகுத்தது. 2007இல் மொத்தக் கொடுகடன்களில் உண்மைச் சொத்துக்களின் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் 9 சதவீதத்திற்கு வகைகூறின. நகை அடகு வைத்தலின் கீழான வசதிகள் 58 சதவீத வளர்ச்சியினை வெளிப்படுத்தி அதன் பங்கினை மொத்தச் சொத்துக்களில் 3 சதவீதத்திற்கு அதிகரித்தன.

**பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் மொத்த வளங்களில் வைப்புக்கள் 55 சதவீதத்திற்கு வகைகூறி முக்கிய நிதியிடல் மூலமாக தொடர்ந்தும் காணப்படுகின்றன.** மொத்த வைப்புப் பொறுப்புக்கள் 2007 காலப்பகுதியில் 33 சதவீதத்தினால் அதிகரித்தன, ஏனைய இரண்டு முக்கிய நிதியிடல் மூலங்களான வங்கிக் கடன் பெறுகைகளும் மூலதன நிதியிடல்களும் மொத்த வளங்களில் முறையே 14 சதவீதத்திற்கும் 15 சதவீதத்திற்கும் வகைகூறின.

**பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் இலாபத் தன்மை 2007 இல் வீழ்சிசயடைந்தது.** கடந்த ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் வரிக்கு முந்திய இலாபம் 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2007 காலப்பகுதியில் வட்டி வருவாய்கள் 43 சதவீதத்தினால் அதிகரித்த அதே வேளை வட்டிச் செலவினங்கள் 59 சதவீதத்தினால் அதிகரித்தன. இதனொரு விளைவாக, தேறிய வட்டி வருவாய் 20 சதவீதத்தினால் மாத்திரம் உயர்வடைந்தது மொத்தச் செலவினங்களில் அறவிடமுடியாக்கடன்கள் மற்றும் கையக்கடன்களுக்கான ஒதுக்குகளினை உள்ளிட்ட தொழிற்பாட்டு செலவுகளின் பகுதி 2006இல் பதிவு செய்யப்பட்ட 43 சதவீதத்திலிருந்து 2007இல் 40 சதவீதத்திற்கு குறைவடைந்த போதிலும் 2006 திசெம்பர் 31ஆம் நாளில் முடிவடைந்த காலப்பகுதிக்காக பதிவ செய்யப்பட்ட 2.7 பில்லியன் ரூபா வரிக்கு முந்திய தேறிய இலாபம், 2007திசெம்பர் 31ஆம் நாளில் முடிவடைந்த காலப்பகுதியில் 2.6 பில்லியன் ரூபாவிற்கு குறைவடைந்தது. இது 2007 கலப்பகுதியில் பொரளாதாரத்தில் உயர்வடைந்த வட்டி வீதங்களிற்கிசைவாக திருத்தப்பட்ட அவற்றின் நிதியிடல் செலவினப் போல பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் கடன்வழங்கல் வீதங்கள் திருத்தப்படவில்லையெனும் உண்மைக்கு தாக்கதல் செய்யப்பட முடியும்.

## ஏனைய நிதியியல் நிறுவனங்கள்

**முதனிலை வணிகர்கள் : கடந்த ஆண்டில் மீண்டெழுகை செய்முறையினை தொடங்கிய முதனிலை வணிகர்களின் செயற்பாடுகள் 2007இல் அதன் செயலாற்றத்தினை கூட்டிணைத்தது.** இவ்வாண்டுக் காலத்தில் முதனிலை வணிகர்துறையின் மொத்த வருவாய்மற்றும் இலாபங்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. அரச பிணையங்கள் சந்தையில் எதிர்நோக்கிய அதிகரித்துச் செல்லும் வட்டி வீதச் சூழலில் குறுங்கால முதிர்வுகளை நோக்கிய முதலீட்டாளர்களின் விருப்பத் தேர்வினைப் பிரதிபலித்து முதனிலை வணிகர்கள் சொத்துக் பட்டியிலினை கணிசமானளவு மீள்கட்டமைப்புச் செய்வதில் ஈடுபட்டனர். 2007இல் இத்துறையின் வரிக்கு முந்திய தேறிய இலாபம் 86 சதவீதத்தினால் 1 பில்லியன் ரூபாவிற்கு உயர்வடைந்தது. அதன் விளைவாக,

பங்கு மூலதனம் மீதான வருவாய் 2006இல் 11.2 சதவீதத்திலிருந்து 2007இல் 18.4 சதவீதத்திற்கும் அதிகரித்தது. 2007இல் முதனிலை வணிகர் துறையின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் ஆகக் குறைந்த ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடான 8 சதவீதத்தினை விட மிக உயர்வாக 35 சதவீதமாகக் காணப்பட்டது.

**முதனிலை வணிகர்கள் இடர்நேர்வினை தணிப்பதற்கு தமது செயற்பாடுகளை பன்முகப்படுத்த வேண்டியிருக்கிறது.** முதனிலை வணிகர்கள் அரச பிணையங்கள் சந்தையிலேயே முழுமையாக ஈடுபட்டிருப்பதனால் தற்போது வியாபார ஒருமுகப்படுததல் இடர்நேர்விற்குள்ளாகியுள்ளனர். மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட பன்முகப்படுத்தல் முன்மொழிவுகளின் நியதிகளில் முதனிலை வணிகர்கள் வழங்கப்படும் பணிகளின் வீச்சினை இரண்டுகட்டங்களில் அதிகரிக்க முடியும். முதல் கட்டத்தில் முதனிலை வணிகர்கள் கட்டணங்களை அடிப்படையாகக் கொண்ட பணிகளான சொத்துப்பட்டியல் முகாமைத்துவம், செயற்றிட்ட மதிப்பீடு, கடன் கூட்டுப் பணிகள், பட்டியலிடப்பட்ட, பட்டியலிடப்படாத கம்பனி முறிகள், தொகுதிக்கடன்களின் தரகிடல் மற்றும் சில கட்டுப்பாடுகளுக்கமைய தமது சொந்த கூட்டுக் கம்பனிகளது சாதாரண பங்குகள் மற்றும் திறைசேரிகளில் முதலீடு செய்தல் போன்றவற்றில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கப்படுவர். முதலாவது கட்டத்தின் அமுலாக்கத்தின் ஆறு மாதங்களின் பின் அறிமுகப்படுத்தப்படும் இரண்டாம் கட்டத்தில் முதனிலை வணிகர்கள் ஏனைய பட்டியலிடப்பட்ட பங்குகள், தொகுதிக்கடன்கள் அல்லது முறிகள் மற்றும் வர்த்தகப் பத்திரங்களின் முதலீடுகளினால் பேணிக் கொள்வதற்கும் அனுமதியளிக்கப்படுவார்கள். மேலும், முதனிலை வணிகர்கள் படுகடன் கருவிகளினூடாக கடன்பெறுவதனூடாக தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள். தற்போது, சட்டங்களுக்கான திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் புதிய வியாபாரத் திட்டம் 2008இல் அறிமுகப்படுத்தப்படும். 2008இன் முதலாம் அரையாண்டு நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும். மத்திய வங்கிக்கான ஒரு புதிய அதேநேர முதனிலை வணிகர் தரவு அறிக்கையிடல் முறையினை நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**வட்டி வீதங்களிலான மாற்றத்திற்கு முதனிலை வணிகர் சொத்துப்பட்டியலின் தாக்குப்பிடிக்கும் தன்மையை அளவிடுவதற்கான அழுத்தப் பரீட்சிப்பு முதனிலை வணிகர் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு எந்தவொரு தீவிரமான அச்சுறுத்தலினையும் கொண்டிருக்கவில்லையென்பதனை வெளிப்படுத்தியது.** வட்டி வீதங்களின் 100 அடிப்படைப் புள்ளிகளிலான மேல் நோக்கிய அசைவு மதனிலை வணிகர்களின் சொத்துப்பட்டியல் மற்றும் மூலதனத்தின் பெறுமதி மீது கொண்டுள்ள தாக்கத்தினை அளவிடுவதற்கான அழுத்தப் பரீட்சிப்பின் பெறுபேறு 2007இன் இறுதியில் முதனிலை வணிகர்கள் தமது சொத்துப் பட்டியலில் 171 மில்லியன் ரூபாவினை அல்லது தமது முதலீட்டுத் தளத்தில் 2.85 சதவீதத்தினை இழப்பார்களென சுட்டிக்காட்டியது.

**சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் :** 2007இன் இறுதியில் சிறப்பில்பு வாய்ந்த கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் 23 சதவீதத்தினால் 96 மில்லியன் ரூபாவிற்கு அதிகரித்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து குறைவடைந்த போக்கினைக் கொண்ட தேறிய இலாபங்கள் 17 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வாண்டுக் காலப்பகுதியில் மூன்று சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் பதிவு செய்யப்பட்ட அதேவேளை மூன்று புதிய கம்பனிகள் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளாக பதிவு செய்யப்பட்ட அதே வேளை மூன்று புதிய கம்பனிகள் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளாக பதிவு செய்யப்பட்டனர். இதன்படி, 2007 இறுதியில் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை கடந்த ஆண்டினைப்போல் 20 ஆக மாற்றமின்றிக் காணப்பட்டது. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் பெருமளவில் வங்கிக் கடன் பெறுகைகளில் தங்கியிருப்பதனாலும் அநேகமாக எல்லா வங்கிகளும் நிதிக் குத்தகைத் தொழிலில் ஈடுபட்டிருப்பதனாலும் வங்கிகளிலிருந்து போட்டித்தன்மையான வீதங்களில் கடன்பெறுவதில் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் சிக்கலினை எதிர்நோக்குகின்றன. இது அவை படுகடன் கருவிகளிலான வழங்குவதன் மூலம் நிதியினை திரட்டுவதற்கு அவர்களுக்கு வழிகோலியது. பொதுமக்களிடமிருந்து நிதியினை திரட்டுவதிலுள்ள பாதிப்புக்களினைக் கருத்திற் கொண்டு படுகடன் கருவிகளினை வழங்குவதனூடாக நிதியினை திரட்டுவதற்கு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகளினைக் குறிப்பிட்ட வழிகாட்டல்களினை மத்திய வங்கி வழங்கியது.

**நம்பிக்கைக் கூறுகள்: 2007இல் ஒரு புதிய முடிவுறுத்தல் வருவாய் நிதியத்தின் வருகையுடன் நம்பிக்கைக் கூறுகள்துறை விரிவடைந்தது.** 2007.இல் நம்பிக்கைக் கூறுகைகள் துறையின் மொத்தச் சொத்துக்கள் 17 சதவீதத்தினால் 6.3 பில்லியன் ரூபாவாக அதிகரித்தது. 2007இல் மொத்தமாக 14 நிதியங்களை முகாமை செய்கின்ற 5 நிறுவனங்கள் காணப்பட்டன. இந்த நிதியங்களில் 6 வருவாய் நிதியங்களாகவும், 4 வளர்ச்சி நிதியங்களாகவும், 4 சமநிலை நிதியங்களாகவும் காணப்பட்டன. நம்பிக்கைக் கூறுகளின் முக்கிய முதலீட்டு கருவியான பங்குகள் தொடர்ந்தும் காணப்பட்ட போதிலும் இதன் பங்கு 65 சதவீதமான குறைவடைந்து தனியார்படுகடன் பிணையங்களின் பங்கு 26

**அட்டவணை 8.7** சிறப்பியல்பு வாய்ந்த குத்தகையிடல் கம்பனிகள் குத்தகையிடல் வசதிகளின் துறைவாரியான பகுப்பாய்வு

ரூபா. மில்லியன்

| துறை | 2006 (அ) காலப்பகுதியில் | 2007 (ஆ) காலப்பகுதியில் |
|---|---|---|
| வேளாண்மை | 1,603 | 1,351 |
| கைத்தொழில் | 1,918 | 1,523 |
| வர்த்தகம் | 6,982 | 5,409 |
| போக்குவரத்து | 4,397 | 4,118 |
| கட்டடவாக்கம் | 1,117 | 886 |
| பணிகள் | 8,952 | 6,833 |
| ஏனையவை | 4,387 | 3,524 |
| **மொத்தம்** | **29,356** | **23,644** |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சதவீதத்திற்கு அதிகரித்தது. நம்பிக்கைக் கூறுகளின் உடமையாளர்களின் மொத்த எண்ணிக்கை 23,191 இற்கு சிறிதளவில் வீழச்சியடைந்த அதேவேளை வழங்கப்பட்ட கூறுகளின் மொத்த எண்ணிக்கை 470 மில்லியனுக்கு அதிகரித்து உடமைகளின் ஒருமுகப்படுத்தலின் அதிகரிப்பினை குறித்து நிற்கின்றது.

**வணிக வங்கிகள்: இவ்வாண்டில் நிதியினை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளிலானதொரு அதிகரிப்பின் காரணமாக வணிக வங்கிகளின் தொழிற்பாடுகள் நிலைத்து நின்றன.** வணிக வங்கிகளின் சொத்துத்தளம் 2007இல் 3 சதவீதத்தால் அதிகரித்தது. பங்குச் சந்தையிலான மட்டுப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களின் காரணமாக குத்தகை, வாடகைக் கொள்வனவு மற்றும் கொடுகடன் செயற்பாடுகள் போன்றவையே இவ்வாண்டில் முக்கிய வியாபாரங்களாகக் காணப்பட்டன. 2007இல் 9 வணிக வங்கிகள் தொழிற்பட்டன.

## துணிகர முயற்சி மூலதன நிறுவனங்கள்

**துணிகர முயற்சி மூலதன நிறுவனங்களின் செயற்பாடுகள் இவ்வாண்டில் குறைவடைந்தன.** துணிகர முயற்சி மூலதன நிறவனங்களின் முதனிலை வியாபாரம், உயர்ந்த இடர்நேர்வினைக் கொண்ட முதலீடுகளுக்கு முக்கியமாக தொழில் முயற்சியாளராக ஆரம்பிக்கப்படும் புதிய துணிகர முயற்சிகளுக்கு, பங்கு மூலதனம் வழங்குவதாகும். அறவிடமுடியாக் கடன்களுக்கான உயர்ந்த ஒதுக்கங்கள், வருவாய்களினை மீளப் பெறுவதிலான தாமதங்கள் மற்றும் புதிய முதலீடுகளின் பற்றாக்குறை போன்றவற்றிலான துணிகர முயற்சி மூலதன நிறுவனங்கள் திரவத்தன்மை பிரச்சனைகளை எதிர்நோக்கின. அரச பிணைங்கள் சந்தையின் உயர்ந்த வீதங்களும் துணிகர முயற்சி மூலதன நிறுவனங்களிலான முதலீட்டினை கவர்ச்சியற்றதாக்கியது. துணிகர முயற்சி மூலதன நிறுவனங்கள் தமது வியாபாரத்தினை தக்க வைத்துக்கொள்வதற்கு தமது முதலீடுகளினை நலக்கவனிப்பு, வலு மற்றும் உண்மைச்சொத்துக்கள் துணை போன்றவற்றில் தொடர்ந்தும் கவனம் செலுத்தின.

## ஒப்பந்த ரீதியிலான சேமிப்பு நிறுவனங்கள்

**ஓய்வுகால நல நிதியங்கள்:** ஊழியர் சேம நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், அரசதுறை சேமலாப நிதியம், உதவுதொகை செலுத்தலூடான சேமலாப நிதியம், மற்றும் தனியார் சேமலாப நிதியம் போன்ற அனைத்து நிதியங்களினதும் மொத்தச் சொத்துக்கள் 2007இல் 12 சதவீதத்தினால் 751.5 பில்லியனுக்கு வளர்ச்சியடைந்து 2007 இறுதியில் நிதியியல் முறைமையின் சொத்துக்களில் 17 சதவீதத்தினால் பிரதிபலிக்கின்றது. துறையின் ஏறத்தாள 75 சதவீதத்திற்கு ஊழியர் சேமலாப நிதியம் வகைகூறியது.

**நாட்டின் முக்கிய ஓய்வூதிய நல நிதியமான ஊழியர் சேமலாப நிதியம் முதலீட்டு வருவாய் மற்றும் தேறிய பங்களிப்புக்களிலான ஒரு அதிகரிப்புடன் விரிவடைந்தது.** ஊழியர் சேமலாப நிதியம் தொழில் ஆணையாளரால் நிருவகிக்கப்படுகின்ற அதேவேளை நிதியத்தினை முகாமை செய்யும் கடப்பாடு நாணய நிதியத்திடமுள்ளது.

**நாட்டின் தொழில் தருநர் பங்களிப்பச்செய்யும் ஓய்வூதிய நல நிதியமான ஊழியர் நம்பிக்கை நிதியமும் உயர்ந்த தேறிய பங்களிப்புக்கள் மற்றும் முதலீட்டு வருவாயுடன் கூடிய அதன் சொத்துத் தளத்தில் ஒரு அதிகரிப்பினைப் பதிவு செய்தது.** நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் முகாமை செய்யப்படுகின்ற ஊழியர் நம்பிக்கை நிதியம் ஏறத்தாள 7.9 மில்லியன் கணக்குகளினை கொண்டிருப்பதுடன் இதில் 1.9 மில்லியன் செயற்படும் கணக்குகளாக காணப்படுகின்றன. 2007இன் இறுதியில் மொத்த முதலீடுகள 16 சத வீதத்தினால் 74 பில்லியன் ரூபாவிற்கு அதிகரித்ததுடன் இது பெருமளவில் அரச பிணைங்களில் முதலிடப்பட்டிருந்தது.

## காப்புறுதிக் கம்பனிகள்

**காப்புறுதித்துறை கட்டுப்பணம் மற்றும் சொத்துக்களின் நியதிகளில் ஒரு உறுதியான வளர்ச்சியினை 2007இல் பதிவு செய்தது.** நிதியியல் முறமையின் மொத்தச்சொத்துக்களில் காப்புறுதித்துறை ஏறத்தாள 3.1 சதவீதத்திற்கு வகைகூறியது. காப்புறுதியின் உள்ளடக்கமானது குடித்தொகையின் 10 சதவீதத்திற்கும் குறைவாகவே இருக்குமென மதிப்பிடப் பட்டுள்ளதனால் இந்தத்துறையில் வளர்ச்சிக்கான கணிசமானளவு வாய்ப்புக் காணப்படுகிறது. காப்புறுதித்துறை 15 கம்பனிகளைக் கொண்டிருப்பதுடன் இதில் 11 நிறுவனங்கள் ஆயுள் மற்றும் பொதுக்காப்புறுதியாளராகவும் 3 நிறுவனங்கள் பொதுக் காப்புறுதியாளராகவும் காணப்படுகின்றனர். ஒரு நிறுவனம் ஆயுள் காப்புறுதியாளராகவும் காணப்படுகின்றனர். ஐந்து நிறுவனங்கள் வெளிநாட்டு காப்புறுதி நிறுவனங்களுடன் கூட்டிணைப்பினைக் கொண்டுள்ளன. துறையின் மொத்தச் சொத்துக்களில் இரண்டு நிறுவனங்கள் ஏறத்தாள 70 சதவீதத்திற்கும் 5 பெரியளவிலான நிறுவனங்கள் மொத்தக் காப்புறுதிச் சொத்துக்களில் 95 சதவீதத்திற்கும் வகைகூறி காப்புறுதித்துறையானது உயர்ந்தளவில் ஒருமுகப்படுத்தப் பட்டதாகக் காணப்படுகிறது. 2007இல் காப்புறுதிக் கம்பனிகளின்

**அட்டவணை 8.8 முக்கிய ஓய்வுகால நல நிதியங்களின் முக்கிய குறிகாட்டிகள்**

| | ஊ.சே.நி 2006 | ஊ.சே.நி 2007 | ஊ.ந.நி 2006 | ஊ.ந.நி 2007 |
|---|---|---|---|---|
| கணக்குகளினுடைய எண்ணிக்கை (மில்) | 11.3 | 11.8 | 7.9 | 7.9 |
| இதில் : செயற்படும் கணக்குகள் (%) | 18.3 | 17.8 | 24.1 | 24.1 |
| பங்களிப்புச் செய்யும் தொழில்வழுங்குநரினுடைய எண்ணிக்கை | 57,996 | 60,496 | 50,509 | 54,904 |
| மொத்தப் பங்களிப்புக்கள் (ரூ.பில்) | 34.9 | 40.6 | 6.1 | 7.3 |
| மொத்த மீள்செலுத்துகைகள் (ரூ.பில்) | 17.4 | 21.8 | 3.4 | 4.1 |
| அங்கத்தவர் கணக்குகளின் மொத்த வெளிநின்ற மீதி (ரூ.பில்) | 477.6 | 546.4 | 65.7 | 75.9 |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்) | 490.4 | 560.0 | 67.0 | 78.8 |
| மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் (ரூ.பில்) | 471.8 | 535.0 | 63.7 | 73.6 |
| இதில் : அரச பிணையங்கள் (%) | 96.9 | 96.0 | 92.3 | 90.5 |
| மொத்த வருமானம் (ரூ.பில்) | 46.4 | 59.0 | 6.5 | 8.1 |
| அங்கத்தவர் கணக்குகளுக்கு செலுத்தப்பட்ட வட்டி வீதம் (%) | 10.1 | 10.8 | 10.0 | 10.3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மொத்தச் சொத்துக்கள் 14 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இவ்வாண்டில் பொதுக் காப்புறுதிக் கட்டுப்பணம் 23 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த அதேவேளை ஆயுள் காப்புறுதிக் கட்டுப்பணம் 21 சதவீதத்தினால் அதிகரித்தது. துறையின் முழு மொத்த இலாபத்தன்மை கடந்த ஆண்டிற்கு ஒத்ததான மட்டத்தில் நிலைத்திருக்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

**காப்புறுதிக் கம்பனிகளின் ஆற்றல் வாய்ந்த தன்மை மேம்பாடடைந்தது.** காப்புறுதி கம்பனிகளின் ஆற்றல் வாய்ந்த தன்மையை அளவிடுவதற்காக முக்கிய குறிகாட்டி, கடன் தீராற்றல் அளவேயாகும். பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்கான புதியகடன் தீராற்றல் அளவுத் தேவைப்பாடுகள் 2007இல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. தேவைப்பாட்டினைவிட சிறிதளவில் குறைவாகக் காணப்பட்ட இரண்டு கம்பனிகளைத் தவிர, எல்லாக் காப்புறுதிக் கம்பனிகளும் கடன் தீராற்றல் அளவுத் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகின. எல்லா ஆயுள் காப்புறுதியாளரும் கடன் தீராற்றல் அளவினைப் பூர்த்தி செய்தனர். காப்புறுதிக் கம்பனிகளின் மூலதன மட்டங்களும் ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்தன. 2007இல் நான்கு காப்புறுதிக் கம்பனிகள் உள்நாட்டு தரப்படுத்தல் முகவர்களால் மீளளிப்பு திறனிற்கான தரப்படுத்தல்களைப் பெற்றுக் கொண்டன.

**இவ்வாண்டில் காப்புறுதிக் கம்பனிகளின் மூலதன மட்டங்களும் அதிகரித்தன.** 2007இல் நான்கு காப்புறுதிக் கம்பனிகள் தமது கோரல்களுக்கு கொடுப்பனவு செய்யும் ஆற்றல்களுக்கான தரப்படுத்தலினை ஒரு உள்நாட்டு தரப்படுத்தல் முகவரிடமிருந்து பெற்றுக் கொண்டன.

**காப்புறுத்தித் துறையின் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டு வருகின்றது.** காப்புறுதி ஒழுங்குபடுத்துனரான இலங்கைக் காப்புறுதிச்சபை கறமெல் தரப்படுத்தல், முறைமையின் அடிப்படையில் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்டு காப்புறுதிக் கம்பனிகளினை மேற்பார்வை செய்வதற்கான செயல்களினை ஆரம்பித்துள்ளது. காப்புறுதிக் கம்பனிகளின் நிதியியல் உறுதியையும் ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் மேம்படுத்துவதற்கும், துறையின் ஒன்றுதிரட்டலினை உயர்த்துவதற்கும் காப்புறுதிக் கம்பனியின் ஆகக் குறைந்த பங்கு மூலதனம் 2008இல் ஒவ்வொரு வகை காப்புறுதி வியாபாரத்திற்கும் தற்போதைய மட்டமான 200 மில்லியன் ரூபாவிலிருந்து 250 மில்லியன் ரூபாவாக உயர்த்துவதற்கு முன்மொழிந்திருக்கின்றது.

**காப்புறுதிச் சட்டத்திற்கான திருத்தங்கள் இறுதியாக்கப்பட்டுள்ளன.** முன்மதியான ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கான சட்டக் கட்டமைப்பு காப்புறுதித்துறையின் ஒழுங்குபடுத்தல் சட்டத்திற்கு முன்மொழியப்பட்ட திருத்தங்களுடன் தரமுயர்தப்படும். மூதலன தேவைப்பாடுகளினை குறிப்பிடுதல், விதிகளினையும் தீர்மானங்களையும் உருவாக்குதல் மற்றும் அமுல்படுத்தல் தொடர்பான இலங்கைக் காப்புறுதிச்சபையின் அதிகாரங்கள் வலுப்படுத்தப்படும். காப்புறுதிக் கம்பனிகளின் பணிப்பாளர் மற்றும் தரகர்களுக்கான பொருத்தமான மற்றும் சரியான ஆள் என்பதற்கான பரீட்சிப்பு, மற்றும் இழப்பு மதிப்பீட்டுப் பதிவுகள் போன்றவை தேவைப்படுத்தப்படுகின்றன. நிறுவன ரீதியான முகவர்களது நியமனங்கள் அறிமுகப்படுத்தப்படும். ஏனைய முக்கிய மாற்றங்களாக ஆயுள் மற்றும் ஆயுளல்லாத காப்புறுதிக் கம்பனிகள் மூன்று வருட காலப்குதிக்குள் தனித்தனியாக உருவாக்கப்படுவதும் ஒரு வருட காலத்தில் காப்புறுதி நிறுவனங்கள் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படுவதும் காணப்படுகின்றன.

## 8.4 நிதிச் சந்தைகளில் ஏற்பட்ட அபிவிருத்திகள்

### வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தை

**வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தை கொடுக்கல் வாங்கல்களுடைய நாளாந்த சராசரி அளவு, 2006இன் நான்காம் காலாண்டுப் பகுதியில் ஏறத்தாழ ரூ.10 பில்லியனிலிருந்து 2007ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏறத்தாழ ரூ.8 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.** வங்கித்தொழில் முறைமையின் மிகையான திரவத்தன்மை மற்றும் சில வங்கிகளில் மேலதிக திரவத்தன்மை செறிவுற்றிராமை என்பன இக்காலப்பகுதியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான காரணங்களாக இனம் காணப்படுகின்றன.

**2007 காலப்பகுதியில், பணச்சந்தை வீதங்கள் சராசரியாக ஏறத்தாழ 14 - 15 சதவீதத்திற்கு தொடர்ந்து நிலையாக இருந்தன.** எப்படியாயினும் சந்தையில் பற்றாக்குறை திரவத்தன்மை காணப்பட்ட நாட்களில் குறிப்பிடத்தக்களவில் பெரியளவிலான அசைவுகள் அவதானிக்கப்பட்டன. சில வங்கிகள் அவற்றிக்கான நிதித் தேவைகளுக்கு அழைப்பு சந்தைகளினை தொடர்ச்சியாக நம்பியிருந்தமை ஓர் கரிசனைக்குரிய விடயமாக இருந்ததுடன் இதன் விளைவாக அழைப்பு சந்தை விகிதங்களில் குறிப்பாக சந்தையில் திரவத்தன்மைக்கு பற்றாக்குறை காணப்பட்ட போது ஏற்றத்தாழ்வு காணப்பட்டது. இது அத்தகைய நிறுவனங்களுக்கு

**அட்டவணை 8.9**
**பணச் சந்தைத் தொழிற்பாடுகள் 2005 - 2007**

ரூபா மில்லியன்

| | | அழைப்புப் பணச்சந்தை | வழங்கப்பட்ட தொகை | முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தை | | |
|---|---|---|---|---|---|---|
| | | மொத்தக் கடன் வழங்கல்/ கடன்பாடு | | கொள்வனவு செய்யப்பட்ட தொகை | | |
| | | | | மத்திய வங்கி | முதனிலை வணிகர்கள் | ஏனையவை |
| 2005 | 1ஆம் காலாண்டு | 310,678 | 98,810 | 29,923 | 64,273 | 4,608 |
| | 2ஆம் காலாண்டு | 230,345 | 108,231 | 27,943 | 72,365 | 7,923 |
| | 3ஆம் காலாண்டு | 283,380 | 147,252 | 35,209 | 103,162 | 8,881 |
| | 4ஆம் காலாண்டு | 232,835 | 131,476 | 14,834 | 103,719 | 12,921 |
| 2006 | 1ஆம் காலாண்டு | 311,359 | 147,481 | 16,796 | 117,443 | 13,242 |
| | 2ஆம் காலாண்டு | 453,677 | 144,412 | 28,731 | 101,630 | 14,051 |
| | 3ஆம் காலாண்டு | 455,027 | 152,254 | 47,755 | 88,144 | 16,355 |
| | 4ஆம் காலாண்டு | 609,438 | 183,719 | 71,581 | 89,785 | 22,353 |
| 2007 | 1ஆம் காலாண்டு | 499,650 | 141,804 | 35,051 | 89,069 | 17,684 |
| | 2ஆம் காலாண்டு | 419,730 | 239,165 | 78,726 | 98,530 | 61,909 |
| | 3ஆம் காலாண்டு | 504,036 | 212,007 | 68,138 | 94,253 | 49,616 |
| | 4ஆம் காலாண்டு | 497,833 | 224,212 | 40,946 | 106,606 | 76,660 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மாத்திரமின்றி ஒட்டு மொத்தமாக சந்தையின் உறுதித்தன்மைக்கு இடர்நேர்வினை ஏற்படுத்தும் என்பதால் இத்தகைய நிறுவனங்களால் முன்னெச்சரிக்கை வாய்ந்த திரவத்தன்மை முகாமைத்துவத்தை மேற்கொள்ள வேண்டியவை தேவையினையும் எடுத்துக்காட்டுகிறது.

## உள்ளூர் வெளிநாட்டு செலாவணிச் சந்தை

**இலங்கை 2007 காலப்பகுதியிலும் மிதக்கவிடப்பட்ட செலாவணி விகித முறைமையினை தொடர்ச்சியாக பின்பற்றுகின்றது.** மேலதிகமான ஏற்றத்தாழ்வுகளை நீக்கி இயைபாக்கும் பொருட்டு மத்திய வங்கி ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் தலையீடு செய்தது. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு திறைசேரி முறிகளை விற்பனை செய்தமை மற்றும் ஐ.அ.டொலர் 500 மில்லியன் பெறுமதி வாய்ந்த பன்னாட்டு முறிகளுடைய விநியோகத்திலிருந்தான உட்பாய்ச்சல்களைத் தொடர்ந்து 2007இல் சந்தை அதிக நிலையான தன்மையை கொண்டிருந்தது. வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி சந்தையின் தொகைகள் 2006இன் ஐ.அ.டொலர் 10,792 மில்லியனுக்கெதிராக 2007 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 9,275 மில்லியனால் மிதமாக குறைவடைந்தது. 2007இல் வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களுடைய நாளாந்த சராசரி அளவு கடந்த ஆண்டில் ஐ.அ.டொலர் 44 மில்லியனுக்கெதிராக ஐ.அ.டொலர் 38 மில்லியனாக இருந்தது.

## அரச பிணையங்கள் சந்தை

**ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட படுகடன்: அரசாங்கம் தனது வரவு செலவுத்திட்டத் தேவைப்பாடுகளின் ஒரு பகுதியினை பூர்த்தி செய்வதற்காக ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கருவிகளான திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் ரூபாக் கடன்களினூடாக தொடர்ந்தும் நிதியினைத் திரட்டியது.** இதன் பிரகாரம் ஏல முறையினூடாக அரசாங்கம் மொத்த முகப் பெறுமதி அடிப்படையில் 2006இலும் பார்க்க ரூ.189 பில்லியன் கொண்ட ஓர் அதிகரிப்புடன் ரூ.817 பில்லியனுக்கு திறைசேரி உண்டியல்களை விநியோகித்தது. மொத்த வழங்கல்களில் 67 சதவீதமானவை 91 நாட்களுக்கு சமனான அல்லது அதனிலும் குறைவான முதிர்ச்சி காலத்தை கொண்டிருந்தன. தேறிய அடிப்படையில் ரூ.49 பில்லியன் பெறுமதியான புதிய வழங்கல்கள் காணப்பட்டன. அதிகரித்து செல்லும் வட்டிவீத சூழ்நிலை மற்றும் எதிர்கால பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பவற்றின் நோக்கில் இத்தகைய ஏலங்களில் பெறப்பட்ட விலைக் கோரல்கள் குறுகிய கால முதிர்வுகளை நோக்கிய ஓர் சந்தை விருப்பத் தேர்வினைப் பிரதிபலித்தன.

**2007இன் திறைசேரி முறி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ், முகப்பெறுமதி அடிப்படையில் ரூ.401 பில்லியன் தொகைக்கு முறி விநியோகிப்பதனூடாக மொத்த நிதிகள் திரட்டப்பட்டது. அவற்றுள் ரூ. 18 பில்லியன் ஏலங்களினூடாக விநியோகிக்கப்பட்டது மற்றும் மிகுதி ரூ.383 பில்லியன் நேரடியாகத் திரட்டப்பட்டது.** ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளுடைய கிடைப்பனவு தன்மையின் அதிகூடிய எல்லையினை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஆரம்பத்தில் அனுமதியளிக்கப்பட்ட அதிகூடிய எல்லையான 5 சதவீதத்திலிருந்து முறிக் கையிருப்பினுடைய வெளிநின்ற தொகையின் 10 சதவீதத்துக்கு அதிகரித்தன் மூலம் 2007இல் அரசாங்கப் பிணையங்கள் சந்தை மேலும் தாராளமயமாக்கப் பட்டது. பெரும்பாலான ஏலங்களில் பெறப்பட்ட கேள்வி கோரல்களுடைய விளைவு விகிதங்கள் நடைமுறைச் சந்தை விகிதங்களைக் காட்டிலும் உயர்வாக ஏற்றுக் கொள்ள கூடியளவாக காணப்பட்டதால் ஏலத்தினூடாக நிதிகளை திரட்டுவதில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்களவு ஓர் வீழ்ச்சி காணப்பட்டது. மேலும் அரசாங்கம் ரூ. 23 பில்லியனை விற்பனை செய்ய முடியாத ரூபா கடன்களை விநியோகிப்பதன் மூலம் திரட்டியது.

**அரச பிணைகள் சந்தையின் விளைவு வீதங்கள் ஆண்டு முழுவதும் ஓர் அதிகரித்த போக்கினையே காட்டியது.** இரண்டாம்தர சந்தை விளைவு வீதங்களின் மேல் நோக்கிய அசைவு முதலாம்தர சந்தை வீதங்களுடன் இணைந்திருந்தன. விளைவு விகிதங்கள் ஆண்டின் தொடக்கத்தில் 13 சதவீதமான எல்லைக்குள் காணப்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் ஏறத்தாழ 19 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. 2006-2007 திசெம்பருக்கும் இடைப்பட்ட காலத்தில் திறைசேரி உண்டியல்கள் விளைவு வீதங்கள் 854,721 மற்றும் 700 அடிப்படைப்புள்ளிகளால் முறையே 91, 182 மற்றும் 364 நாள் முதிர்வு காலங்களுக்கு அதிகரித்தது. அதேநேரம் அதே காலப்பகுதியில் 2 -3 ஆண்டு கால முதிர்ச்சி கொண்ட திறைசேரி முறிகளுக்கான விளைவு வீதங்கள் 256 - 383 அடிப்படைப்புள்ளிகளின் எல்லைக்குள் அதிகரித்தது.

**ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட படுகடன்: 2007இல் இலங்கை அபிவிருத்தி முறிகள் இரண்டு ஆண்டுகால முதிர்வுடன் விநியோகிக்கப்பட்டன.** ஏலம் மேலதிக கோரல்களை கொண்டிருந்ததுடன் ஐ.அ.டொலர் 215 மில்லியன் இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்தில் ஆறுமாத வீதத்துடன் 155 அடிப்படைப்புள்ளிகளை கொண்ட ஓர் எல்லையை சேர்ந்த வீதத்தில் திரட்டப்பட்டது. மேலும் 2007இல் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவின் கடன்பாடுகளினூடாக 106 மில்லியன் ஐ.அ.டொலர் திரட்டப்பட்டது. இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்தின் மூன்றுமாத வீதத்துடன் 105 அடிப்படை புள்ளிகளுடைய ஓர் எல்லையை சேர்ந்த வீதத்தில் 3 வருடங்களுடைய ஓர் முதிர்வைக் கொண்ட ஓர் கூட்டுக் கடனூடாக ஐ.அ.டொலர் 210மில்லியன் தொகைக்கு ஓர் வெளிநாட்டு வர்த்தக கடன் பெற்றுக் கொள்ளப்பட்டது. உள்நாட்டு படுகடன் பிணையங்கள் சந்தையின் அழுத்தங்களை இலகுவாக்க இலங்கையினுடைய பன்னாட்டு முறி உதவியது.

## கம்பனி படுகடன் பிணைங்கள் சந்தை

**வர்த்தகப் பத்திரம்: 2007 காலப்பகுதியில் வர்த்தகப்பத்திர சந்தையின் செயற்பாட்டு மட்டம் குறிப்பிடத்தக்களவால் அதிகரித்து வர்த்தக வங்கிகளுடைய குறுகிய கால கடன் வழங்கல் வீதங்களுடைய அதிகரித்தல்களை பிரதிபலிக்கின்றது.** வங்கிகளால் ஆதரவளிக்கப்பட்ட மீள் வழங்கல்களை உள்ளடக்கி வழங்கப்பட்ட வர்த்தக பத்திரத்தினுடைய மொத்த பெறுமதி 2006இன் ரூ.23.5 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து 2007இல் ரூ.31.2 பில்லியனாக இருந்தது. வர்த்தகப் பத்திரங்களின் வட்டி வீதம் 2006இன் 8.5 சதவீதம் 17 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2007இல் 12 சதவீதத்திற்கும்

25 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில் பாரம்பரிய வங்கி கடன்வழங்கல்களுக்கான உயர்ந்த குறுகிய கால வட்டி வீதங்கள் வர்த்தகப் பத்திரச் சந்தையினூடாக கடனை திரட்டுவதற்கு நிறுவனங்களுக்கு தூண்டுதலை வழங்கியது. வர்த்தக பத்திரச் சந்தை மூன்று மாதத்திலும் குறைந்த முதிர்வில் அதிகளவு (91.7 சதவீதம்) குவிந்திருந்த அதேநேரம் ஆறுமாத காலத்தை கொண்ட வர்த்தகப் பத்திரங்கள் 7.9 சதவீதத்திற்கு வகை கூறின. பன்னிரண்டு மாத காலத்தைக் கொண்ட வர்த்தகப் பத்திரங்கள் மீதி 0.4 சதவீதத்திற்கு வகை கூறின. 2007இன் இறுதியில் வர்த்தகப் பத்திரங்களின் மொத்த வெளிநின்ற தொகை ரூ.4.4 பில்லியனாகக் காணப்பட்டது.

**கம்பனி முறிகள்: கம்பனி முறிச் சந்தைகளினூடான நிதித் திரட்டுதலில் வங்கிகள் முக்கிய பங்கை வகித்தன.** கம்பனி முறிகளுடைய அதாவது நடுத்தர மற்றும் நீண்ட கால சந்தையில் பிரதான வழங்குனராக வங்கிகள் காணப்பட்டன. தொகுதிக் கடன்கள் 2006இல் திரட்டப்பட்ட ரூ.2.3 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து ஆண்டு காலப்பகுதியில் ஏழு வங்கிகள் ரூ.8.2 பில்லியன் தொகையான நிதியினை தொகுதிக் கடன்களினூடாக திரட்டியுள்ளன. இந்நிதிகள் பிரதானமாக வங்கிகளுடைய மூலதனப் போதுமாந்தன்மை தேவைப் பாடுகளை பூர்த்தி செய்வதற்காகவும், வியாபார விரிவாக்கல் நோக்கங்களுக்குமாகும். நிலையான மற்றும் நெகிழ்வான வட்டி வீதங்களில் தொகுதிக் கடன்கள் விநியோகிக்கப்பட்டன. தொகுதிக் கடன்களுக்கான வட்டி வீதம் 13.5 சதவீதத்திற்கும் 17.5 சதவீதத்திற்குமிடையில் வேறுபட்டது. கொழும்பு பங்கு பர்வர்த்தனையினுடைய படுகடன் வர்த்தக முறைமையில் பட்டியலிடப்பட்ட கம்பனி முறிகளுடைய புரள்வு 2006இன் ரூ.405 மில்லியனுடன் ஒப்பிடுமிடத்து 2007இல் ரூ.99 மில்லியனாக மாத்திரமிருந்தது.

## பங்குச் சந்தை

**2007 காலப்பகுதியில் கொழும்பு பங்கு பரிவர்த்தனையினுடைய வியாபாரம் மற்றும் விலைகள் அதிகரித்த தளம்பலினை பதிவு செய்தது.** பங்குச்சந்தை ஆண்டினுடைய முதல் இரண்டு மாதங்களில் உள்ளூர் முதலீட்டாளர்களின் உறுதியான, குறிப்பாக, தொலைத் தொடர்பு துறையில் கொண்ட ஆர்வத்துடன் சாதனை மட்டங்களை அடைந்தது. ஆனால் அதன் பின்னர், உயர்ந்தளவான பாதுகாப்பு விவகாரங்கள், முதலீட்டாளர்களை அரச பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புக்களை நோக்கி கவர்ந்த உயர்ந்து செல்லும் வட்டி வீதங்கள் கம்பனி இலாப வளர்ச்சியில் ஓர் மிதமான தன்மை பற்றிய எதிர்வுகூறல்கள் மற்றும் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் வர்த்தக அளவு பற்றிய விதிகளினுடைய அறிமுகத்தின் ஆரம்ப தாக்கம் போன்ற காரணிகளின் ஓர் ஒன்றிணைவின் காரணமாக கீழ் நோக்கி நகர்ந்தது. மேலும் சந்தை மூலதனமாக்கலின் அடிப்படையில் கொழும்பு பங்கு பரிவர்த்தனையினுடைய சிறிய அளவு மற்றும் பொது பங்கு மிதக்கவிடல் என்பன சந்தை திரவத்தன்மையைப் பாதித்ததுடன் தளம்பலடையவும் காரணமாகவிருந்தது.

**அட்டவணை 8.10 பங்குச் சந்தையின் செயலாற்றம்**

| விடையம் | 2006 | 2007 |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் (அ) | 2,722.4 | 2,541.0 |
| ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் (%) | 41.6 | -6.7 |
| மிலங்கா விலைச் சுட்டெண் (அ) | 3,711.8 | 3,291.9 |
| ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் (%) | 51.4 | -11.3 |
| சந்தை மூலதனமாக்கல் (ரூ.பில்) (அ) | 835 | 821 |
| மொ.உ.உ.யின் சதவீதமாக (%) | 30.0 | 23.0 |
| சந்தை விலை வருவாயீட்டு விகிதம் (அ) | 14.0 | 11.6 |
| சந்தை மூலதனவாக்கத்திற்கான மொத்தப் புரழ்வு (%) | 12.6 | 12.8 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ.மில்) | 105,154 | 104,985 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்) | 3,912 | 2,952 |
| வர்த்தகம் செய்த கம்பனிகளின் எண்ணிக்கை | 232 | 231 |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 237 | 235 |
| அறிமுகம் செய்யப்பட்டவை (ஆ) | 1 | 0 |
| பொதுமக்களுக்கான ஆரம்ப பங்கு வழங்கல் /விற்பனைக்கான வழங்கல் (ஆ) | 2 | 0 |
| உரிமை வழங்கல்களின் எண்ணிக்கை | 16 | 21 |
| உரிமை வழங்கல்களூடாக திரட்டப்பட்ட தொகை (ரூ.மில்) | 4,705 | 43,056 |

(அ) ஆண்டு முடிவில்
(ஆ) பதிவினைப்பெற்றுக் கொள்வதற்கு 3 முறைகள் உள்ளன. அதாவது பொது மக்களுக்கான வழங்கலினைத் தேவைப்படுத்தாத ஒரு அறிமுகம், ஏற்கனவே உள்ள பங்குகளை பொது மக்களுக்கு வழங்குகின்ற விற்பனைக்கான வழங்கல் மற்றும் புதிய பங்குகளினை பொதுமக்களுக்கு வழங்குகின்ற உதவு தொகைக்கான வழங்கல் என்பன.

மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

**கொழும்பு பங்கு பரிவர்த்தனையினுடைய பிரதான சந்தை குறிகாட்டிகள் வீழ்ச்சியடைந்தன.** பெப்புருவரி மாதத்தில் அவற்றினுடை உச்ச மட்டங்களுக்கு உயர்ந்த அனைத்து பங்கு விலைச் சுட்டெண் மற்றும் மிலங்கா விலைச் சுட்டெண் என்பன 2006இன் முறையே 41 சதவீதம் மற்றும் 51 சதவீதமாக ஓர் உயர்வுடன் ஒப்பிடுமிடத்து 2007ஆம் ஆண்டின் இறுதியில் முறையே 7 சதவீதம், மற்றும் 11 சதவீதத்தால் வீழ்ச்சி யடைந்தது. சந்தை விலை வருவாய்யீட்டு விகிதம் 2006இன் 14 சதவீதத்திலிருந்து 2007இல் 11.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**சந்தை மூலதனமாக்கலும் 2006 இறுதியின் ரூபா 835 பில்லியனிலிருந்து 2007இன் இறுதியில் ரூபா 821 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.** நாளாந்த சராசரி புரள்வு 2006இல் காணப்பட்டவாறு ரூ.435 மில்லியனாக அதே மட்டத்திலிருந்தது. சந்தை மூலதனமாக்கல் மற்றும் புரள்வினுடைய மூன்றில் இரண்டு பங்கிற்கு மேலாக வகைகூறும் மூன்று மிகப் பெரிய துறைகளான வங்கிகள், நிதியியல் மற்றும் காப்புறுதி என்பவற்றின் துறைவாரியான விலைச்சுட்டெண்கள் 5.9 சதவீதத்தால் அதிகரித்துள்ள அதேநேரம் தொலைத் தொடர்புகள் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட உடமைகள் குழு என்பன முறையே 15.8 சதவீதம் மற்றும் 11.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

**உரிமை வழங்கலினூடாக நிதிகள் திரட்டப்பட்டமை குறிப்பிடத்தக்களவால் அதிகரித்தது.** 2007இல் உரிமை வழங்கலூடாக சாதனை மட்டமளவான நிதிகள் திரட்டப்பட்டமை ஓர் சாதகமான அபிவிருத்தியாக இருந்தது. மொத்தமாக 21 கம்பனிகள் ரூ.43 பில்லியனை இவ்வாறு திரட்டியிருந்தன. முதலாம் தர அல்லது இரண்டாம் தர சந்தையினூடாக ஏதாவது ஓர் தரப்பட்ட வருடத்தில் கொழும்ப பங்கு பரிவர்த்தனை

**வரைபடம் 8.2** கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் மொத்தப் புரள்வும் வெளிநாட்டுப் பங்கேற்பும்




யினூடாக திரட்டப்பட்ட உயர்ந்தளவான மூலதனத் தொகையாக இது காணப்பட்டது. எப்படியாயினும் ஆண்டுக் காலப்பகுதியில் ஆரம்ப பொதுப் பங்கு வழங்கல்கள் எவையும் காணப்படவில்லை. 2007இல் கொழும்பு பங்கு பரிவர்த்தனையினுடைய மொத்த புரள்வில் 61 சதவீதத்திற்கு உள்ளூர் முதலீட்டாளர்கள் வகைகூறிய அதேநேரம் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் 39 சதவீதத்திற்கு வகைகூறினர். தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் ரூ.11.2 பில்லியனுக்கு உயர்ந்துள்ளமை உள்ளூர் பங்குச் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடைய விருப்பம் உயர்ந்துள்ளமையை பிரதிபலிக்கின்றது. கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுடைய எண்ணிக்கை 235 ஆக இருந்தது. 2007இல் இரண்டு பட்டியலிடப்பட்ட கம்பனிகள் பட்டியலிலிருந்து அகற்றப்பட்டன.

**பல்வேறு சந்தை அபிவிருத்தி முனைவுகள் ஆரம்பிக்கப்பட்டன.** கொழும்பு பங்கு பரிவர்த்தனையானது புதிய கம்பனிகளுடைய பட்டியலிடுதல்களை ஊக்குவித்தலுடன் முதலீட்டு தளத்தை விரிவாக்குவதற்கும் அதேநேரம் பொது மிதக்க விடுதல்களை அதிகரிப்பதன் மூலம் சந்தை திரவத்தன்மையை அதிகரிப்பதற்கும் பிணையங்களுடைய குறுகிய விற்பனைகளை அனுமதித்தல் மற்றும் பெறுதிச் சாதனங்களுடைய அறிமுகம் என்பவற்றுக்கு ஓர் நிகழ்ச்சித்திட்டத்தையும் ஆரம்பித்தது. கொழும்பு பங்கு பரிவர்த்தனை மற்றும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுடைய செயற்பாடுகளின் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைக்கு பொறுப்பாகவுள்ள பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்காக கம்பனி ஆளுகை பற்றிய சட்ட விதிகளை அறிமுகப்படுத்தியதுடன் உரிமை பங்கு மூலதன சந்தையில் பொதுமக்களின் நம்பிக்கையினை முன்னேற்றும் நோக்கத்துடன் முதலீட்டாளர்களை பாதுகாப்பதனை விருத்தி செய்வதற்காக முதலீட்டு முகாமையாளருக்கு பணிப்புரை ஒன்றை விநியோகித்தது. பெறுதிச் சாதனங்களுடைய விநியோகத்திற்கு உதவும் பொருட்டு பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டம் திருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அத்துடன் கம்பனி கையகப்படுத்தல்கள் மற்றும் இணைப்புகள் விதியும் திருத்தப்படுகின்றது. பிணையப்படுத்தல் தொடர்பில் புதிய சட்டம் ஒன்றை தயாரிப்பதில் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு ஈடுபடுகின்றது. உத்தேச சட்டமானது பிணையப்படுத்தல் கம்பனிகளை உருவாக்குதல். அத்தகைய கம்பனிகளுக்கு சொத்துக்களை மாற்றுதல் மற்றும் அத்தகைய கம்பனிகளால் சொத்துக்களை பிணையாக கொண்ட பிணையங்களை வழங்குதல் என்பவற்றுக்கான ஓர் பொறி முறையை வழங்கும். இந்தச் சட்டம் வரி நடு நிலைமையை பேணும் என எதிர்பார்க்கப்படுவதுடன் முதலீட்டாளர்களுக்கான வெளிப்படுத்தல் மற்றும் பாதுகாப்பை வழங்கும். 2008இன் இறுதியில் இறுதியாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது மூலதன சந்தை அபிவிருத்திக்கு மூலதன சந்தை முதன்மைத் திட்டத்தினுடைய அமுலாக்கத்துக்கான முயற்சிகளை மேற்கொண்டதுடன் இலங்கை காப்புறுதி சபையுடன் ஒன்றிணைந்து தொழில்துறை பங்குபற்றுநருக்கு தொழில்சார் மட்ட கல்வியினை வழங்குவதற்கு ஓர் நிதியியல் பணி கல்விக் கழகமொன்றினை உருவாக்கியது.

## 8.5 அபிவிருத்தி நிதியும் நிதியின் கிடைப்பனவும்

**2007 காலப்பகுதியில் அனுமதியளிக்கப்பட்ட சிறப்பு வங்கிகள் மற்றும் அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுடைய கிளை வலைப் பின் விரிவாக்கத்துடன் வங்கியியல்துறை விருத்தியடைந்தது.** மேல் மாகாணத்துக்கு வெளியேயான வங்கிக் கிளைகளுடைய எண்ணிக்கை ஓர் குறிப்பிடத்தக்களவால் அதிகரித்து காணப்பட்டது. அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கிகளால் திறக்கப்பட்ட புதிய கிளைகளின் எண்ணிக்கை 17 ஆக காணப்பட்டது. இவற்றுள் 16 மேல் மாகாணத்துக்கு வெளியே காணப்பட்டது. அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் விடயத்தில் 66 புதிய கிளைகள் திறக்கப்பட்டன. அவற்றுள் 49 மேல் மாகாணத்துக்கு வெளியே காணப்படுகின்றன. மேலும், அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கிகளால் பிரதான வங்கி கிளைகளுக்கு உதவும் நோக்கத்திற்காக 12 விரிவாக்கல் காரியாலயங்கள் திறக்கப்பட்டன. இவற்றுள் 7 மேல் மாகாணத்துக்கு வெளியே இருந்தன. அனுமதியளிக்கப்பட்ட வர்த்த வங்கிகளும் 130 விரிவாக்க அலுவலகங்களைத் திறந்தது. அவற்றுள் 45 மேல் மாகாணத்துக்கு வெளியே காணப்பட்டன.

**சந்தை வட்டி வீதங்கள் குறிப்பிடத்தகளவில் அதிகரித்தபோதும்,** இலங்கை மத்திய வங்கி மற்றும் தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் என்பவற்றால் செயற்படுத்தப்படும் பெரும் எண்ணிக்கையான மீள் நிதியிடல் திட்டங்களின் கீழும் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் செயற்படுத்தப்படும் இலங்கை அரசாங்கத்தினுடைய வட்டி உதவுதொகை திட்டங்களின் கீழ் மற்றும் இலங்கை அரசாங்கத்தினுடைய வட்டி உதவுதொகை திட்டங்களின் கீழ் பிரதான துறைகளுக்காக சலுகை அடிப்படையிலான வட்டியைக் கொண்ட கடன்கள் தொடர்ச்சியாக கிடைக்கத்தக்கனவாக உள்ளன.

**வேளாண்மைத்துறையில், இரண்டாவது நிரந்தரப்பயிர்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட மீள் சுழற்சி நிதிய கடன் திட்டம் மற்றும் தேயிலை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட மீள் சுழற்சி நிதிய கடன் திட்டம் என்பனவற்றின் கீழ் ஆண்டுக் காலப்பகுதியில் நிதிய பகிர்ந்தளிப்பு உறுதியாகத் தொடர்ந்தது.** 2007இல் தகுதிவாய்ந்த செயற்பாடுகளுக்காக இத்தகைய

இரண்டு திட்டங்களும் முறையே ரூ.540 மில்லியன் மற்றும் ரூ.411 மில்லியனை 9 சதவீத வட்டிவீதத்தில் பகிர்ந்தளித்தது.

**பெரும்போகம் 2006/07 மற்றும் 2006/07 சிறுபோகத்தில் புதிய விரிவான கிராமிய கடன் திட்டத்தின்கீழ் முறையே ரூ.967 மில்லியன் மற்றும் ரூ.869 மில்லியன் தொகைக்கு குறுகியகால அறுவடைக் கடன்கள் வழங்கப்பட்டன.** பெரும்போகம் 2005/06 மற்றும் சிறு போகம் 2006இல் வழங்கப்பட்ட நிதிகளுடைய தொகை முறையே ரூ.737 மில்லியன் மற்றும் ரூ.663 மில்லியனாகக்காணப்பட்டன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இது ஓர் சடுதியான அதிகரிப்பாக இருக்கின்றது. அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கடன் திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கையாளர் மற்றும் உற்பத்தி கொள்வனவாளர்களுக்காக நிதிகள் 8 சதவீத வட்டி வீதத்தில் கிடைக்கப் பெற்றதுடன் இலங்கை அரசாங்கம் 9 சதவீதமான வட்டி உதவுதொகைச் செலவினைத் தாங்கிக் கொள்கிறது. திட்டத்தின் கீழ் உள்ளடக்கிக் கொள்ளும் தானிய/ உற்பத்தியை அதிகரிக்க தற்போது தீர்மானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் எதிர்காலத்தில் அன்னாசி,கரும்பு வெற்றிலை அந்தூரியம், (ஏற்றுமதிக்கு) , ஓர்கிட் (ஏற்றுமதிக்கு) மற்றும் தேன் உற்பத்தி என்பன புதிய விரிவாக்கப்பட்ட கிராமிய கடன் திட்டத்தின்கீழ் கடனுக்காக தகுதிவாய்ந்தவையாக காணப்படும்.

**2007 வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கிருசி, நவோதய திட்டத்தின் கீழும் 8 சதவீத வட்டி வீதத்தில் கடன்கள் வழங்கப்படுகின்றன.** இந்தத் திட்டத்தின் கீழ் மொத்தமாக 5,069 கடன்கள் ரூ.333 மில்லியன் பெறுமதி ஏலவே வழங்கப்பட்டுள்ளன. வேளாண்மை நடவடிக்கைகளை விருத்தி செய்தல், வேளாண்மை உள்ளீடுகளுடைய செய்முறைப்படுத்தல்கள், விலங்கு வேளாண்மை, வேளாண்மை மற்றும் .அவற்றுடன் இணைந்த செயற்பாடுகளுடைய அபிவிருத்திக்கான உபகரணங்களுடைய கொள்வனவு, வேளாண்மை அடிப்படை மற்றும் வேளாண்மை தொடர்புடைய தொழில்துறைகள், நுண்பாக நீர்ப்பாசனம் மற்றும் சொட்டு நீர்ப்பாசன அபிவிருத்திகள் மற்றும் விநியோக முறைமைகள், களஞ்சியப்படுத்தல் வசதிகளுடைய அதிகப்படுத்தல்கள் , பாதுகாக்கப்பட்ட வேளாண்மைத்துறை அபிவிருத்தி, சேதன பண்ணைகள், சேதன பசளையினுடைய உற்பத்தி மற்றும் வேளாண்மைத்துக்கான விரிவாக்கல் பணிகள் என்பவற்றை உள்ளடக்கிய நிதியிடலுக்காக தகுதிவாய்ந்த செயற்பாடுகளில் உள்ளடக்கப்படுகின்றன.

**உயர்வடைந்து செல்லும் உலகளாவிய பால்மா விலைகளின் பின்னணியில் பாற்பண்ணைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான அவசரதேவையை அங்கீகரிக்கின்ற விதத்தில், பண்ணை உற்பத்தியாளர்கள், பதனிடலாளர்களின் நிதிச் செலவுகளைக் குறைக்கும் நோக்குடன் சிறப்புக் கொடுகடன் பொதியொன்று 2008 வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டது.** இத் திட்டத்தின்கீழ், 2008 தொடக்கம் மூன்றாண்டுக் காலப்பகுதிக்கு 8 சதவீதங் கொண்ட சலுகை வட்டிவீதத்தில் பாற்பண்ணையாளர்களுக்கு ரூ.7,000 மில்லியன்கள் பகிர்ந்தளிக்கப்படும். அரசாங்கம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு 9 சதவீதங் கொண்ட வட்டி உதவு தொகையினைச் செலுத்தும். மேலும் ரூ.2,000 மில்லியன் கொண்ட தொகை பால் பண்ணைப் பதனிடல் / பண்ணை உற்பத்திகளின் தயாரிப்பிற்காக மூன்றாண்டு காலப்பகுதிக்கு 12 சதவீத சலுகை வீதத்தில் கடன் வழங்குவதற்கான சிறப்புக் கொடுகடன் பொறியொன்றினை உள்ளடக்கியிருந்தது.சிறிய நடுத்தரளவிலான வேளாண்மைச் செய்முறை முறைப்படுத்தலுக்கு அரசு 8 சதவீத வட்டிவீதஉதவு தொகையினை ஏற்றுக் கொள்வதுடன் 12 சதவீத சலுகை அடிப்படையிலான வட்டி வீத்தில் கடன்களை வழங்குவதற்கான ஒரு விசேட கடன் பொதியும் 2008 வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது ரூ. 100,000 மேற்பட்ட கடன் வசதி (கிருசி நவோதய திட்டத்தின் வழங்கப்பட்ட கடன்களுக்கான மேல் எல்லை) தேவைப்பட்ட வேளாண்மைப் பதனிடுவோரின் நிதியிடல் தேவைப்பாடுகளை வழங்கும். பயிர்ச்செய்கை / உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் புறம்பாக பதனிடல் நடவடிக்கைகளை உள்ளடக்குவதன் மூலமாக பயிர்ச்செய்கை / உற்பத்திக்கான சலுகை ரீதியான நிதியத்தின் பெறுகைகளுக்குப் புறம்பாக இச் சிறப்புக் கொடுகடன் பொதிகள் வேளாண்மை / பண்ணை உற்பத்திகளுக்கான தொடர்ச்சியான பெறுமதிகளுடன் சேர்த்து நிதி வழங்கப்படுமென்பதுடன் இதனால் வேளாண்மையாளர் /பண்ணையாளர்களுக்கு ஒன்று சேர்ந்த நன்மைகள் கிட்டும். இவை உறுதியான சந்தையொன்று நிறுவப்படுவதனையும் அவர்களின் உற்பத்திக்கான கவர்ச்சியான விலைகளையும் உள்ளடக்கும். அவ்வசதியை எதிர்பார்க்கும் பெரும்பாலான வேளாண்மை பதனிடுவோர் முன்னோக்கிய வர்த்தக உடன்படிக்கையின் கீழ் தமது மூலப் பொருட் தேவையை கொள்வனவு செய்வதற்கான விருப்பத்தினை ஏற்கனவே வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

**2007இல் நுண்பாக நிதியியல் துறையில் பல்வேறு அபிவிருத்திகள் காணப்பட்டன.** சனசவிய நம்பிக்கை நிதியத்தினைத் தொடர்ந்து தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் இலங்கை நுண்பாக நிதியினை பகிர்நதளிக்கும் உச்ச நிறுவனமாக விளங்குகின்றது. பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள வறிய மக்களைச் சென்றடைவதற்கான தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் உபாயம் யாதெனில் சனசமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட கீழ் மட்ட அமைப்புக்களை நிதிப் பகிர்ந்தளிப்பிற்கு பயன்படுத்திக் கொள்வதேயாகும். தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, மீன்பிடி, குடிசைக் கைத்தொழில் மற்றும் ஏனைய வருமான உருவாக்க நடவடிக்கைகளிலுள்ள நுண்பாக தொழில் முயற்சிகளுக்கு கடன்வழங்குவதற்காக ரூ.1,102 மில்லியன் கொண்ட மொத்த நிதியினைக் கிடைக்கச் செய்தது. சுனாமியுடன் தொடர்பான திட்டங்களின் கீழான பகிர்ந்தளிப்புக்கள் முடிவுறுத்தப் பட்டமையின் காரணமாக மொத்தக் கடன் பகிர்ந்தளிப்புக்கள் முன்னைய ஆண்டிலும் பார்க்க ஓரளவு குறைவாகக் காணப்பட்டன.

**மேல் மாகாணத்திற்கு வெளியே நிதியின் கிடைப்பனவினை உயர்த்துவதன் மூலம் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியினை எய்துவதனை தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் பெருமளவிற்கு வலியுறுத்துகின்றது.** தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் வடமேல் மாகாணத்தில் மிக உயர்ந்த விகித கடன்களைப் பகிர்ந்தளித்ததுடன் கடன்வழங்கலின் மொத்தப் பெறுமதியில் ஏறத்தாள மூன்றிலொரு பங்கு (32.5 சதவீதம்) அம் மாகாணத்திற்கு வழங்கப்பட்டது. மொத்தக்

கடன் பெறுமதியில் ஏறத்தாள 16.6 சதவீதம் வடமேல் மாகாணத்திற்கு வழங்கப்பட்டதுடன் குருநாகல் மாவட்டம் மட்டும் நாடுமுழுவதற்கும் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதியில் 10.4 சதவீதத்திற்கு வகைகூறியது. மாறாக தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதியல் 8.9 சதவீதம் மட்டுமே மேல் மாகாணத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. தேசிய அபிவிருத்தி நம்பிக்கையாளர் நிதியத்தின் கடன்வழங்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான நிதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலிருந்து 1,354 கடன்பாட்டாளர்கள் பயன் பெற்றுக் கொண்டனர். இவ்வாண்டில் மோதல்களினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பிரதேசங்களுக்கு நிதிகளை வழிப்படுத்துவதற்காக வடக்குக்கிழக்கு கரையோர சனசமூக அபிவிருத்திச் செயற்றிட்டம் நடைமுறைக்கிடப்பட்டது. எனினும் இப்பிரதேசங்களில் இச் செயற்றிட்டத்தின் கீழான கொடுகடன் பகிர்ந்தளிப்பு தொடர்ந்தும் மெதுவாகவே காணப்பட்டது.

**மத்திய வங்கி அதன் வறுமை ஒழிப்புத் திட்டங்களினால் இதுவரை பயன்படுத்தப்பட்ட மாதிரிகளுக்கு 2007இல் சில தொழிற்பாட்டு மாற்றங்கள் செய்யப்பட்டன.** திட்டத்தின் புவியியல் பிரதேசங்களின் உள்ளடக்கத்தை அதிகரிப்பது மற்றும் கடன்பகிர்ந்தளிப்பிற்காக கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியினை உயர்ந்தபட்சத்திற்கு அதிகரிப்பது ஆகியவற்றிற்கு இது துணைபுரிகின்றது. 2006 திசெம்பரில் வறுமை ஒழிப்பு நுண்பாக செயற்றிட்டத்திற்கான வெளிநாட்டு நிதி உதவி முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டத்தின் கடன் அளவீடுகளில் இருந்து நிதியிடப்பட்ட வறுமை ஒழிப்பு நுண்பாக நிகழ்ச்சித்திட்ட சுழலும் நிதியத்திட்டம் தொழிற்படத் தொடங்கியது. 6 மாவட்டங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தபட்டிருந்த வறுமை ஒழிப்பு நுண்பாக செயற்றிட்டத்தினைப் போலன்றி, வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் நிகழ்ச்சித் திட்ட சுழலும் நிதியத்திட்டத்தின் நடவடிக்கைகள் நாடு முழுவதிலுமுள்ள மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டன. மோதலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும், பின்தங்கிய பிரதேசங்களிலும் தொழிற்படுத்தப்படவுள்ள வறுமை ஒழிப்பு நுண்பாக நிகழ்ச்சித் திட்டத்தின் கட்டம் II இற்காக மத்திய வங்கி பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கியுடன் பேரம் பேசல்களை பூர்த்தி செய்துள்ளது. வறுமை ஒழிப்பு நுண்பாக நிகழ்ச்சித்தட்டம் கட்டம் II இற்கான வெளிநாட்டு நிதி உதவி ஏறத்தாள ரூ.2.6 மில்லியனாக இருப்பதுடன் செயற்றிட்ட நடவடிக்கைகள் 14 மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும். உயர்ந்தபட்ச புவியியல் செயற்பரப்பினை எய்தும் பொருட்டு வறுமை ஒழிப்பு நுண்பாக செயற்றிட்டம் கட்டம் II தொழிற்படுகின்ற 14 மாவட்டங்கள் தவிர்ந்த மற்றைய மாவட்டங்களில் எதிர்காலத்தில் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் நிகழ்ச்சித்திட்ட சுழலும் நிதிய திட்டமொன்றினைத் தொழிற்படுத்த தீர்மானிக்கபட்டிருப்பதுடன் இதன் காரணமாக வறுமை ஒழிப்பு நுண்பாக நிகழ்ச்சித்திட்ட சுழலும் நிதியத்திட்டமும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிகழ்ச்சித் திட்டம் II உம் சேர்ந்து தீவு முழுவதும் தொழிற்பாட்டிலிருக்கும். மேலும், ஆரம்ப வறுமை ஒழிப்பு நுண்பாக நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் முக்கியமாக 6 அபிவிருத்தி வங்கிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த வேளையில் நிகழ்ச்சித் திட்டத்தின் செயற் பரப்பினை அதிகரிப்பதற்காக நிகழ்ச்சித்திட்ட சுழலும் நிதியத்திட்டமும் வறுமை ஒழிப்பு நுண்பாக செயற்றிட்டம் II உம் 14 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுடன் தொழிற்படுத்தப்படும். வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் நிகழ்ச்சித்திட்ட சுழலும் நிதியத்திட்டத்தின் நிருவாகச் செலவினைச் சிக்கனப்படுத்தும் பொருட்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிடம் பாரிய பொறுப்பொன்று ஒப்படைக்கப்பட்டது.

**அட்டவணை 8.11** — **காசல்லாத கொடுப்பனவுகள் : கொடுக்கல் வாங்கல்களின் அளவும் பெறுமதியும்**

| கொடுப்பனவு முறைமை | 2006 (அ) அளவு ('000) | 2006 (அ) பெறுமதி (ரூ.பில்) | 2007 (ஆ) அளவு ('000) | 2007 (ஆ) பெறுமதி (ரூ.பில்) |
|---|---|---|---|---|
| **பாரிய பெறுமதிக் கொடுப்பனவு முறைமைகள்** | 175 | 18,110 | 195 | 21,266 |
| அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை | 175 | 18,110 | 195 | 21,266 |
| **சில்லறைப் பெறுமதிக் கொடுப்பனவு முறைகள்** | 67,560 | 4,174 | 74,334 | 4,759 |
| பிரதான காசோலைத் தீர்ப்பனவு முறைமை | 44,343 | 3,823 | 46,148 | 4,296 |
| ரூபா வரைவு தீர்ப்பனவு முறைமை | வி.கி | 4 | வி.கி | 2 |
| பிராந்திய காசோலை தீர்ப்பனவு முறைமை | 510(இ) | 25(இ) | | |
| இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை | 4,165 | 121 | 5,945 | 176 |
| கொடுகடன் அட்டைகள் | 16,391 | 55 | 18,261 | 67 |
| வரவு அட்டைகள் | 516 | 1 | 863 | 3 |
| இணையத்தள வங்கித் தொழில் | 1,316 | 101 | 2,693 | 150 |
| தொலைபேசி வங்கித் தொழில் | 319 | 33 | 424 | 54 |
| அஞ்சல் சாதனங்கள் | வி.கி | 11 | வி.கி | 11 |
| **மொத்தம்** | 67,735 | 22,284 | 74,529 | 26,025 |
| **ஐ.அ.டொலர் காசோலைத் தீர்ப்பனவு முறைமை** | 98 | 21 | 84 | 23 |

(அ) திருத்தப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) 11 மே தொடக்கம் காசோலை பிரதிமைப்படுத்தலும் சுற்றோட்ட குறைப்புக்குமான முறைமை ஆரம்பிக்கப்பட்டு பிராந்திய தீர்த்தல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டமையால் 2006 மே 10 ஆம் திகதி வரையான தரவுகளை உள்ளடக்குகிறது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சிறப்புக் குறிப்பு 20

# இலங்கையில் பாசல் II மூலதனப் போதுமாந்தன்மை நியமத்தின் அமுலாக்கம் *

## பாசல் II ஓர் அறிமுகம்

பாசல் II என பரவலாக அறியப்பட்ட மூலதன அளவீடு மற்றும் மூலதன நியமங்களின் சர்வதேச குவிவு வங்கிகளில் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் நேர் முகாமைத்துவத்துக்கு இடமளிக்கும் ஓர் கட்டமைப்பை வழங்குகின்றது. இது செயற்பாட்டு இடர் நேர்வுக்காக (கடன் மற்றும் சந்தை இடர்நேர்வுகளுக்கு மேலதிகமாக) ஓர் மூலதன அறவீட்டினை ஒன்றினைணத்தல் மற்றும் (1) ஆகக்குறைந்த மூலதனத் தேவைப்பாடுகள் (2) மேற்பார்வை மீளாய்வு செய்முறை மற்றும் (3) சந்தை ஒழுங்குகள் என்றழைக்கப்படும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட மூன்று தூண்களினூடாக ஏற்கனவே பின்பற்றப்பட்டு வந்த மூலதனப் போதுமாந்தன்மை நியமத்தில், பாசல் I, உள்ள குறைபாடுகளில் சிலவற்றை நிவர்த்தி செய்வதற்கு ஓர் முயற்சியாக காணப்படுகிறது. ஆகவே பாசல் II ஓர் விரிவான கட்டமைப்பாக இருப்பதுடன் இது (1) இடர்நேர்வு அளவீடுகள் மற்றும் முகாமைத்துவத்தை விருத்தி செய்வதற்கு வங்கித் தொழில் நிறுவனங்களுக்கு வலுவான ஊக்கப்படுத்தல்களையும் (2) ஒழுங்குபடுத்துனர்க்கு வங்கித் தொழில் இடர்நேர்வுகளால் ஒழுங்குபடுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளை மிக நெருக்கமாக இணைப்பதன் மூலம் வங்கியின் பாதுகாப்பு மற்றும் உறுதித்தன்மையினை விருத்தி செய்வதற்கான அளவீடுகளை எடுப்பதற்கும் மற்றும் (3) வங்கி முகாமைத்துவம் மற்றும் வங்கினுடைய ஏனைய அக்கறையை தரப்பினர்களுக்கு ஓர் உயர்ந்தளவான கணக்கறிதகமை மற்றும் வெளிப்படையான தன்மையை உருவாக்குவதற்கான சந்தைப் பெறுமதியின் மேலதிகப்பயன்பாடு என்பவற்றைப் வழங்குகிறது.

## இலங்கையில் பாசல் II வினை சேர்த்துக் கொள்ளல்

2007உம் அதற்கு அப்பாலும் நாணய நிதியியல் துறைக்கான கொள்கைகளிற்கான வழிகாட்டியில் அறிவிக்கப்பட்டவாறு 2008 சனவரியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் இலங்கையில் அனைத்து அனுமதியளிக்கப்பட்ட வங்கிகளுக்குமாக பாசல் II மூலதனப் போதுமாந்தன்மை நோக்கத்துக்காக மூலதன அறவீடுகளை கணிப்பிடுகையில் கொடுகடன் இடர்நேர்வுகளுக்காக தரப்படுத்தல் அனுகுமுறையையும் சந்தை இடர்நேர்வுக்காக தரப்படுத்தல் அளவீட்டு அணுகுமுறையையும் மற்றும் செயற்பாட்டு இடர்நேர்வுக்காக அடிப்படை குறிகாட்டி அனுகுமுறையையும் பின்பற்றுமாறு தேவைப்படுத்தப்பட்டது. இது தொடர்பில் 2006 இலிருந்து மேற்கொள்ளப்பட்ட தயார்படுத்தல் வேலைகள் பின்வருமாறு.

அ. வங்கிகளின் மீதான தாக்கத்தினை அளவிடுவதற்கு 2005 மார்ச்சில் வங்கிகளால் ஆரம்பிக்கப்பட்ட சுய - மதிப்பீடுகள் தொடர்ந்திருந்தன. தொழில்துறைக்காக பாசல் II இன் கீழ் மதிப்பிடப்பட்ட மூலதனப் போதுமாந் தன்மை விகிதம் ஆகக் குறைந்த தேவைப்பாட்டு மட்டமான 10 சதவீதத்திற்கு எதிராக ஏறத்தாழ 13 சதவீதத்தினால் காணப்பட்டமையால் வங்கித் தொழில்துறைக்காக பாதகமான தாக்கம் எவையும் அவதானிக்கப்படவில்லை.

ஆ. இலங்கை மத்திய வங்கி இலங்கை வங்கியாளர்களுடைய கூட்டமைப்பினுடைய உபகுழுவுடன் பாசல் II இனை அமுலாக்குவதற்கான மாதிரிகளை இறுதியாக்குவதற்கு குறிப்பாக குறித்த சில வரைவிலக்கணங்கள் தொடர்பான விடயங்களை தீர்ப்பதற்கு நெருக்கமாக கடமையாற்றுவதை தொடர்ந்திருந்தது.

இ. 2006இன் இரண்டாம் காலாண்டிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் பாசல் II இன் கீழ் மூலதனப் போதுமாந்தன்மை விகிதத்தினுடைய இணையான கணிப்பீடு பற்றி வழிகாட்டிகள் 2006 மார்ச்சில் விநியோகிக்கப்பட்டது.

ஈ. பாசல் II இற்கு நகர்வதற்கு வங்கிகளுக்கு வழிகாட்டல் மற்றும் உதவும் பொருட்டு வங்கி மேற்பார்வை திணைக்களத்தில் ஓர் உதவும் குழு அமைக்கப்பட்டது. உதவும் குழுவானது வங்கிகள் மற்றும் இலங்கை வங்கியாளர்களுடைய கூட்டமைப்புடன் அமுலாக்கல் விடயங்கள் பற்றி தனிப்பட்ட ரீதியில் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தது.

உ. 2007 யூனில் வங்கிகளுக்கு ஓர் ஆலோசனைப் பத்திரத்தை விநியோகித்ததுடன் வங்கிகள் அவர்களுடைய நோக்குகளை பிரதானமாக, சொத்துக்களின் வேறுபட்ட பகுதிகள் தொடர்பில் பிரயோகிக்கத்தக்க இடர்நேர்வு நிறைவேற்றங்கள் பற்றியும் பத்திரத்தில் பயன்படுத்தப்பட்ட குறித்த சில சொற்பதங்கள் பற்றிய தெளிவாக்கம் தொடர்பிலும் சமர்ப்பித்திருந்தார். ஆலோசனைப் பத்திரத்தை அடிப்படையாகக் கொண்ட மூலதனப் போதுமாந்தன்மை விதத்தினுடைய சமாந்தரமான அறிக்கையிடல் மற்றும் வங்கிகளால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளுடைய சரியான தன்மை உறுதி செய்யப்பட்டது.

ஊ. பாசல் II பற்றி வங்கிகளுடைய ஆளனியினரை போதுமானளவு பயிற்சியளிக்க அனைத்து வங்கிகளையும் ஊக்கப்படுத்துகின்ற அதேநேரம் விழிப்புணர்வை உயர்த்தும் பொருட்டு வங்கி அலுவலர்களுக்கான மூன்று அரை நாள் கருத்தரங்குகள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் பாசல் II வினுடைய அமுலாக்கம் பற்றிய ஓர் சர்வதேச கருத்தரங்கும் இலங்கை மத்திய வங்கியால் நடாத்தப்பட்டது.

எ. இணைய தளத்தை அடிப்படையாகக் கொண்ட நேரடியான அறிக்கையிடல் முறைமையின் கீழ் வங்கிகளால் இலங்கை மத்திய வங்கிக்கு பாசல் I இற்கு பதிலாக பாசல் II இனுடைய காலாண்டு அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கான புதிய மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 2007இன் இறுதிக் காலாண்டிற்காக இறுதிப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டது.

ஏ. தரவுக்காப்பகங்களை அமைத்தல், அழுத்தப் பரீட்சிப்புக்கள், கொடுகடன் இடர்நேர்வு குறைத்தல்கள், சந்தை ஒழுங்குகளை உயர்த்துதல் போன்றவற்றை உள்ளடக்கிய மேலதிகமான அணுகுமுறைகளை நோக்கிய நகர்விற்காக தயார்படுத்தலுக்காக ஒழுங்குபடுத்தல்கள் விநியோகிக்கப்பட்டது.

ஐ. 2007 திசெம்பரில் இலங்கை மத்திய வங்கியானது பாசல் I இற்கு பதிலீடாக பாசல் II இன் கீழ் மூலதனப் போதுமாந் தன்மை வீதங்களைப் பேணுவது பற்றிய பணிப்புரையை விடுத்தது.

---

* மத்திய வங்கியினுடைய ஆண்டு அறிக்கை 2005இன் சிறப்புக் குறிப்பு 17, பாசல் II இனுடைய நன்மைகள் மற்றும் இலங்கையில் பாசல் II இனுடைய அமுலாக்கத்தை நோக்கி மத்திய வங்கியால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்பன பற்றிய தகவல்களைத் தந்துள்ளது. இக்கட்டுரை பாசல் II இன் சேர்த்துக் கொள்ளல் மூலம் அடையப்பட்ட முன்னேற்றம் பற்றியும் சார்க் பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளில் பின்பற்றப்படும் அணுகுமுறை பற்றியும் ஓர் மேலதிக தகவலை வழங்குகிறது.

இப்பிரதான கொள்கை முனைவுகள் வங்கித் தொழில் நிறுவனங்களுக்கிடையில் இடர்நேர்வு முகாமைத்தினுடைய உயர் தராதரங்களை ஊக்குவிப்பதற்கும் வங்கியினுடைய இடர்நேர்வுடன் அதனுடைய மூலதனத்தை சிறந்த முறையில் பேணுவதற்கும் ஓர் வங்கிக்கு உதவுவதற்கும் பங்களித்திருக்கும்.

**சார்க் பிராந்தியத்தில் பாசல் II இன் அமுலாக்கம்**

பாசல் II கட்டமைப்பானது பரிச்சயத்தின் மட்டத்தினையும் மற்றும் வங்கியில் முறைமை மற்றும் நாட்டு நிலைமையினுடைய அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு அதனுடைய அமுலாக்கத்துக்காக பல்வேறு தெரிவுகளை வழங்குகின்றபோதும், ஏறத்தாழ சார்க் பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளாலும் எடுக்கப்பட்ட கொள்கை அணுகுமுறையானது ஆரம்பத்தில் அதிக எளிமையான அணுகுமுறையை சேர்த்துக் கொள்வதற்கும் அதன் பின்னர் நடுத்தர காலத்தில் மேலதிகமான அணுகுமுறைக்கு நகர்வதுமாக இருக்கின்றது. இந்தச் செய்முறையில், ஏறத்தாழ இப்பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளும் வங்கித் தொழில் சமூகத்துக்கு அவர்களுடைய நோக்குகள் மற்றும் விதந்துரைப்புகளுக்காக ஆலோசனைப் பத்திரங்களை ஏலவே விநியோகித்துள்ளது.

- இந்திய வங்கிகள் கொடுகடன் இடர்நேர்வுக்காக தரப்படுத்தல் அணுகுமுறையையும் மற்றும் செயற்பாட்டு இடர்நேர்வுக்காக அடிப்படை குறிகாட்டி அணுகுமுறையையும் முதலில் சேர்த்து கொள்ளும் எனவும் 2009இல் பாசல் II இற்கு நகர்வதற்கு எதிர்பார்க்கின்றது என்றும் இந்தியா அறிவித்துள்ளது. தேவையான கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகின்றது. இந்திய ரிசேவ் வங்கியானது மேற்பார்வையாளர்களால் மற்றும் வங்கிகளால் தேவைப்படுத்தப்பட்ட நுட்பங்கள் விருத்தி செய்யப்படுகிறது என்பதை கருத்திற் கொண்டு வங்கிகள் உள்ளக தரமிடல்களை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்கு நகர்வதற்கு அனுமதித்தது.
- பாக்கித்தான் 2008 சனவரியிலிருந்து கொடுகடன் இடர்நேர்வுக்காக தரப்படுத்தல் அணுகுமுறையையும் செயற்பாட்டு இடர்நோவுக்காக அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறைக்கும் நகர்வதுடன் 2010 சனவரியிலிருந்து உள்ளக தரமிடலை அடிப்படையாக்க கொண்ட அணுகு முறையை பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கின்றது. உள்ளகத் தரமிடலை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்கு நகர்வதற்கு இயலளவை கொண்ட வங்கிகள் 2010 இற்கு முன்னரேயே பிரயோகிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. பாக்கித்தான் 2006இல் ஓர் சமாந்தர கணிப்பீட்டை ஆரம்பித்திருந்ததுடன் 2008 இலிருந்து உள்ளக தரமிடலை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையை நோக்கி நகர்வதற்கு இலக்கிடுகின்றது.
- பங்காளதேஸ் மற்றும் நேபாளம் ஆகியனவும் பாசல் II ஐ நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. அத்துடன் பாசல் I இலிருந்து இசைவாக மாறிச் செல்வதற்கு உதவும் பொருட்டு தேவையான மாற்றிச் செல்லல்களை ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேம்பட்ட அணுகுமுறைகளுக்கு நகர்வதற்கான வழிமுறைகள்

அ. தரப்படுத்தல் அணுகுமுறையின் கீழ் பெறுதிக் கருவிகள் மற்றும் பிணையமாக்குதல்களுக்கான சந்தை இடர்நேர்வுகளுக்கான மூலதன அறவீடு தொடர்பில் மேலதிக விழிகாட்டல்கள் 2008.இல் வழங்கப்படவிருக்கின்றன.

ஆ. உள்ளக முறைமைகளின் நடைமுறை மட்டத்தை கவனத்தில் கொண்டு அனைத்து முக்கியமான இடர்நேர்வுகளுக்கு துணைசெய்யும் பொருட்டு வங்கிகளால் போதுமான மூலதனம் பேணப்படுதலை உறுதி செய்வதற்கு 2010இல் பில்லர் 11, மேற்பார்வை மீளாய்வு செய்முறையினை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கின்றது. பில்லர் 11 வின் கீழ் கவனத்தில் கொள்ளப்படும் மேலதிக இடர்களாக கொடுகடன் குவியப்படுத்தல் இடர்நேர்வு, வங்கித் தொழில் புத்தகத்தில் வட்டிவீத இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு, தந்திரோபாய மற்றும் அங்கிகார இடர்நேர்வு என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

இ. வங்கிகளுக்கான மற்றும் வங்கி மேற்பார்வை திணைக்களத்தினுடைய அலுவலர்களுக்கான இயலளவை கட்டியெழுப்புதலானது ஒழுங்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தரவுக் காப்பகத்தை உருவாக்குதல், இடர்நேர்வு மாதிரிகள் மற்றும் வியாபாரம் பற்றிய அழுத்தப் பரீட்சிப்புக்கள் மற்றும் மதிப்பீடு போன்றவற்றிற்கு கருத்தரங்குகளை தொடர்ச்சியாக நடாத்துவதன் மூலம் அடையப்படும்.

ஈ. 2013 இலிருந்து (5 வருடங்களுக்குப் பிறகு) மேம்பட்ட அணுகுமுறைகளை நோக்கி நகர்வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதுடன் அந்நேரம் வங்கிகள் பொருத்தமான இடர்நேர்வு மாதிரிகள், இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் மற்றும் தரவு காப்பகத்தை கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உ. வங்கிகளுடைய இடர்நேர்வு முகாமைத்துவ செய்முறைகளை விருத்தி செய்வதற்கு வங்கிகளுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட

## 8.6 நிதியியல் உட்கட்டமைப்பு

### கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள்

**முறைசார் முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவு முறைமைகள்:** மத்திய வங்கியால் செயற்படுத்தப்படும் லங்கா செட்டில் முறைமை மற்றும் லங்கா கிளியரால் செயற்படுத்தப்படும் காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்புக்குமான இரு முறை முறைமை என்பன இரு முறமைசார் முக்கியத்துவமுடைய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையாகும். மத்திய வங்கியுடன் பேணி கொள்ளுகின்ற தீர்ப்பனவு கணக்குகளினூடாக வர்த்தக வங்கிகள் மற்றும் முதல்நிலை வணிகர்கள் போன்ற பங்குபற்றும் நிறுவனங்களுடையில் கொடுப்பனவுகளை சரிசெய்ய நிதிகளை மாற்றுவதற்கான ஓர் அதேநேர வலைப் பின்னல் சூழ்நிலையில் வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவு முறைமை மற்றும் பத்திரங்களற்ற வடிவில் அரச பிணையங்களுக்கான மத்திய வைப்பகமாக காணப்படுகின்ற லங்கா செக்குயர் முறமை என்பனவாகும். லங்கா செட்டில் முறைமை விநியோகம் எதிர் கொடுப்பனவு அடிப்படையில் அரச பிணையங்களின் பங்குபற்றுனர்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கலின் தீர்ப்பனவுக்கும் உதவுகின்றது. காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பிற்கான முறமையானது காசோலைகளின் தீர்த்தல்கள் மற்றும் பிற்போட்ட தீர்த்தல்கள், செலுத்தும் வங்கிகளுக்கு காசோலைகளினை அனுப்புதல் மற்றும் லங்காசெட்டில் முறைமையில் தீர்ப்பனவுக்கான

## சிறப்புக் குறிப்பு 21

## பல மட்டங்களிலான சந்தைப்படுத்தல் மற்றும் பிரமிட் திட்டங்கள்

### அறிமுகம்

நாட்டினுடைய பல பாகங்களிலும் தடை செய்யப்பட்ட திட்டங்களான பிரமிட் அல்லது பிரமிட் வகையிலான திட்டங்கள் மேம்படுத்தப்படுகின்றன. இவ்வாறான தடை செய்யப்பட்ட திட்டங்கள் போலியான வடிவில் பல மட்டங்களிலான சந்தைப்படுத்தல் திட்டங்களாக சந்தைப்படுவதாகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கனடா, மலேசியா, சிங்கப்பூர், யப்பான், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியா உள்ளடங்கலாக பல நாடுகள் பல மட்டங்களிலான சந்தைப்படுத்தல் என்பதை சட்ட ரீதியற்ற பிரமிட் திட்டங்களிலிருந்து வேறுபடுத்துவதற்கு பல்வேறு வழிகாட்டுதல்களையும் வரைவிலக்கணங்களையும் வெளியிட்டுள்ளதுடன் இதனை கையாளவதற்காக புதிய சட்டங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது. உதாரணமாக இரண்டாயிரமாம் ஆண்டில் பல மட்டங்களிலான சந்தைப்படுத்தல் மற்றும் பிரமிட் சட்ட மூலம் சிங்கப்பூரில் நிறைவேற்றப்பட்டது. சீனாவில் பல மட்டங்களிலான சந்தைப்படுத்தல் மற்றும் பிரமிட் திட்டங்களை மேம்படுத்தல் என்பவற்றை தடைசெய்யும் வகையிலான சட்டவிதி 2005ஆம் ஆண்டு வெளியிட்டது. யப்பான் சட்ட மூலத்தின் அத்தியாயம் 3இல் 1976ஆம் ஆண்டு குறிப்பிட்ட வர்த்தக கொடுக்கல்வாங்கல்கள் சட்டம் - 1976ஆம் ஆண்டு யூன் 4ஆம் திகதியின் 57ஆம் இலக்கச் சட்டம் என்பன பல மட்டங்களிலான சந்தைப்படுத்தல் வகையிலான பிரமிட் திட்டங்களை கட்டுப்படுத்துவதற்கான சட்ட சரத்துக்களை உள்ளடக்கியுள்ளது.

### பல மட்டங்களிலான சந்தைப்படுத்தல்

பொதுவான நியதிகளின்படி "வலைப்பின்னல்" அல்லது "தாய" சந்தைப்படுத்தல் அல்லது "குறிப்பிடும்" சந்தைப்படுத்தல் என அறியப்படும், பல மட்டங்களிலான சந்தைப்படுத்தல் என்பது, பொருட்கள் சேவைகளை சில்லறை வியாபார நிலைய இடையீடின்றி விநியோகத்தர்களூடாக விற்பனை செய்யும் ஒரு வழியாகும். பல மட்டங்களிலான சந்தைப்படுத்தலானது பொருட்களை விற்பதற்காக மற்றவர்களை ஆட்சேர்ப்பதன் மூலம் விற்பனைப் படையை கட்டியெழுப்புகிறது. ஓர் மிகவும் முக்கியமான தன்மையாக இத்திட்டத்தில் இணைந்து கொண்ட முன்னேற்றுவிப்பாளருக்கு நஷ்ட ஈடு அல்லது தரகுப் பணமானது பிரதானமாக பொருட்களின் விற்பனையின் அடிப்படையிலான வீதமாக அமையும்.

### பிரமிட் திட்டத்தின் பிரதான பண்புகள்

ஆட்சேர்ப்பு மூலம் அவர்கள் பணத்தை சம்பாதித்துக் கொண்டாலும் பல பிரமிட் திட்டங்கள் பொதுவாக தங்களை பல மட்டங்களிலான சந்தைப்படுத்தல் திட்டங்களாக மாறுவேடமேற்றுக் கொண்டு சேகரிப்பாளர்களுடைய பொருட்கள், மென்பொருட்கள், பயிற்சி செயற்றிட்டங்கள் முதலானவற்றை விற்பனை செய்யும். முன்னேற்றுவிப்பாளரால் நடத்தப்படும் விற்பனை பேச்சு வார்த்தைகளில் ஈடுபடும் பொதுமக்களின் உறுப்பினர்கள் இது போன்ற திட்டங்களில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பிரமிட் திட்டத்தில் இருக்கும் சட்ட ரீதியற்ற பல மட்டங்களிலான சந்தைப்படுத்தல் திட்டங்கள் வழமையாக பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும்.

- பொதுவாக, பிரமிட் திட்டமானது அதன் பங்கேற்பாளர்களுக்கு இறுதியில் நட்டத்தை ஏற்படுத்தும் ஒரு ஆட்சேர்ப்பு விளையாட்டாகும்.

- பிரமிட் அல்லது அது போன்ற திட்டங்களில் பங்குபற்றுபவர்கள், ஏனையவர்களை இத்திட்டத்துக்கு பங்கேற்பாளர்களாக ஆட்சேர்ப்பதன் மூலம் தரகு.'. நட்ட ஈட்டைப் பெறுவார்கள், அதுபோல் புதியவர்களும் மேலும் புதியவர்களை ஆட்சேர்ப்பதன் மூலம் தரகு பணம் பெறுவார்கள்

- இத்திட்டத்தை முன்னெடுப்பவர்கள், இத்திட்டம் மூலம் எப்படி மக்கள் இலகுவாக பணத்தை சம்பாதிக்கலாம், எப்படி குறுகிய காலத்தில் செல்வந்தவர்களாகலாம், என்பதை அழுந்தக் கூறி ஆட்களைச் சேர்ப்பதில் முனைப்பாக இருப்பார்கள்.

- பிரமிட் அல்லது அது போன்ற பல மட்ட சந்தைப்படுத்தல் திட்டங்கள், பொருட்கள், சேவைகளை விற்பனை செய்வதை அடிப்படையாகக் கொண்டிருக்கும். விற்கப்பட வேண்டியதாயிருக்கும் பொருட்கள்.'. சேவைகளானது, மக்களால் குறிக்கப்பட்ட விலையில் வாங்கமுடியாத சில விடயங்களாக காணப்படும், ஆனாலும் பிரமிட் திட்டத்தில் பொருட்கள் சேவைகளின் விற்பனை முக்கிய நோக்காக இராது.

- இணைவுக் கட்டணம் செலுத்துவதன் மூலம் அல்லது பொருட்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் பங்காளிகள் இத்திட்டத்தில் பணத்தை முதலிடுமாறு வேண்டப்படுவார்கள்.

மேலும் நகர்வை ஊக்குவித்தல், அட்டையை அடிப்படையாக கொண்ட கொடுப்பனவு சாதனங்களுடைய சேவை வழங்குனர்களுக்கு பணிப்பரைகளை வழங்குதல் மற்றும், அதனைத் தொடர்ந்து அதனோடு இணைந்து நடத்தல்களுக்கான சேமிப்பு மேற்பார்வை செய்தல் மற்றும் செலவுச் சிக்கனம் மற்றும் வினைத்திறன் நன்மைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு வங்கிகளை ஊக்குவித்தல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.

**தேசிய கொடுப்பனவுச்சபை:** கொடுப்பனவு மாற்றல்களானது ஓர் முழு மொத்த செயற்பாட்டு கொடுப்பனவு முறைமையை உருவாக்க முறைமைகள், கட்டமைப்பு மற்றும் சேவை வழங்குனர்களை இணைத்த ஓர் பொதுவான கட்டமைப்பினை வேண்டி நிற்கின்றது. உட்கட்டமைப்பினுடைய தரமுயர்த்தல்களை அமுலாக்குவதற்கான ஓர் வினைத்திறனான அபிவிருத்தி செய்முறையை உருவாக்குவதற்கான சவாலானது, போட்டித்தன்மை வாய்ந்த சந்தர்ப்பங்களின் உட்கட்டமைப்புக்களை கட்டியெழுப்புவதில் வழங்குனர்களுக்கு வழங்குவதற்கு மற்றும் முறமையுடைய நம்பகத்தன்மை வாய்ந்த நியமங்களைப் பூர்த்தி செய்வதற்கும் மத்திய வங்கி, தனிப்பட்ட வங்கிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கிடையில் ஒத்துழைப்பின் தேவை கவனத்தில் கொள்ளப்பட்டதாக காணப்படுகிறது. இதன் பிரகாரம் தேசிய கொடுப்பனவு சபை நிறுவியதுடன் 2007 - 2010 ஐ உள்ளடக்கி ஓர் வழிகாட்டல் கட்டமைக்கப்பட்டது. 2008இல் நடைமுறைக்கிடப்பட இருக்கின்ற வழிகாட்டலின் பிரதான அம்சங்கள், வங்கிகளுடைய மூன்றாம் தரப்பு வாடிக்கையாளர்களுக்காக இலத்திரனியல் நிதிப் பரிமாற்றங்களுக்கு உதவும் பொருட்டு வங்கிகளுக்காக ஓர் பொதுவான கொடுப்பனவு ஆழி ஒன்றை நிறுவுதல் மற்றும் 'சிப்' ஐ அடிப்படையாகக் கொண்ட கடன் அட்டைகளுக்கு நகர்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

**சார்க் கொடுப்பனவுகளுக்கான முனைவுகள்:** அங்கத்துவ நாடுகளுடைய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் மீளமைப்பதற்கான ஓர் உயர்மட்ட தந்திரோபாய வழிகாட்டலின் அடிப்படையில் இடர்நேர்வுகளை குறைப்பதற்கு மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகள் நியமங்கள் மற்றும் புதிய தொழில் நுட்பம், பாதுகாப்பு மற்றும் வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் பிராந்தியத்திற் கிடையிலான வர்த்தக நடவடிக்கைகளுக்கு மேலும் உதவும் பொருட்டு தொடர்புடைய உள்நாட்டு கொடுப்பனவு முறைமைகளுடைய ஒன்றிணைப்பு மற்றும் பிராந்திய இசைவாக்கத்தை ஊக்குவிப்பதற்கானதொரு ஓர் சார்க் கொடுப்பனவுகளின் முனைவுகள் மேற்கொள்ளப் பட்டது.

## சட்டவாக்கங்களும் திருத்தங்களும்

**நிதியியல் புத்தாக்கங்களுடன் இணைந்து செல்லும் விதத்தில் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் நடைமுறையில் உள்ள சட்ட கட்டமைப்புக்களை வலுப்படுத்தும் பொருட்டு மீளாய்வு செய்து சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு மத்திய வங்கி தொடர்ந்தும் ஈடுபட்டு வந்தது.** கடன் பிணையங்களை விநியோகிப்பதன் மூலம் பொது மக்களிடமிருந்து நிதியினை திரட்டிக் கொள்வதற்கு விசேட குத்தகைக் கம்பனிகளை இயலச் செய்ய ஏதுவாக 2007இல் நிதிக் குத்தகைச்சட்டம் திருத்தப்பட்டது. இவை அவர்களுடைய நிதியிடல் மூலங்களை மேலும் விரிவாக்கியது. மத்திய வங்கி, நிதிக் கம்பனிகளுடைய முன்னெச்சரிக்கைத் தேவைப்பாடுகளையும் அனுமதியளிக்கப்படாத வியாபாரங்கள் தொடர்பில் இதனுடைய புலனாய்வு அதிகாரங்களை வலுப்படுத்துவதற்கும் நிதியியல் கம்பனிச் சட்டத்திற்கு திருத்தங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றது. நுண்பாக - நிதி நிறுவனங்களுக்கான ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பை அறிமுகப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கி நுண்பாக நிதி சேவை வழங்குனர்களுடைய நிறுவன ரீதியான ஒழுங்கமைப்புக்களை உத்தியோகபூர்வமாக்குவதற்கும், விசாலமான நிதியிடல் மூலங்களை அடைய இந் நிறுவனங்களை இயலச் செய்யும் மற்றும் அவைகளுடைய நிதியியல் நிலைத்து நிற்கும் தன்மையை ஊக்குவிக்கும் பொருட்டும் ஓர் மேற்பார்வை பொறிமுறை உருவாக்குவதற்கும் சட்டவாக்கமொன்றை வரைந்துள்ளது. கொடுகடன் தகவல் பணியக சட்டமும் அதிக பன்முகப்படுத்தப்பட்ட பாவனையாளர் குழுக்களுக்கான இதனுடைய சேவைகளை வழங்குவதற்கும் பெறுமதி சேர் சேவைகளை வழங்குவதற்கும் ஏதுவாக மீளமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேலும் படுகடன் அறவிடல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்திற்கான திருத்தம், நிதி இல்லாமையின் காரணமாக திரும்பும் காசோலைகளின் மூலம்ஏற்படும் அச்சுறுத்தல்களைக் கட்டுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நிதியியல் துறையினுடைய அபிவிருத்தி மற்றும் உறுதித்தன்மை தொடர்பான முக்கியமான சட்டவாக்கமும் இறுதி செய்யப்பட்டு வருகின்றது.** விசேட பிணையமாக்கல் நிறுவனங்களுடைய உருவாக்கத்தினூடாக சொத்து, பாதுகாப்பு பிணையங்களுடைய விநியோகங்களுக்கும் பிணையமாக்கல் கொடுக்கல் வாங்கல்களுடைய ஒழுங்குபடுத்தல்களுக்கும் உதவும் பொருட்டு ஓர் பிணையமாக்கல் சட்டம் தயாரிக்கப்பட்டது. பிரேரிக்கப்பட்ட சட்டவாக்கமானது இடர் நேர்வு முகாமைத்துவம் மற்றும் மூலதன சந்தை அபிவிருத்தி என்பவற்றை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பெறுதிகளின் தொழில்துறையினுடைய அபிவிருத்திக்கு உதவும் பொருட்டு பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டம் திருத்தப்படுகின்றது. முன்னெச்சரிக்கை ஒழுங்குபடுத்தல்களை வலுப்படுத்துவதற்கும் காப்புறுதி சாதனங்களுடைய விநியோகத்துக்கான முகவர்களாக வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களை நியமிப்பதற்கு அனுமதி அளிக்கும் பொருட்டும் காப்புறுதித்துறையினுடைய ஒழுங்குபடுத்தல் சட்டமும் திருத்தப்படுகின்றது. 2007இல் நடைமுறைக்கு வந்த புதிய

கம்பனிகள் சட்டம் கம்பனிகளாக காணப்படுகின்ற நிதியியல் நிறுவனங்களில் நேரடித் தாக்கத்தை கொண்டுள்ளது. இச் சட்டமானது புதிய எண்ணக்கருவான 'குறிக்கத்தக்க மூலதனம்' மற்றும் கம்பனிகள் சாதகமான ஒன்று திரட்டிய ஒதுக்கங்களைக் கொண்டிருந்தால் மட்டுமே பங்கு இலாபங்களை பிரேரிக்க முடியும் என்ற விதியையும் அறிமுகப்படுத்தியது. மேலும் பணிப்பாளர்களுடைய பொறுப்புக்களை வரையறுத்ததன் மூலம் கம்பனி ஆளுகை விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் சிறுபான்மை பங்குதாரர்களின் நலன்கள் வலுப்படுத்தப்பட்டது.

## ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் மேற்பார்வை

**உரிமம் பெற்ற வங்கிகளின் ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் மேற்பார்வைகளுக்கான பொறுப்புக்களைக் கொண்ட மத்திய வங்கியானது, ஆண்டுக் காலப்பகுதியில் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்காக வங்கித் தொழில் சட்டத்தின் பிரகாரம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியது.** பங்கு உரிமையாண்மையினை விசாலப்படுத்தும் நோக்குடன் வாக்குரிமையை கொண்ட பங்குகள் தொடர்பில் ஓர் புதிய பங்கு உரிமையாண்மை பணிப்புரை விநியோகிக்கப்பட்டது. இது மிகப்பெரிய பங்கு உரிமையால் எழக்கூடிய ஏதாவது நலன்களின் முரண்களை கவனத்தில் கொண்டுள்ளது. வாக்குரிமையை கொண்ட விநியோகிக்கப்பட்ட பங்கு மூலதனத்தில் அனுமதியளிக்கப்பட்ட ஆகக் கூடிய உரிமையாண்மையின் சதவீதம் விநியோகிக்கப்பட்ட பங்கு மூலதனத்தில் 15 சதவீதமாக காணப்படும். கொடுகடன் செறிவுபடுத்தல் இடர்நேர்வை குறைக்கும் பொருட்டு ஓர் தனிப்பட்ட தரப்பினர்க்கோ மற்றும் ஓர் கம்பனியினுடைய குழுமத்துக்கோ வழங்கப்படக் கூடிய அதிகூடிய கொடுகடன்களின் தொகை முறையே மூலதனத் தளத்தின் 30 சதவீதம் மற்றும் 33 சதவீதத்திற்கு வரையறுக்கப்படும். குறிப்பிடத்தக்க நிபந்தனைகளை கவனத்தில் கொண்டு உயர்ந்த எல்லைகள் அனுமதிக்கப்படுகின்றன. ஒழுங்குபடுத்தல் மூலதனத்தில் உள்ளடங்க தகுதியான மூலதனச்சாதனங்களானது மைய நிரந்தர மூலதனமாக நிரந்தரப் படுகடன் உள்ளடங்க கூடிய வகையில் விரிவாக்கப்பட்டது. கலப்பு மூலதனம் மற்றும் துணைப்படுகடன் சாதனங்களுக்கான தகைமைப் பிரமாணங்களும் விரிவாக்கப்பட்டன.

**ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவத்தையும் வங்கிகளுடைய உறுதித்தன்மையினையும் ஊக்குவிக்கும் பொருட்டு வங்கிகளுடைய வியாபார செயற்பாடுகளுக்காக பணிப்பாளர் சபையினை அதிக பொறுப்பு மற்றும் கடப்பாட்டிற்குள்ளாக்கும் நோக்கத்துடன் கம்பனி ஆளுகைப் பணிப்புரை விநியோகிக்கப்பட்டது.** பணிப்புரைகளின் பிரதான விடயங்களாக பணிப்பாளர் சபையினுடைய உள்ளடக்கம் மற்றும் பொறுப்புக்கள், பணிப்பாளர்களுடைய பொருத்தமான தகுதியை அளவிடுவதற்கான அளவீடுகள், பணிப்பாளர் சபையால் கையளிக்கப்பட்ட முகாமைத்துவ செயற்பாடுகள், தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரியின் கடமைகளுடைய வேறுபடுத்தல்கள், சபையால் நியமிக்கப்படும் குழுக்கள் மற்றும் நிதியியல் கூற்றுக்களின் வெளிப்படுத்தல்கள் என்பன காணப்படுகின்றன. பணிப்புக்கள் தேவையான மாற்றத்திற்குரியகால ஏற்பாடுகளுடன் 2008 சனவரியிலிருந்து ஏற்புடையதாகும்.

**பாசல் II மூலதனப் போதுமாந்தன்மை கட்டமைப்பின் பின்பற்றுதல் வங்கிகளின் இடர்நேர்வுகளுடன் மிக நெருக்கமாக மூலதனப் போதுமாந்தன்மை கணிப்பீட்டை இணைப்பதால் வங்கித் தொழில் முறைமையினுடைய பாதுகாப்பு மற்றும் உறுதித் தன்மையினை விருத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.** 2008 சனவரியிலிருந்து வங்கிகள் கொடுகடன் மற்றும் சந்தை இடர்நேர்வுக்காக தரப்படுத்தல் அணுகுமுறையையும், செயற்பாட்டு இடர்நேர்வுக்காக அடிப்படைக்குறிகாட்டி அணுகுமுறையினையும் பிரயோகிக்கு மாறு தேவைப்படுத்தப்படுகின்றன.

**பணிப்பாளர்களுக்கோ அல்லது அவர்களது உறவினர்களுக்கோ நிதியியல் கொடுகடன்களை வழங்குவதை தடைசெய்வது பணிப்பாளர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்களுடனான வியாபார கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் நிதி கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் நிதிக் கம்பனிகளுக்கு புதிய பணிப்புரைகள் விநியோகிக்கப்பட்டது.** நிதிக் குத்தகை சட்டத்தின் கீழ் கடன் பிணையங்களை விநியோகிப்பதனூடாக பொதுமக்களிடமிருந்து நிதிகளை திரட்டுதல் தொடர்பில் பூர்த்தி செய்ய வேண்டிய தேவைப்பாடுகளை குறித்துரைத்து சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகளுக்கு ஓர் பணிப்புரை விநியோகிக்கப்பட்டது.

**கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுச் சட்டத்தின் கீழ் இலத்திரனியல் கொடுப்பனவு அட்டைகள் தொடர்பில் ஒழுங்குபடுத்தல்கள் விநியோகிக்கப்பட்டதுடன் அட்டையை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு சாதனங்களுடைய மேற்பார்வைக்காக பணிப்புரைகள் விநியோகிக்கப்பட விருக்கின்றன.** நிதியியல் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் பரிமாற்றங்கள் சட்டத்தின் கீழ் வங்கிகள், நிதியியல் கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள் பிணையக் கம்பனிகள் மற்றும் நாணய மாற்றுனர்கள் போன்றோர்க்கு, பணத்தை தூயதாக்கம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை தடுத்தல் மற்றும் நிதியியல் முறைமையின் நம்பகத் தன்மையை பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்ட

நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, "வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல்" மற்றும் உங்கள் வாடிக்கையாளர் களை அறிந்து வைத்திருங்கள் தொடர்பில் வழிகாட்டிகள் விநியோகிக்கப்பட்டன. நிதியியல் முறைமையின் இடர்நேர்வை குறைக்கும் பொருட்டு மத்திய வங்கி, அனுமதியளிக்கப்படாத மற்றும் தடைசெய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் திட்டங்களில் பணத்தை முதலிடுவதில் இடர்நேர்வு பற்றி பொது மக்களுக்கு அறிவூட்டும் பொருட்டு பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை தீவிரமாக முன்னெடுத்தது.

**2007இல் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைச் சந்தையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கான கம்பனி ஆளுகையின் சட்ட ரீதியான விதிகளை அறிமுகப்படுத்தியது.** முதலீட்டு முகாமையாளர்கள் முதலீட்டுப் பாதுகாப்பினை மேம்படுத்தவதற்காக அவர்களுக்குப் பணிப்புரை ஒன்று விடுக்கப்பட்டது

**நிதியியல் சந்தைகளினுடைய அபிவிருத்திக்காகவும் நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையினை பாதுகாப்பதற்காகவும் நிதியியல் ஒழுங்குபடுத்தல் முகவர்களுக்கிடையில் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு ஓர் உள்ளக ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களின் சபை உருவாக்கப்பட்டது.** இவ்வுயர் மட்ட சபை 2007இல் கட்டமைக்கப்பட்டதுடன் மத்திய வங்கியின் ஆளுநர் இதற்கு தலைமை வகிக்கின்றார். அத்துடன் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கைக் காப்புறுதிச்சபை, தேசிய கொடுப்பனவுகள் சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, கம்பனிப் பதிவாளர், இலங்கைக் கணக்குகள் மற்றும் கணக்காய்வு கண்காணிப்பு சபை, பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் என்பவற்றின் தலைவர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர். நிதியியல் குழுமங்களின் ஒழுங்குபடுத்துனர்களின் செயற்பாட்டுக் குழுவானது நிதியியல் குழுவால் ஏற்படுத்துகின்ற முறைமைசார் இடர்நேர்வுகளை அளவிடுவதற்கும் இத்தகைய சிக்கலான நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைக்கான பொறிமுறைமையை பிரேரிக்கவும் தேவைப்படுத்தப்படுகின்றது. ஒழுங்குபடுத்துனர்களின் செயற்பாட்டுக் குழுவானது உள்ளக ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களின் சபைக்கு அறிக்கையிட எதிர்பார்க்கப்படுகின்றது.

## கொடுகடன் தரமிடல்

**2007இற்கான அரசாங்கத்தின் நாட்டுக்கான தரமிடல் கடந்த ஆண்டிற்கான காணப்பட்டதை போன்று அதே மட்டத்தில் பேணப்பட்டது.** பிச் தரமிடல்கள் நீண்டகால வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணய தரமிடல்களாக 'BB-' குறித்தொதுக்கியுள்ள அதேநேரம் ஸ்ராண்டட் அன் புவர்ஸ் தரமிடலாக 'B+' ஐ குறித்தொதுக்குகின்றது. சர்வதேச மூலதனச் சந்தையில் ஐந்து வருட நிலையான வட்டி வீத முறியின் விநியோகத்தின் ஊடாக 500 மில்லியன் ஐ.அ.டொலரை திரட்டுவதற்கு நாட்டுக்கான தரமிடல்கள் அரசாங்கத்திற்கு உதவியது.

**2007இல் இலங்கையில் இரு கடன் தரமிடல் முகவர்கள் தொழிற்பட்டனர்.** மத்திய வங்கியானது நிதியியல் முறமையின் நம்பிக்கையை விருத்தி செய்யும் பொருட்டு வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களை (உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்) சுதந்திரமான தரமிடல் முகவர்களிடமிருந்து ஓர் கொடுகடன் தரமிடலை பெறுவதற்கும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தவும் தேவைப்படுத்து கின்றது.2007இல் 22 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் 10 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் முதலீட்டுத் தரமிடலைப் பெற்றுக்கொண்ட வேளையில், 11 நிதிக் கம்பனிகளும் முதலீட்டுத்தரமிடலைப் பெற்றுக் கொண்டனர்.

## கொடுகடன் தகவல்கள்

**கடன்படுனர்கள் பற்றிய கடன் தகவல் அறிக்கைகளை வழங்குகின்ற கொடுகடன் தகவல் பணியகமானது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பு குத்தகைக் கம்பனிகள் போன்ற அங்கத்துவக் கடன் நிறுவனங்களுக்கு வழங்கிய அறிக்கைகளின் எண்ணிக்கையில் ஓர் அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.** 2006இன் 801,508 அறிக்கைகளுடன் ஒப்பிடுகையில் 2007இல் கொடுகடன் தகவல் பணியகமானது கம்பனிகள் மற்றும் தனியார் கடன்படுனர் தொடர்பில் 884,620 கொடுகடன் அறிக்கைகளை வழங்கியது. இத்தகைய அறிக்கைகள் கடன்வழங்கும் நிறுவனங்களுடைய கடன் மதிப்பிடல் செய்முறைமையின் ஓர் முக்கியமான பகுதியாக உருவாகி வருகின்றது என்பதை இது குறித்துக் காட்டுகின்றது. அறிக்கையிடும் கடன் நிறுவனங்களின் எண்ணிக்கையும் கடந்த ஆண்டின் 93 இலிருந்து 2007இல் 95 க்கு அதிகரித்தது. 2007இன் இறுதிவரை கொடுகடன் தகவல் பணியகமானது ரூ.500,000 மற்றும் மேலான சாதகமான (ஒழுங்கான) மற்றும் பாதகமான (ஒழுங்கற்ற) கடன்வசதிகள் பற்றியும் 90 நாட்களுக்கு மேலாக நிலுவையாகவுள்ள ரூ.5,000 மற்றும் மேலான வெளிநின்ற மீதிகளையுடைய கொடுகடன் அட்டைகளின் / தகவல்களையும் சேகரித்தது.

**2008இன் தொடக்கத்திலிருந்து அனைத்து வகையான கடன் வசதிகளையும் உள்ளடக்கி வரையறைகள் எவற்றையும் உள்ளடக்காமல் சாதகமான மற்றும் பாதகமான கொடுகடன் தகவல்களை தொடர்ந்து சேகரிப்பதற்கு நேரடியான செயற்பாடுகளை தொடரும்.** கொடுகடன் தகவல் பணியக சட்டத்திற்கு 2008இல் பாராளுமன்றத்தால் அனுமதியளிக்கப்படவிருப்பதுடன் இவை கொடுகடன் தகவல் பணியகத்தின் சேவைகளை ஏனைய கடன் வழங்குனர்கள், காப்புறுதியாளர்கள், விரிவாக்குவதற்கும், பொதுவசதிகள் வழங்குனர்கள் மற்றும் அரச முகவர்கள் போன்றோர்க்கு பெறுமதிசேர் சேவைகளுக்கான விதிகளுக்காகவும் மற்றும் கடன் புள்ளியிடல்கள் மற்றும் மோசடிகளை தடுத்தல் போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளையும் இயலச் செய்கிறது. கொடுகடன் தகவல் பணியகமானது திரும்பல் காசோலைகள் பற்றிய தரவுகளை சேகரிப்பதற்கும் பிரேரிக்கப்பட்ட பிணையமாக்கல் (பாதுகாக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்) சட்டத்தின்கீழ் பாதுகாக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கான பதிவு அலுவலகமாகவும் செயற்படவும் அதிகாரமளிக்கப் பட்டுள்ளது.